KURIKULUM STANDARD KELAS PERALIHAN

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

## KELAS PERALIHAN
## புகுமுக வகுப்பு


**PENULIS** / ஆசிரியர்கள்

CHANDRAN VERAMUTTHU
சந்திரன் வீரமுத்து

SARASWATHY KANNAN
சரஸ்வதி கண்ணன்

**EDITOR** / பதிப்பாசிரியர்

RAJENDRAM PERUMAL
இராஜேந்திரம் பெருமாள்

**PEREKA BENTUK** / வடிவமைப்பாளர்கள்

AMOS RAJA
ஆமோஸ் ராஜா

APPUTHI MURUGAYA
அப்பூதி முருகையா

**ILUSTRATOR** / ஓவியர்கள்

AZRUL HELMI BIN ABD. WAHAB
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்

MASEH BIN SUPIAN
மாசே பின் சுபியான்



Multi Educational Book Enterprise
2019

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku : 0085

KPM2019 ISBN 978-967-2046-41-7
Cetakan Pertama 2019

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf**

**Multi Educational Book Enterprise**
Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:12/11 poin

**Dicetak oleh :**

Aslita Sdn. Bhd. (146102-U)
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park,
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Kementerian Pelancongan dan Kesenian Malaysia.
- Kementerian Kesihatan Malaysia.
- Kementerian Belia dan Sukan.
- Pusat Serinti Bukit Kurau, Perak.
- SMK Raja Mahadi, Klang, Selangor.
- SMK Dengkil, Selangor.
- Akhbar Harian Makkal Osai.
- Ahsni Beauty Care & Hair Saloon.
- Dakshra Fine Arts, Subang Jaya, Selangor.

Ribuan terima kasih juga diucapkan kepada pihak yang telah memberi sumbangan dalam menjayakan penerbitan buku teks ini. Pelbagai inisiatif telah diambil oleh pihak penerbit untuk mengesan semua pemilik hak cipta bahan dalam buku teks ini. Walau bagaimanapun, pihak penerbit mengalu-alukan jasa baik pihak berkenaan untuk membenarkan kami menerbit semula bahan itu. Diharapkan maklumat pihak berkenaan dapat kami peroleh supaya dapat merakamkan ucapan penghargaan dalam edisi yang akan datang.







# உள்ளடக்கம்


முன்னுரை iv
மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள் v
சிந்தனை வரைபடம் vi
தொகுதி படர்ச்சி vii

தொகுதிகள்

1 கலையும் இசையும் 1
2 நெறியுடன் வாழ்வோம் 9
3 இலக்கியம் அறிவோம் 18
4 போதைப் பொருள் 30
5 ஆரோக்கியமும் நாமும் 40
6 பாதுகாப்பு 50
7 குடியியல் போற்றுவோம் 60
8 சமூக மேம்பாடு 71
9 அறிவியல் யுகம் 80
10 விளையாடி மகிழ்வோம் 90
11 மொழியைக் காப்போம் 100
12 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் 111
13 வரலாறும் நாமும் 120
14 சுற்றுச் சூழலைக் காப்போம் 128
15 பொருளாதாரமும் பயனீட்டாளரும் 138
16 போக்குவரத்தும் நவீன சாதனங்களும் 148
17 சமயமும் நாமும் 157
18 பண்பாட்டைப் போற்றுவோம் 166
19 கடமையும் பொறுப்பும் 176
20 மகிழியும் நற்பண்பும் 186
21 சீர்மிகு சிந்தனை 195
22 நாடும் நன்மக்களும் 202

அகர நிரல் குறிப்பு 213
துணை நூல் பட்டியல் 214



KPM

# முன்னுரை

தமிழ் என்றால் அழகு. தமிழ் என்றால் இனிமை. தமிழ் என்றால் இளமை. தமிழைத் தீந்தமிழ், தேன் தமிழ் என்ற இனிமைச் சொற்களால் அழைப்பதன் வழி இதனை நாம் உணரலாம். உலகின் தொன்மையான மொழி, நம் தமிழ்மொழி. இத்தகைய உயர்வு கொண்ட தமிழ்மொழியை நாம் அனைவரும் பேணிக் காத்திடல் வேண்டும்.

**“தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக்குப் புவிமேலே”**

என்று தமிழ்மொழியைத் தமதுயிராய் நினைத்துப் பாடியுள்ளார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். பல சிறப்புகளை உள்ளடக்கிய தமிழ்மொழியை மாணவர்களிடத்தே வேரூன்றச் செய்வதில் தமிழ்மொழிப் பாடநூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

**“இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது”**

என்று தமிழ்மொழியின் எல்லையற்ற இன்பத்தைக் கூறுகின்றார் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். நமது பாரம்பரியங்கள், இலக்கண இலக்கியங்கள், புராணங்கள், வாழ்வியல் அடையாளங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கத் தமிழ்மொழிப் பாடநூல்கள் வழிவகுக்கின்றன. மேலும் அன்பு, நேர்மை, மனித நேயம் ஆகிய உன்னதக் கூறுகளையும் இனிதே எடுத்துரைக்கின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியை மாணவர்கள் இன்புறக் கற்று நம் மொழிக்கு உயிர்கொடுப்பதைக் கடமையெனக் கொள்ள வேண்டும். 22 தொகுதிகள் கொண்ட இப்பாடநூல் காலச் சூழலுக்கு ஏற்ப சிறப்பான முறையிலும் இலகுவான முறையிலும் படைக்கப்பட்டுள்ளது. கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகள் கருப்பொருளுடன் இணைந்து வடிவம் பெற்றுள்ளன. மேலும், செய்யுள் மொழியணி, இலக்கணம் ஆகிய கூறுகள் மாணவர்கள் தங்களின் மொழி வளத்தை வளர்க்கும் வகையில் தெளிவுற இப்பாடநூலில் வலம் வருகின்றன. உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகள், வாசித்து மகிழும் பகுதிகள் ஆகியன, மாணவர்கள் மனத்தைக் கவரும் வகையில் உள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கற்றல் நடவடிக்கைகள் சிறப்பாகவும், மகிழ்வூட்டும் வகையிலும் அமையவும் இணையத் தள நோக்குக் குறியீடுகளான QR மற்றும் AR பயன்பாடுகளும் சிறப்புச் சேர்க்கின்றன.

நல்லாசான்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து மாணவர்களின் கல்வியைச் செவ்வனே வழிநடத்த முற்படுவோம். இறுதியாக, எங்களின் எண்ணங்களை எழுத்து வடிவங்களாக உருவாக்கி சிறந்ததொரு பாடநூலாக உருவாக்கம் பெற ஆதரவு நல்கிய மலேசியக் கல்வி அமைச்சின் கருவள மற்றும் கல்வி தொழில்நுட்பப் பிரிவிற்கு எங்களின் உளமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

**“உண்மை தெரியும் உலகம் தெரியும் படிப்பாலே - நம்
உடலும் வளரும் தொழிலும் வளரும் உழைப்பாலே.”**

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

நன்றி,
ஆசிரியர்கள்

# மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள்

**தொகுதி** – கருப்பொருளின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றது.

**இடுபணி** – பாடப்பகுதியையொட்டிய தொடர் நடவடிக்கைகள்.

**பாடம்** – கற்றல் கற்பித்தலுக்கான கருத்தை உள்ளடக்கியது.

**வளப்படுத்துதல்** – கற்றல் திறன்களை அடைந்த மாணவர்களுக்கான வளப்படுத்தும் பயிற்சிப் பகுதி.

**கேட்டல் பேச்சு** – கேட்டல் திறனும் பேச்சுத் திறனும் அமைந்திருத்தல்.

**குறைநீக்கல்** – கற்றல் திறனை முழுமையாக அடைய மேற்கொள்ளும் பயிற்சிப் பகுதி.

**வாசிப்பு** – வாசிப்புக் கூறுகளை உள்ளடக்கி இருத்தல்.

**உயர்நிலைச் சிந்தனை** – அறிவுத் திறன் தொடர்பான உயர்நிலைச் சிந்தனை வினாக்களை உள்ளடக்கியது.

**எழுத்து** – எழுத்துத் திறனை உள்ளடக்கி இருத்தல்.

**அறிந்து கொள்க** – பாடப்பகுதிக்குத் தொடர்புடைய பிற செய்திகளை அறிய வாய்ப்பு ஏற்படுத்துதல்.

**செய்யுளும் மொழியணியும்** – செய்யுள் பகுதிகளும் மொழியணிப் பகுதிகளும் உள்ளடக்கம் பெற்றது.

## இணையத் தளம் QR நோக்குக் குறியீடு

App Store | Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணைபுரிகிறது.

## ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

App Store | Google play


முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

**இங்கு நோக்குக**

AR நோக்குக் குறியீடு


# சிந்தனை வரைபடம்

1




வட்ட வரைபடம்
(சூழலுக்கு ஏற்ப வரையறுத்தல்)

2




குமிழி வரைபடம்
(சொல் சொற்றொடர்களைக் கொண்டு விவரித்தல்)

3




பல்நிலை நிரலொழுங்கு வரைபடம்
(காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்தல்)

4




இரட்டிப்புக் குமிழி வரைபடம்
(ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்)

5




இணைப்பு வரைபடம்
(முழுமைப் பொருளையும் பகுதியையும் பகுப்பாய்வு செய்தல்)

6




நிரலொழுங்கு வரைபடம்
(கருத்துகளை நிரல்படுத்துதல்)

7



மர வரைபடம்
(வகைப்படுத்துதல்; குழுமப்படுத்துதல்)

8



பால வரைபடம்
(ஒற்றுமையைக் காணுதல்)

## தொகுதி படர்ச்சி

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 1**<br>**கலையும் இசையும்** | 1. பரதக் கலை<br>2. கலைகள் அறிவோம்<br>3. இசை இன்பம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.1<br>2.1.1<br>3.1.2<br>4.1.1 | திருக்குறள் (392) | | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 2**<br>**நெறியுடன் வாழ்வோம்** | 1. தன்முனைப்புப் பயிற்சி<br>2. தலைமைத்துவப் பண்புகள்<br>3. சுய முயற்சி<br>4. இலக்கணம் | 1.1.2<br>2.1.1<br>3.1.2<br>5.1.1 | இலக்கணம்<br>- சுட்டெழுத்து | குமிழி வரைபடம் | |
| **தொகுதி 3**<br>**இலக்கியம் அறிவோம்** | 1. இரட்டைக் காப்பியம்<br>2. அவரவர் திறமை<br>3. வள்ளல் பாரி<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.3<br>2.1.1<br>3.1.2<br>4.2.1 | நாலடியார் | | |
| **தொகுதி 4**<br>**போதைப் பொருள்** | 1. மறுவாழ்வு மையம்<br>2. புகை பிடிக்காதீர்!<br>3. விழிப்புணர்வு<br>4. இலக்கணம் | 1.2.1<br>2.2.2<br>3.3.1<br>5.2.1 | இலக்கணம்<br>- வேற்றுமை | பட்டைக் குறிவரைவு<br>வட்டக் குறிவரைவு | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 5**<br>**ஆரோக்கியமும் நாமும்** | 1. உடல் நலம் பேணுவோம்<br>2. உணவின் மகிமை<br>3. சிறப்புத் தரும் கீரைகள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.2<br>2.2.3<br>3.1.1<br>4.3.1 | இணைமொழி | | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 6**<br>**பாதுகாப்பு** | 1. எங்கும் பாதுகாப்பு<br>2. பாதுகாப்பாய் வாழ்வோம்<br>3. அச்சமின்றி வாழ்வோம்<br>4. இலக்கணம் | 1.2.3<br>2.1.1<br>3.4.1<br>5.1.2 | இலக்கணம்<br>- வினாவெழுத்து | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 3 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 7**<br>**குடியியல் போற்றுவோம்** | 1. சமாதானம் தேவை<br>2. சுய கட்டுப்பாடு<br>3. கடமை அறிக<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.1<br>2.3.1<br>3.1.1<br>4.1.1 | திருக்குறள் (420) | வட்டக் குறிவரைவு | பாடம் 1: இடுபணி 2<br>பாடம் 2: இடுபணி 2 |
| **தொகுதி 8**<br>**சமூக மேம்பாடு** | 1. உன்னால் முடியும் தம்பி<br>2. பிள்ளை வளர்ப்பு<br>3. மனித நேயம்<br>4. இலக்கணம் | 1.3.2<br>2.1.1<br>3.3.1<br>5.4.1 | இலக்கணம்<br>- வலிமிகும் இடங்கள் | குமிழி வரைபடம்<br>வட்டக் குறிவரைவு | பாடம் 1: இடுபணி 2 |
| **தொகுதி 9**<br>**அறிவியல் யுகம்** | 1. இளம் விஞ்ஞானி<br>2. அறிவியல் வளர்ச்சி<br>3. இயந்திர மனிதன்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.3<br>2.3.2<br>3.4.2<br>4.4.1 | உவமைத் தொடர் | மர வரைபடம் | |
| **தொகுதி 10**<br>**விளையாடி மகிழ்வோம்** | 1. ஹாக்கி விளையாட்டு<br>2. விளையாட்டுப் பிரிவுகள்<br>3. பாரம்பரிய விளையாட்டுப் போட்டி<br>4. இலக்கணம் | 1.4.1<br>2.4.2<br>3.2.1<br>5.2.1 | இலக்கணம்<br>- வேற்றுமை | மர வரைபடம்<br>குமிழி வரைபடம் | |
| **தொகுதி 11**<br>**மொழியைக் காப்போம்** | 1. சிறப்பை அறிவோம்<br>2. தொடர்பு சாதனம்<br>3. தமிழ்ப்பள்ளியும் தமிழ்க் கல்வியும்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.1<br>2.4.1<br>3.4.5<br>4.2.1 | மூதுரை | | பாடம் 3: இடுபணி 3 |
| **தொகுதி 12**<br>**தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்** | 1. கதிர் வீச்சு<br>2. முகநூல்<br>3. சமூக வலைத்தளங்கள்<br>4. இலக்கணம் | 1.5.2<br>2.4.4<br>3.4.6<br>5.3.1<br>5.3.2 | இலக்கணம்<br>- திரிதல் விகாரம் | மர வரைபடம் | பாடம் 2: இடுபணி 2 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 13**<br>**வரலாறும் நாமும்** | 1. தமிழர்களின் தொழில்கள்<br>2. தனித்துவ விளையாட்டுகள்<br>3. கல்விமுறை<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.6.1<br>2.4.2<br>3.2.2<br>4.1.1 | திருக்குறள் (596) | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 14**<br>**சுற்றுச் சூழலைக் காப்போம்** | 1. விளைவுகள் அறிவோம்<br>2. வெள்ளம்<br>3. பசுமையைப் போற்றுவோம்<br>4. இலக்கணம் | 1.5.2<br>2.3.2<br>3.4.6<br>5.4.2<br>5.4.3<br>5.4.4 | இலக்கணம்<br>- வலிமிகுதல் | மர வரைபடம் | |
| **தொகுதி 15**<br>**பொருளாதாரமும் பயனீட்டாளரும்** | 1. விடை காண்போம்<br>2. வேலை வாய்ப்பு<br>3. அழகு நிலையம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.1<br>2.2.1<br>3.4.3<br>4.5.1 | மரபுத்தொடர் | குமிழி வரைபடம் | |
| **தொகுதி 16**<br>**போக்குவரத்தும் நவீன சாதனங்களும்** | 1. நவீனத்தை நோக்கி<br>2. கற்றல் உலகம்<br>3. நன்மைகள் அறிவோம்<br>4. இலக்கணம் | 1.2.1<br>2.4.4<br>3.4.3<br>5.5.1<br>5.5.2 | இலக்கணம்<br>- வலிமிகாமை | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 3 |
| **தொகுதி 17**<br>**சமயமும் நாமும்** | 1. மனிதம்<br>2. இறைமொழி<br>3. மௌன விரதம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.1<br>2.3.1<br>3.3.1<br>4.1.1 | திருக்குறள் (505) | | |
| **தொகுதி 18**<br>**பண்பாட்டைப் போற்றுவோம்** | 1. நமது பாரம்பரியம்<br>2. கொடையும் பண்பாடும்<br>3. தமிழர் பாரம்பரியம்<br>4. இலக்கணம் | 1.6.1<br>2.4.3<br>3.2.2<br>5.3.3 | இலக்கணம்<br>- விகாரப் புணர்ச்சி | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2<br>இடுபணி 3 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 19**<br><br>**கடமையும் பொறுப்பும்** | 1. உணர்வோம் மதிப்போம்<br>2. இனிமைச் செம்மொழி<br>3. உயர்ந்த நோக்கம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.3<br>2.4.1<br>3.4.3<br>4.6.1 | பழமொழி | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 20**<br><br>**மகிழ்வும் நற்பண்பும்** | 1. மனம் மகிழ்வோம்<br>2. மூத்தோரின் ஆசி<br>3. நமது அடையாளம்<br>4. இலக்கணம் | 1.5.1<br>2.4.3<br>3.4.5<br>5.5.3 | இலக்கணம்<br><br>- வலிமிகாமை | இரட்டிப்புக் குமிழி வரைபடம்<br><br>குமிழி வரைபடம் | |
| **தொகுதி 21**<br><br>**சீர்மிகு சிந்தனை** | 1. அற்புதக் கருவி<br>2. கணினி விளையாட்டு<br>3. பறக்கும் தட்டு<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.3<br>2.1.1<br>3.4.4<br>4.1.1 | திருக்குறள் (786) | | |
| **தொகுதி 22**<br><br>**நாடும் நன்மக்களும்** | 1. தேசப்பற்று<br>2. நாமும் முன்னேறுவோம்<br>3. எதிர்பார்ப்பு<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.2<br>2.2.2<br>3.2.1<br>4.2.1 | நாலடியார்<br><br>மூதுரை | வட்டக் குறிவரைவு | |

# தொகுதி 1 கலையும் இசையும்

## பாடம் 1 பரதக் கலை

**கலந்துரையாடுக.**



உடல் எலும்புகளை மேலும் வலுவடையச் செய்யும். எலும்பு தொடர்பான நோய்களைத் தவிர்க்கும்.



நடனம் ஆடுவதால் உடலும் உள்ளமும் நலம் பெறும்.



உணர்வுகளை வெளிப்படுத்த முத்திரைகளைப் பயன்படுத்துவர்.

மன மகிழ்ச்சியைத் தரும். மனத்தைக் கவலைகள் தாக்காமல் களிப்புடன் வைத்துக்கொள்ள இயலும்.



பாவம், இராகம், தாளம் என்ற மூன்றையும் குறித்துச் சொல்லப்படுவது பரதம்.

தமிழுக்கும் மனித வாழ்வுக்கும் பெருமை சேர்க்கும் கலை

1.1.1 • லகர, ழகர, ளகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்திச் சரியான உச்சரிப்புடன் பேசுவர்.

## இடுபணி 1

**லகர, ழகர, ளகர எழுத்துகளடங்கிய சொற்களைச் சரியான உச்சரிப்புடன் கூறுக.**

## இடுபணி 2

**பின்வரும் லகர, ழகர, ளகரச் சொற்களை இணையருடன் சேர்ந்து சூழலில் பயன்படுத்திப் பேசுக.**

அ. கிலி - கிழி - கிளி
ஆ. தலை - தழை - தளை
இ. உலவு - உழவு - உளவு
ஈ. ஒலி - ஒழி - ஒளி
உ. தாலி - தாழி - தாளி
ஊ. அலகு - அழகு - அளகு

## இடுபணி 3

**லகர, ழகர, ளகரச் சொற்களின் பொருள் வேறுபாட்டை அறிந்து கூறுக.**

அ. வளி - வழி
ஆ. கிலி - கிளி
இ. பலம் - பழம்
ஈ. குழி - குளி
உ. குழம்பு - குளம்பு
ஊ. அலை - அழை
எ. வேலை - வேளை
ஏ. விலா - விழா
ஐ. தவலை - தவளை
ஒ. வலம் - வளம்

## குறைநீக்கல்

**வாக்கியங்களில் காணும் லகர, ழகர, ளகரச் சொற்களை அடையாளங்கண்டு கூறுக.**

1. மகளின் தேர்ச்சியறிக்கையைப் பார்த்தவுடன் அம்மாவின் விழிகளில் கண்ணீர்த் துளிகள் பெருக்கெடுத்தன.
2. கோவிலில் இறைவழிபாட்டுக்குப் பிறகு பக்தர்கள் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர்.
3. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் துயிலெழுந்தவுடன் யோகப் பயிற்சியை மேற்கொள்வது உடலாரோக்கியத்திற்கு நல்லது.
4. நேற்று மதிய உணவின் பொழுது தருமன் வாழையிலையில் சாதத்தைப் போட்டு வாளைமீன் குழம்பை ஊற்றிச் சாப்பிட்டான்.
5. மணிமொழி பொன் இழைகள் நிறைந்த பட்டுச் சேலையை அணிந்து விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் கவர்ந்தாள்.



# பாடம் 2 கலைகள் அறிவோம்



## வாசித்து அறிக.

அழகுக் கலைகள் ஐந்து எனக் கூறப்படுகின்றன. அவை கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, காவியக் கலை என்பனவாகும்.



அக்காலத் தமிழர்களின் ஆற்றலை இக்கலைகளின் நுணுக்கங்களின் மூலம் காணலாம். கம்போஜம் என்ற பெயரில் விளங்கிய கம்போடியாவில் கி.பி 1219 முதல் 1811 வரை முதலாம் ஜெயவர்மனின் ஆட்சியில் கட்டப்பட்ட பல ஆலயங்கள் உள்ளன. அவை தமிழரின் கட்டட, சிற்பக் கலைச் சிறப்பை இன்றும் அந்நாட்டில் எடுத்துக் காட்டி வருகின்றன.



ஜெயவர்மனின் ஏழு சந்ததிகள் தொடர்ந்து நடத்திய ஆட்சியின் போது ‘அங்கோர் வாட்’ ஆலயங்கள் கட்டப்பட்டு வந்தன. இக்கோவிலின் சிற்பக் கலை ஓர் அபூர்வ கலையாகவே தோன்றுகிறது. ‘கல்லிலே கலை வண்ணம் கண்டான்’ என்றும் சிறப்பாகக் கூறுவார்கள். தமிழரின் சிற்பக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் அக்காலத் தமிழர்களால் எழுப்பப்பட்ட ஆலயங்களும் கட்டடங்களுமே முத்தாய்ப்பு எனவும் கூறலாம்.



தமிழர்கள் இசைக் கலையிலும் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர் என்பது நாம் மறுக்க முடியாத உண்மையாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பதும் அவற்றுள் இசைக்கலை அற்புத ஆற்றல் மிக்க இன்பக்கலை என்றுதான் கூற வேண்டும். அளவிடற்கரிய இசைக்கலையால் இயற்கையே அசந்து போனது என்பதனைப் பல இலக்கிய நூல்கள் எடுத்துரைக்கின்றன. வண்டுகளின் ரீங்கார ஓசை கேட்டுப் பூக்கள் மலர்ந்தன எனக் குறுந்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இசையின் ஆற்றலால் மிருகங்களும் கொடூரக் குணங்களை மறந்து இசை மீட்போரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டன என்பதைச் சீவக சிந்தாமணி எனும் இலக்கிய நூல் கூறுகின்றது. தினைக்கதிர்களை அழித்துக் கொண்டு நின்ற யானை ஒன்று குறிஞ்சிப் பண் இசையைக் கேட்டு ஆழ்ந்து விட்டதை அகநானூற்றுப் பாடல் கூறுகின்றது. இவ்வாறு பல வழிகளில் இசைக்கலையில் தமிழர்கள் புகழ்பெற்றிருந்தனர்.

காவியக் கலையைப் பற்றிக் கூறுவோமானால் ஐந்து நுண்கலைகளில் மிகவும் சிறந்தது காவியக் கலை என்போம். கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை ஆகியவை கண்களால் கண்டு இன்புறத் தக்கவை. இசைக் கலை காதால் கேட்டு இரசிப்பது. ஆனால், காவியக் கலை அறிவினால் உணர்ந்து வயப்படுத்துவது. அதனால்தான், இக்கலையை அழகுக் கலைகளில் சிறந்தது என்பர்.

என்னை நுணுகுக

2.1.1 • வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. அழகுக் கலைகள் எத்தனை? அவை யாவை?
2. சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டு எது? ஏன்?
3. இசையின் அற்புதங்களாக விளக்கிக் கூறப்பட்டவை யாவை?
4. காவியக் கலை எப்படி வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது?
5. நீ அறிந்த வேறு சில கலைகளைக் கூறுக.

## இடுபணி 3

**பத்திகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**



யோகக் கலை என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்றதொரு கலையாகும். யோகம் என்றால் அலையும் மனத்தை நேர்வழிப்படுத்தும் செயல் என்று பொருளாகும். இக்கலையானது நமது உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட நேரம் இருக்கச் செய்யும் சிறந்த பயிற்சியாகும். யோகாசனம் செய்வதால், உடலின் உள்ளுறுப்புகள் சுறுசுறுப்பாகவும் சீராகவும் இயங்கி ஆரோக்கியம் பெறும். யோகக் கலையின் மூலம் மூச்சுப் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். இதனால், சுவாசக் கோளாறுகளைத் தவிர்க்கலாம். மேலும், இளமையான தோற்றம், தன்னம்பிக்கை போன்றவற்றைப் பெறலாம். இக்கலையின் மூலம் நம் மனத்தில் தோன்றும் எதிர்மறை எண்ணங்களையும் தவிர்க்கலாம். நமது உடலை ஆரோக்கியத்துடனும் கட்டுக்கோப்புடனும் வைத்துக் கொள்ள யோகக் கலையே சிறந்தது.



அந்நாளில் கடைத்தெருக்களை இரண்டு வகையாகப் பிரித்திருந்தனர். நாளங்காடி, அல்லங்காடி என்று அழைத்தனர். நாளங்காடி என்பது பகல் நேரக் கடைகளாகும். ‘அல்’ என்பது இரவு என்று பொருள்படும். கடைகளில் விற்கப்படும் பொருள்களின் உருவத்தினைக் கொடியில் வரைந்து, அவற்றை அக்கடையின் மீது பறக்கவிட்டிருந்தனர். இவர்களை அங்காடி வணிகர்கள் என்று அழைத்தனர். சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இயங்கிய நாளங்காடி, அல்லங்காடிகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சிறு வணிகர்கள் பணியாரம், பூ, மாலை, வெற்றிலைப் பாக்கு, சுண்ணாம்பு எனப் பல்வேறு பண்டங்களையும் கையில் ஏந்தி விற்பனை செய்துள்ளனர்.

# பாடம் 3 இசை இன்பம்

## வாக்கியம் அமைத்திடுக.







**இசை** என்பது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அழகு ஒலியாகும். இசை என்ற சொல்லுக்கு இசைய வைத்தல் அல்லது சம்மதிக்க வைத்தல் என்றும் பொருளுண்டு.

மனிதர்களையும், மற்ற உயிரினங்களையும் **பணி**ய வைக்கின்ற ஓர் அருமையான சாதனம் இசையே என்றால் அது மிகையாகாது. இசையை அற்புதக் **கலை** எனவும் கூறுவர். செவிக்குத் தெவிட்டாத இன்பம் தரும் இசையை அனைவரும் **நாடு**வது இயல்புதான்.

பண்டைய காலத்து மக்களும் இசையை இசைத்து வாழ்ந்துள்ளனர் என்பது பல தொல்பொருளியல் ஆய்வுகள் **மூலம்** அறியப்பட்டுள்ளன. அக்காலத்தில் மனிதர்கள் எலும்புகளில் துளைகளையிட்டுப் புல்லாங்குழல் போன்ற இசைக் கருவியை உருவாக்கியுள்ளனர். இதற்குச் **சான்றாக**, ஏழு துளைகள் கொண்ட புல்லாங்குழல், நரம்புகள் கொண்ட சில கருவிகள் தொல்பொருள் ஆய்வில் பெறப்பட்டுள்ளன.

இனிமையான ஒலிகளைப் பற்றிய இசையை வடமொழியில் நாதம் என அழைக்கின்றனர்.

மூலம்: இணையத்தளம் (சில மாற்றங்களுடன்)

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியில் வண்ணத்திலான சொற்களுக்குப் பொருள் காண்க.**

3.1.2 பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 2

**வாக்கியங்களை வாசித்துச் சொற்களின் வேறுபாடு அறிக.**


புலி


புளி

காட்டில் வேட்டையாடச் சென்ற வேடன் **புலி**யைக் கண்டு மிரண்டு போனான்.

அம்மா மீன் கறியில் **புளி**யைக் கரைத்து ஊற்றினார்.


மலை


மழை

இமய **மலை**யின் உச்சியை அடைந்து வெற்றி கண்ட இளைஞனை அனைவரும் பாராட்டினர்.

கனத்த **மழை**யின் காரணமாக அப்பகுதியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.


குரல்



குறள்

பாடல் திறன் போட்டியில் பாடிய சிறுவர்களின் இனிமையான **குரலை**க் கேட்டு மெய் மறந்தேன்.

சித்திரப்பாவை தான் மனனம் செய்திருந்த அனைத்துக் **குறள்**களையும் சிறப்பாக ஒப்புவித்துப் பரிசு பெற்றாள்.

## இடுபணி 3

**பின்வரும் சொற்கள் உணர்த்தும் பொருள் வேறுபாடு அறிந்து அவற்றைப் பொருள் விளங்க வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.**

எ.கா:

பார் → காண், உலகம்

அ. அம்மா தம் மகளிடம் மாப்பிள்ளையைப் '**பார்**' என்று சொன்னவுடன் மகள் வெட்கப்பட்டாள்.

ஆ. இந்தப் '**பார்**' அமைதி பெற வேண்டுமானால் முதலில் நம் மனத்தில் அமைதி ஏற்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. திங்கள் | | 5. மதி | |
| 2. ஆறு | | 6. முடி | |
| 3. பால் | | 7. அன்னம் | |
| 4. காய் | | 8. ஆடு | |

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்


## திருக்குறளையும் பொருளையும் அறிக.




ஒரு மனிதனுக்கு எண்ணும் எழுத்தும் ஒளி கொடுக்கும் கண்களுக்கு ஒப்பாகும். எண்ணையும் எழுத்தையும் அவசியம் கற்றிருத்தல் வேண்டும்.



நாம் இரண்டு கண்களைப் பெற்றிருக்கின்றோம். ஒரு கண்ணை எழுத்து என்றும் மற்றொரு கண்ணை எண் என்றும் கருத வேண்டும்.



எண்ணையும் எழுத்தையும் இருவகைக் கலைகளாகத் தமிழர்கள் கருதுகின்றனர். இரண்டையும் கற்றுத் தேர்ந்து போற்றி வளர்ப்பது நமது கடமையாகும்.



நாம் கணிதக் கலையையும் எழுத்துக் கலையையும் கற்று வைத்திருப்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது.

### திருக்குறளும் பொருளும்

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)**

எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

**கருத்து :**
எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன.

### இடுபணி 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

4.1.1 • புகுமுக வகுப்பிற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## இடுபணி 2

**திருக்குறளுக்கு ஏற்ற பொருத்தமான விளக்கத்திற்குச் சரி (✓) என்று அடையாளமிடுக.**

1. எண்களும் கணிதமும் நமது வாழ்வின் இரண்டு கண்கள் போன்றவை.
2. எழுத்தையும் கணிதத்தையும் கற்றுத் தேற மறக்கக்கூடாது.
3. எண்ணையும் எழுத்தையும் இரண்டு கண்கள் போல மதிக்க வேண்டும்.
4. நம் வாழ்வில் எழுத்தும் கணக்கும் இன்றியமையாதவை என்பதை நாம் மறந்திடலாகாது.
5. எண்களும் எழுத்துகளும் வாழ்க்கையின் இரு முக்கியமான கலைகளாகும்.
6. எண்ணை மறந்தாலும் எழுத்தைக் கண் போலக் கருத வேண்டும்.

## இடுபணி 3

**திருக்குறளுக்கு ஏற்ற கருத்தை எழுதுக.**

1. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு

கருத்து ______________________________

2. திருக்குறளையும் அதன் பொருளையும் புரிந்துகொண்டு வகுப்பறையில் ஒரு நாடகம் நடித்துக் காட்டுக.

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியில் விடுபட்ட சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| கணிதம் | புலவர் | வாழும் |
| மொழி | கலை | மேதை |
| மாணவன் | வாழ்க்கை | கண் |
| | எண்ணையும் எழுத்தையும் | |

செழியன் புகுமுக வகுப்பில் பயிலும் __________. அவன் __________, __________ ஆகிய பாடங்களில் சிறந்து விளங்கினான். அவனைப் பொருத்தமட்டில் கணிதமும் மொழியும் தன் __________ சிறப்பாக அமையத் துணைபுரியும். அவனுடைய தந்தை ஒரு கணித __________. அவனுடைய தாயார் தமிழ்ப் __________. செழியனது பெற்றோர் __________ வாழ்க்கையின் அரிய __________ யாகப் போற்றி வருகின்றனர். செழியன் தன் பெற்றோரின் அறிவுரைக்கேற்ப எண், எழுத்து ஆகியவற்றைத் தனது இரு __________ களாகக் கருதிக் கற்று வருகிறான். எண்ணும் எழுத்தும் __________ மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன.

## பாடம் 1 தன்முனைப்புப் பயிற்சி

**கலந்துரையாடி அறிக.**

# கல்வித் தன்முனைப்புப் பயிற்சி

*பிதி 3 சோதனையில் சிறப்புத் தேர்ச்சி பெற மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர்*



**நாள்: 25.01.20□□ (சனிக்கிழமை)**
**இடம்: நகர மண்டபம், கிள்ளான்.**
**நேரம்: காலை மணி 8.00 முதல் மாலை மணி 6.00 வரை**
**நுழைவுக் கட்டணம்: RM30 (சிற்றுண்டி வழங்கப்படும்)**
**பேச்சாளர்கள்: திரு. ச.வீரபத்திரன், திருமதி த.நேசமலர்**

என்னை நுணுகுக

சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியில் தன்முனைப்புத் தொடர்பான படச்சுருள் காண்பிக்கப்படும். மேலும், கருத்துரைப் பணிமனையும் இடம்பெறும்.

திரு. குணசேகரன் - 01□2750 673
kcks1171@gmail.com

**எல்லாரும் முன்னேறுவோம்!**
**எல்லாரையும் முன்னேற்றுவோம்!**

1.1.2 ணகர, நகர, னகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்திச் சரியான உச்சரிப்புடன் பேசுவர்.

## இடுபணி 1

**மேற்காணும் விளம்பரத்திலுள்ள ணகர, நகர, னகர எழுத்துகளடங்கிய சொற்களை அடையாளங்கண்டு சரியான உச்சரிப்புடன் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

அ. இவ்விளம்பரம் ஏன் தரப்பட்டுள்ளது?

ஆ. எதற்காக இப்பயிற்சி வழங்கப்படுகிறது?

இ. யாரெல்லாம் இப்பயிற்சியில் கலந்து பயன்பெறலாம்?

ஈ. இப்பயிற்சி எவ்வாறு நடத்தப்படவுள்ளது?

உ. இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்?

## இடுபணி 3

**பின்வரும் ணகர, நகர, னகர எழுத்துகளடங்கிய சொற்களை வாக்கியம் அமைத்துக் கூறுக.**

எடுத்துக்காட்டு:

**சுனை** - மலை நீரூற்று

- மலைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் **சுனை** நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.

**சுணை** - இலைமுள், காய்முள்

- கத்தரிச் செடியில் உள்ள **சுணை** பட்டதால் தம்பியின் கைகளில் அரிப்பு ஏற்பட்டது.

அ. மனம் - உள்ளம்
மணம் - வாசம்

ஆ. பனி - பனித்துளிகள்
பணி - வேலை

இ. கனி - பழம்
கணி - கணித்துக் கூறுதல்

ஈ. ஆனி - மாதம்
ஆணி - இரும்பால் ஆன பொருள்

உ. வெந்நீர் - கொதி நீர்
வெண்ணீர் - வெண்மை நிறத்திலான நீர்

ஊ. முன்னாள் - முன்பொரு நாள்
முந்நாள் - மூன்று நாள்

# பாடம் 2 தலைமைத்துவப் பண்புகள்

## வாசித்து அறிக.



மகாத்மா காந்தி

நீங்கள் மாணவர் தலைவரா? அப்படியென்றால் உங்களிடம் இருக்க வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் யாவை என்பதை அறிவீர்களா? இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் அல்லவா! எனவே, தலைமைத்துவப் பண்பைப் பற்றி **அனைவரும்** அறிந்திருப்பது அவசியம்.



சர் சி.வி. இராமன்

தலைவர் என்பவர் **தன்னலம்** கருதாமல் பொது நலத்துடன் செயல்பட வேண்டும். உண்மை, நேர்மை, வாய்மை போன்ற நற்பண்புகளுடன் மிளிர வேண்டும். மேலும், **சாதுரியமான** பேச்சுத்திறனும் தூர நோக்குச் சிந்தனையும் இருக்க வேண்டும். தொடர்ந்து, விட்டுக் கொடுத்துப் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும்.



வ.உ. சிதம்பரனார்

நட்புரிமையுடன் அனைவரையும் அரவணைத்து அன்பு பாராட்டுவது தலைவரின் தலையாய கடமையாகும். அனைவரையும் சகோதரர்களாக **எண்ணி** வழிநடத்துவதோடு அவ்வப்போது ஊக்குவிப்பும் பாராட்டும் **நல்க** வேண்டும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை போன்ற பண்புகள் இன்றியமையாதவையாகும்.

தலைவர் தமது **பொறுப்பை** அன்புடனும் பண்புடனும் செயலாற்ற வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட **இலக்கை** நோக்கித் துணிவுடன் பயணிக்க வேண்டும். சுயவொழுக்கமும் ஆளுமைத் திறனும் கொண்டுள்ள தலைமைத்துவத்தை அனைவரும் விரும்புவர். எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாகத் **திகழ** முயலுவோம். எல்லாரும் வாழ்வோம்! எல்லாருக்காகவும் வாழ்வோம்!

என்னை நுணுகுக

### இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**


### இடுபணி 2

**வண்ணத்திலான சொற்களுக்குப் பொருளை அகராதியின் துணை கொண்டு அறிந்து கூறுக; எழுதுக.**

2.1.1 வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.


## இடுபணி 3

**தலைமைத்துவப் பண்புகளைக் குமிழிச் சிந்தனை வரைபடத்தில் எழுதி வாசித்திடுக.**




## வளப்படுத்துதல்

**பின்வரும் கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக; பின்னர், இக்கதை உணர்த்தும் நீதியை விளக்குக.**



இரு நண்பர்கள் ஒரு காட்டு வழியே சென்றனர். பாதையில் ஒரு பை இருந்தது. அதனை இருவரில் ஒருவன் எடுத்தான். அவன் உடனே, “ஆகா! எனக்கு ஒரு பை கிடைத்தது,” என்று மகிழ்ச்சியில் கூத்தாடினான்.

உடனே மற்றவன் “நண்பனே, நாம் இருவரும் சேர்ந்தே வந்தோம். எனக்கு என்று சொல்லாதே. நமக்கு என்று சொல்,” என்று கூறினான்.

அதற்கு அவன், “அது எப்படி? நான்தான் பார்த்தேன். நான்தான் எடுத்தேன். அது எனக்குத்தான் சொந்தம்,” என்று சுயநலத்துடன் கூறினான். இருவரும் சிறிது நேரம் வாதாடினர்.

அதற்குள் அந்த இடத்தில் பையை வைத்துவிட்டுத் தண்ணீர் குடிக்கச் சென்றவனும் அவனுடைய நண்பனும் திரும்பி வந்தனர். பையைக் காணாமல் திடுக்கிட்டனர். சற்றுத் தொலைவில் செல்லும் இருவரில் ஒருவனிடம் தங்கள் பை இருப்பதைக் கண்டு கோபத்துடன் ஓடி வந்தனர்.

அதனைக் கண்டு, பையை எடுத்து வைத்திருந்தவன், “நண்பனே, நமக்குத் துன்பம் வரும்போலத் தெரிகிறதே,” என்றான் பதற்றத்துடன்...

உடனே மற்றவன், “நமக்கு என்று சொல்லாதே, உனக்கு என்று சொல்,” என்று கூறினான். தன்னுடைய சுயநல எண்ணம் தனக்குத் துன்பம் தரப்போவதை எண்ணிப் பையை எடுத்தவன் பதறினான்.

ஓடி வந்த இருவரும் பையை வைத்திருந்தவனுக்குப் புத்திமதி கூறிவிட்டுப் பையைப் பெற்றுச் சென்றனர்.

என்னை நுணுகுக

# சுய முயற்சி



## வாக்கியம் அமைத்திடுக.



**பணி ஓய்வு பெற்ற** ஓர் ஆசிரியரும் ஒரு காப்புறுதி முகவரும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். பணி ஓய்வுக்குப் பிறகு ஏதாவதொரு தொழில் செய்ய விரும்பினர். நீண்ட நேர உரையாடலுக்குப் பின் தோட்டம் போடுவதென முடிவு செய்தனர். தங்களின் வீட்டிற்கு அருகிலுள்ள **நிலத்தில்** இருவரும் **தனித்தனியே** பயிர் செய்தனர். பயிர்கள் வளர ஆரம்பித்தன.

**காப்புறுதி** முகவர் தனது தோட்டத்துப் பயிர்களுக்குத் தினமும் நீர் ஊற்றுவார்; பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பார்; உரம் இடுவார். பயிர்கள் **செழிப்பாக** வளர பல முயற்சிகளைச் செய்து வந்தார். ஓய்வு பெற்ற ஆசிரியரின் தோட்டத்திலும் பயிர்கள் வளர்ந்து வந்தன.

சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு கனத்த மழை பெய்தது. **பலமான** காற்றும் வீசத் தொடங்கியது. பயிர்கள் **சேதம்** அடைந்துவிடுமோ என்று காப்புறுதி முகவர் பயந்தார். மறுநாள், பொழுது விடிந்ததும் தமது தோட்டத்துப் பயிர்களைப் பார்க்க ஓடினார். அந்தோ! பரிதாபம். பயிர்கள் அனைத்தும் வேரோடு சாய்ந்து கிடந்தன. மிகுந்த **வேதனை** கொண்டார். ஆனால், பக்கத்தில் இருந்த ஆசிரியர் தோட்டத்துப் பயிர்கள் செழிப்பாகவும் சேதம் இல்லாமலும் இருந்தன.

**வியந்து** போன அவர் ஆசிரியரைக் காணச் சென்றார். “என் பயிர்கள் அனைத்தும் வேரோடு சாய்ந்துவிட்டன. ஆனால், உங்கள் தோட்டத்துப் பயிர்கள் மட்டும் அப்படியே நிற்கின்றனவே! எப்படி?” என்று அதிசயித்துக் கேட்டார். ஆசிரியரும் பதில் கூற ஆரம்பித்தார். நான் உங்களைப் போல் முழு நேரத்தையும் பயிர்களுக்காகவே செலவு செய்யவில்லை. **அளவோடு** நீர் ஊற்றினேன். அதனால், மேலும் நீரைப் பெற பயிர்களின் வேர்கள் மண்ணுக்குள் ஆழமாகச் சென்று விட்டன. இதனால், அவை உறுதியாகவும் பலமாகவும் நின்றன. நாம் யாரையும் சுயமாக முயற்சி செய்து வாழ **வழி வகுக்க** வேண்டும். சுய முயற்சியும் கடின உழைப்புமே ஒருவரை உறுதியுடன் வாழ வைக்கும்,” என்றார். ஆசிரியர் கூறிய **கூற்றின்** உண்மையைக் கேட்டு **மெய் மறந்து** நின்றார் காப்புறுதி முகவர்.

### இடுபணி 1

**கதையை வாசித்து வண்ணத்திலான சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

3.1.2 • பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 2

**பின்வரும் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி வண்ணத்திலான சொற்களைப் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.**

அ. காட்டு விலங்குகளில் மிகவும் பெரியது **ஆனை**.
சட்டத்திற்குப் புறம்பாக ஆனைகளை வேட்டையாடுபவர்களுக்குச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று அரசாங்கம் **ஆணை** பிறப்பித்திருக்கிறது.



ஆ. தியானத்தின்போது **மணம்** கமழும் ஊதுவத்திகளைக் கொளுத்தி வைப்பதால் **மனம்** மேலும் அமைதி நிலையில் ஆழ்ந்துவிடும் என்று கூறப்படுகிறது.



## வளப்படுத்துதல்

**பின்வரும் ஒரு சொல் இரு பொருள் தரும் சொற்களைக் கொண்டு பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.**

எ.கா நாண் < வெட்கப்படுதல் / கயிறு

1. மணமகனைக் கண்டதும் மணமகள் **நாணம்** கொண்டாள்.
2. தம்பியின் இடுப்பில் அப்பா **நாண்** கட்டிவிட்டார்.

அ. அன்னம் < உணவு / பறவை

ஆ. பிடி < பெண்யானை / பிடித்தல்

இ. அணி < அணிதல் / வரிசை

ஈ. கன்று < குட்டி / இளமரம்

உ. நகை < பொன் / சிரிப்பு

ஊ. நாடு < தேசம் / நாடிச் செல்லுதல்

## குறைநீக்கல்

**பின்வரும் வாக்கியங்களில் சரியான லகர, ளகர, ழகரச் சொற்களைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை நிறைவு செய்க.**

1. கபிலனின் வீடு (மலை, மழை) அடிவாரத்தில் அமைந்துள்ளது.
2. உடல் (பழம், பலம்) பெறச் சத்தான உணவு உண்பது அவசியம்.
3. தமிழிசை ஓவியக் (கலை, களை)யில் சிறந்து விளங்கினாள்.
4. நம் நாட்டின் இயற்கை (வளங்களைப், வலங்களைப்) பேணிக் காக்க வேண்டும்.

# இலக்கணம்



## சுட்டெழுத்துகளை அறிக.

### சுட்டெழுத்து

ஒன்றனைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்குச் சுட்டெழுத்து என்று பெயர். இது மொழிக்கு முதலிலே நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும்.

சுட்டெழுத்துகள் மூன்று (அ, இ, உ)

i. அ - சேய்மைச்சுட்டு (தொலைவு) : அங்கு, அவன், அது

ii. இ - அண்மைச்சுட்டு (அருகில்) : இங்கு, இவன், இது

iii. உ - சேய்மைச் சுட்டுக்கும் அண்மைச் சுட்டுக்கும் இடையே உள்ள பொருளைக் குறிக்கும். : உங்கு, உவன்

குறிப்பு: **‘அ, இ’** ஆகிய இரண்டு சுட்டுகள் மட்டுமே இன்றைய வழக்கில் உள்ளன. ‘உ’ எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை.

5.1.1 • சுட்டெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**காலி இடத்தில் பொருத்தமான சுட்டுச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| அது | இவன் | இது | அங்கும் | அவர் |
| உங்கு | இவர் | அவன் | அங்கு | இங்கும் |

அ. “__________ யாருடைய புத்தகப்பை?” என்று நீலாம்பரி தன் தம்பியிடம் கேட்டாள்.

ஆ. __________ ஏன் அழுது கொண்டே வருகிறான்?

இ. “__________ தூரத்தில் மஞ்சள் நிற ஆடை அணிந்திருப்பவள்தான் என் தங்கை,” என்றான் தேவகிரி.

ஈ. மரக் கிளையில் காகம் ஒன்று அமர்ந்திருந்தது. சிறிது நேரம் கழித்து __________ பாட்டி சுட்டுக் கொண்டிருந்த வடையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றது.

உ. தெருவில் ஓர் ஏழையைக் கண்டேன். __________ உடலிலும் ஆடையிலும் வறுமை தென்பட்டது.

ஊ. “__________ போக வேண்டாம் __________ போக வேண்டாம். __________ நின்றாலே போதும்,” என்று மாணவர்களிடம் ஆசிரியர் கூறினார்.

எ. “__________ யாருடைய தம்பி? ஏன் மௌனமாகவே இருக்கிறான்?” என்று என் தோழி வினவினாள்.

ஏ. “__________ தான் என்னுடைய அப்பா,” என்று சிலம்பரசி தன் தந்தையை அனைவரிடமும் அறிமுகப்படுத்தினாள்.

## இடுபணி 2

**பின்வரும் சுட்டுப்பெயர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்திடுக.**

அ. இவர்
__________

ஆ. அவள்
__________

இ. உவன்
__________

ஈ. இங்கு
__________

உ. அங்கு
__________

ஊ. உங்கு
__________

தொகுதி 2

## இடுபணி 3

**அண்மைச்சுட்டுச் சொற்களையும் சேய்மைச்சுட்டுச் சொற்களையும் எழுதி வகைப்படுத்துக.**

| அண்மைச்சுட்டுச் சொற்கள் | சேய்மைச்சுட்டுச் சொற்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## வளப்படுத்துதல்

**வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுட்டுப்பெயர்களை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

1. “இதோ இவள்தான் என் அண்டைவீட்டுத் தோழி,” என்றாள் பூங்குழலி.

2. “அவனிடம் இனிமேல் நட்பு கொள்ளாதே,” என்று அம்மா அறிவுரைத்தார்.

3. விநோதினி திடலில் விளையாடிக் கொண்டிருக்கும்போது அவளது காலில் முள் குத்தியது.

4. “அவை என்னுடைய புத்தகங்கள்,” என்றான் தீபன்.

5. “கபிலா! நீ ஏன் இவனை அடித்தாய்?” என்று ஆசிரியர் கேட்டார்.





## குறைநீக்கல்

**பின்வரும் சொற்களில் அண்மைச்சுட்டு, சேய்மைச்சுட்டுச் சொற்களை அடையாளங்கண்டு வகைப்படுத்துக.**


| | | | | |
|---|---|---|---|---|
| அவர் | அவள் | அங்கு | இவன் | அது |
| இது | இங்கு | அவன் | இவர் | இவள் |

# தொகுதி 3 இலக்கியம் அறிவோம்


## பாடம் 1 இரட்டைக் காப்பியம்

### வாசித்து அறிக.

- சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்.
- இளங்கோவடிகள் இந்நூலை இயற்றினார்.
- சமண சமயச் செய்திகளைப் பரப்புவதாக அமைந்துள்ளது.
- இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட ஓர் அரிய நூல்.
- இல்லற வாழ்வை வலியுறுத்துகிறது.
- மூன்று முக்கிய உண்மைகளை உலகுக்கு உணர்த்துகிறது.
  1. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்.
  2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
  3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.
- பெண்ணின் கற்புத் திறத்தையும் பெருமையையும் உலக அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது.






- மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்.
- சீத்தலைச் சாத்தனார் இந்நூலை இயற்றினார்.
- பௌத்த சமயத்தைப் போற்றுவதாக அமைந்துள்ளது.
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகிறது.
- மூன்று முக்கிய உண்மைகளை உலகுக்கு உணர்த்துகிறது.
  1. இளமை நிலையற்றது.
  2. யாக்கை நிலையற்றது.
  3. செல்வம் நிலையற்றது.
- துறவறத்தை வலியுறுத்துகின்றது.

**1.1.3** ரகர, றகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்திச் சரியான உச்சரிப்புடன் பேசுவர்.

## இடுபணி 1

**ரகர, றகர எழுத்துகளடங்கிய சொற்களை அடையாளங்கண்டு சரியான உச்சரிப்புடன் பேசுக.**

## இடுபணி 2

**படங்களுடன் தொடர்புடைய ரகர, றகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்திச் சரியான உச்சரிப்புடன் பேசுக.**

### அறிந்து கொள்க

**ஐம்பெரும் காப்பியம்**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. குண்டலகேசி
4. வளையாபதி
5. சீவக சிந்தாமணி



தென்னங்கீற்று



ஊற்று நீர்



கூரிய அரம்



இரவு நேரம்



கடற்கரையோரம்



வரிக்குதிரை



மாமரம்



விறகுவெட்டி



அச்சு முறுக்கு

இடுபணி 3

**கீழ்க்காணும் வண்ணத்திலான ரகர, றகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.**



சேக்கிழார்




பெரிய புராணம்

- **சேக்கிழாரால்** இயற்றப்பட்ட **பெரிய புராணம்**
- வேளாளர் மரபில் பிறந்தவர்
- தில்லையில் நூல் அரங்கேற்றம்
- 'தொண்டர் சீர் பரவுவார்' எனும் பட்டம்.

என்னை நுணுகுக

## வளப்படுத்துதல்

**பின்வரும் ரகர, றகர எழுத்துகளடங்கிய சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் கூறுக.**

1. குரு - குறு
2. கீரி - கீறி
3. இரை - இறை
4. கரை - கறை


# பாடம் 2 அவரவர் திறமை

**வாசித்து அறிக.**

சூழல்: மன்னர்களும் புலவர்களும் கூடியுள்ள அவையில் சோழ மன்னன், ‘சிலர் சில செயல்களுக்காகவே தனித் திறமையுடன் பிறக்கிறார்கள். அவர்களைத் தவிர, வேறு யாராலும் அந்தச் செயலைச் செய்ய முடியாது,’ என்று வாதிடுகிறார். அதனைக் கேட்ட ஔவையார் சோழ மன்னனின் கூற்றை மறுத்துப் பேசுகிறார்.

திறமை என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் முழுமையாக அமைந்திருக்கும். அதைக் கொண்டு மற்றவர்கள் திறமையற்றவர்கள் என்று முடிவு கட்டுவது பெரிய தவறு!

செத்தை, நார் ஆகியவற்றைக் கொண்டு தூக்கணாங்குருவி கட்டுகின்ற கூட்டை ஆறறிவு பெற்ற மனிதனால் கட்ட முடியாது. அக்குருவி பின்னுகின்ற ஒரு கூட்டை நாம் பின்ன முடியவில்லை என்பதனால் நம்மைத் திறமையற்றவர்களாகத் தீர்மானித்துவிட முடியுமா? அதுதான் போகட்டும்! சிறுசிறு மண் சிகரங்களோடு கரையான் சமைத்துக் கொள்ளும் புற்றுகளைப் போல் ஒன்றையாவது நம்மால் சமைக்க முடியுமா?



2.1.1 வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

மாட மாளிகைகளையும் கோபுரங்களையும் கட்டி வனப்புச் செய்யும் மனிதனால் இந்தக் கரையான் புற்றுகளைக் கட்டிவிட முடியாதா? முடியாதென்று இல்லை! ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வேலையிலே திறமை இருக்கிறது. அவ்வளவுதான்.



மரக் கொம்பிலே கட்டுகின்ற தேன் கூட்டைப் போல் ஒரு கூடு கட்ட அந்தத் தேனீயைக் காட்டிலும் அறிவில் சிறந்த மனிதனால் முடியுமா? சிறுசிறு துவாரங்களுடன் அமைந்திருக்கும் நுண்ணிய தேன் அடையைச் சில சிறிய ஈக்கள் அல்லவா செய்துவிடுகின்றன? அப்படிச் செய்ய முடிவதனால் மட்டும் தூக்கணாங்குருவியும் கரையானும் தேனீயும் மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவை என்று சொல்ல முடிகிறதா? இதே போலத்தான் அவரவருக்கென்று திறமை அமையும்.



என்னை நுணுகுக

இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**குட்டி போட்ட முல்லாவின் பானை**



ஒரு சமயம் முல்லாவிடம் ஒரு பானையை இரவல் வாங்கிச் சென்ற பக்கத்து வீட்டுக்காரர் சில நாள்கள் கழித்து அந்தப் பானையுடன் ஒரு சிறிய பானையையும் சேர்த்துக் கொண்டுவந்து முல்லாவிடம் கொடுத்தார். அதைக் கண்ட முல்லா, ஆச்சரியத்துடன், "நான் ஒரு பானை தானே கொடுத்தேன். இந்தச் சிறிய பானை எதற்கு?" என்று அவரிடம் வினவினார்.

பக்கத்து வீட்டுக்காரர், "உங்கள் பானை என் வீட்டிலிருந்தபோது போட்ட குட்டிதான் இந்தச் சின்ன பானை. உங்கள் பானை போட்ட குட்டி உங்களுக்குத்தானே சொந்தம். அதனால்தான் அதையும் கொண்டுவந்து கொடுத்தேன்," என்றார்.

முல்லா அந்த இரண்டு பானைகளையும் பெற்றுக் கொண்டார். சில நாள்களுக்குப் பின் அதே பக்கத்து வீட்டுக்காரரிடம் சில பானைகளை இரவல் வாங்கிய முல்லா வாங்கிப் பல நாள்களாகியும் அந்தப் பானைகளைத் திருப்பித் தரவில்லை. காத்திருந்து பொறுமை இழந்த பக்கத்து வீட்டுக்காரர், தாமாகவே முல்லாவிடம் சென்று, அவர் தம்மிடம் இரவல் வாங்கிய பானைகளைத் திருப்பித் தருமாறு கேட்டார்.

அதற்கு முல்லா வருத்தத்துடன், "நண்பரே! உங்கள் வீட்டுப் பானைகள் என் வீட்டிலிருந்தபோது பிரசவ வேளையில் உயிரிழந்துவிட்டன. அதனால்தான் அந்தப் பானைகளை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. பானைகள் குட்டி போடும் என்பது உங்களுக்கும் தெரியும்தானே..." என்றார்.

**மூலம்: உங்கள் குரல் 2009 (சில மாற்றங்களுடன்)**

## இடுபணி 3

**கீழ்க்காணும் துணுக்கைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**நீங்கள் கோபப்படுபவர்களா?**

எதற்காகவும் கோபப்படாதீர்கள். கோபப்படுகிறவர்களுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்படும். இது மரணத்தில் போய் முடியும்!

கோபம் நண்பர்களை விலகிப் போகச் செய்வதுடன், நமது மகிழ்ச்சியையும் கொல்லும். தரையில் ஓங்கிக் குத்தினால், நமது கைதானே வலிக்கும்? கோபமும் அப்படிப்பட்டதுதான். எனவே, கோபத்தை விடுங்கள்! கோபத்தினால் யாரையும் அடித்துவிடாதீர்கள். அது பகையை வளர்க்கும். பழி தொடரும்.


தவறு செய்தவர் என்றால் கண்டியுங்கள், கடுமையாகத் தண்டிக்காதீர்கள். சுடுமொழியும், கடுமையான தண்டனையும் நமது முன்னேற்றத்தைப் பாதிக்கும்.

(வெற்றிப்படிகள்)

# பாடம் 3 வள்ளல் பாரி

## வாக்கியம் அமைத்திடுக.

இடம் - பாரியின் அரண்மனை
கதைமாந்தர் - அரசர் பாரி, அங்கவை, சங்கவை, அமைச்சர், புலவர், காவலர்



அமைச்சர்: என்ன, அரசர் இன்னும் வரவில்லையா?

காவலர்: தம் மக்கள் அங்கவை, சங்கவையுடன் தேரில் ஏறிச் சென்றார். மலைப்பக்கம் போய் வருகிறேன் என்று சொல்லிப் போனார்.

அமைச்சர்: அந்தி சாயும் நேரம் நெருங்கிவிட்டதே. இருட்டில் அவர்கள் எப்படி வருவார்கள்?

புலவர்: இயற்கை வளங்களைக் **கண்டு** மகிழக் குழந்தைகளோடு சென்றார். வந்துகொண்டுதான் இருப்பார். கவலை எதற்கு?

காவலர்: நாங்கள் அரசர் போன வழியே போய் அவர் வருகிறாரா என்று பார்க்கிறோம்.

**(அப்போது குதிரைகள் மட்டும் வருகின்றன)**


அமைச்சர்: குதிரைகள் மட்டும் **தனி**த்து வருகின்றனவே! தேர் எங்கே? தேரில் சென்ற நம் மன்னர் பாரி எங்கே? அவர் தம் செல்லப் புதல்வியர் எங்கே?

காவலர்: யாராவது ஏதாவது செய்திருப்பார்களோ! விலங்குகளின் **கெடுதல்** ஏதாவது...?

அமைச்சர்: வாருங்கள்! வாருங்கள் நாம் சென்று தேடலாம்.

3.1.2 • பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

**(சிறிது நேரத்தில் மன்னர் அவரது புதல்விகளுடன் வருகின்றார்.)**



புலவர்: மன்னா! என்னவாயிற்று? தேர் எங்கே?

அமைச்சர்: தேர் அங்கே தூரமாக நிற்கிறதே! ஏன் நடந்து வருகின்றனர் மன்னரும் புதல்வியரும்...?

புலவர்: அதோ ஒரு முல்லைக்**கொடி**. ஆம்! அது படர வழியில்லை. அது படர்வதற்காகத் தங்கள் தங்கத் **தேரை** விட்டு இறங்கி வந்தீர்களா?

அமைச்சர்: ஐயகோ! அரண்மனை வந்து சொல்லியிருந்தால் பெரும் பந்தலே போட்டிருப்போமே!

அங்கவை: அமைச்சரே! அரசரது **இளகிய** உள்ளம் அதுவரைக்கும்கூட இந்தச் செடி ஏன் வருந்த வேண்டும் என்று **எண்ணியது**. ஆகவே, தேரை நிறுத்தி முல்லைக்கொடி படருமாறு செய்தார்.

சங்கவை: நாங்கள் அங்கிருந்து நடந்தே வருகிறோம்.

புலவர்: முல்லைக்குத் தேர் ஈந்த பாரி! உமது கருணையே கருணை! ஓரறிவுள்ள முல்லைக் கொடிக்கும் நீ இரக்கம் காட்டியுள்ளாய். இதுவரை எங்குமே, யாருமே நினைக்காத ஒன்று. வாழ்க பாரி! வளர்க உமது புகழ்!

## இடுபணி 1

**வண்ணத்திலான சொற்களின் பொருள் விளங்க வாக்கியம் அமைத்திடுக.**


## இடுபணி 2

**சொற்களுக்குப் பொருள் விளங்க வாக்கியங்களை எழுதி வாசித்திடுக.**

- மாலை
  - பூமாலை
  - மாலை நேரம்
- மறை
  - வேதம்
  - மறைத்து வைத்தல்

## வளப்படுத்துதல்

**சொற்குவியலிலுள்ள சொற்களை அடையாளங்கண்டு பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.**



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | ரு | த் | து | அ | த | மெ | ப | ப |
| ந | னை | ம | வி | க் | ரு | பு | கு | ரி |
| ரை | கு | க | டு | க | ண | ர | தி | ரு |
| க | பு | தி | பா | ரை | ம் | ம் | எ | தி |
| று | தி | ரை | வ | று | தி | மு | ரி | அ |
| த் | க | அ | க் | க | றை | உ | க | டி |
| து | அ | ச | தி | பு | உ | ன | ந | ப |
| ப | றி | அ | பு | ற | ம் | பா | றை | கு |
| கு | ம | ரி | சு | அ | வ | தி | ற | மை |



எ.கா: பறி - பரி

1. ஒவ்வொரு நாளும் காலையில் மல்லிகைப் பூக்களைப் **பறி**த்து அம்மா மாலையாகத் தொடுப்பார்.

2. மிருகக்காட்சி சாலையில் நான் **பரி**யைப் பார்த்தேன்.

## குறைநீக்கல்

**பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. ______________ (இரை, இறை) நம்பிக்கை உள்ளவர்கள் ஒருபோதும் தவறு செய்ய நினைக்க மாட்டார்கள்.

2. மீனவர்கள் ______________ (பரவை, பறவை) யில் வலை வீசி மீன் பிடித்தனர்.

3. நாம் பிறருடைய ______________ (குரை, குறை)களைப் பேசுவதால் பயனில்லை, மாறாக, அவர்களுடைய (நிரை, நிறை)களைப் பேசி ஊக்கம் ஊட்ட வேண்டும்.

4. அசுத்தமான இடங்களில் சுற்றித் திரிவதால் ______________ (சொரி, சொறி) சிரங்கு ஏற்பட வாய்ப்புண்டு.

5. ஔவையார் தமது ஆத்திசூடியில் ______________ (அரம், அறம்) செய விரும்பு என்று பாடியுள்ளார்.

6. அன்னை தெரசா ______________ (இரக்க, இறக்க) குணம் கொண்டதால் ஏழைகளுக்கு உதவி செய்தார்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உரையாடலை வாசித்து அறிக.

சூழல்: திலகாவும் எழிலரசியும் கிராமத் தலைவரைப் பார்த்துப் பேசிவிட்டு இல்லம் திரும்புகின்றனர்.

எழிலரசி நமது கிராமத் தலைவர் பல்கலைக்கழகத்தில் படித்தவரா? அற்புதமான கருத்துகளைச் சான்றுகளுடன் அழகாகக் கூறுகின்றார்.

அவர் ஒரு படிக்காத மேதை. நமது கிராமத்தில்தான் பிறந்து வளர்ந்தவர். அவர் பல அறிஞர் பெருமக்களுடன் நல்லுறவு வைத்திருக்கின்றார். அவர்களுடன் அடிக்கடி சந்தித்துப் பேசுவதாலும் பல வேளைகளில் கருத்துப் பரிமாற்றம் செய்வதாலும் அவருக்குப் பல தெளிவுகள் கிடைத்துள்ளன. அதனால்தான் உனக்கு அப்படித் தோன்றுகிறது.



நல்லவர்களோடு சேர்ந்து பழகும்போது நற்பண்புகள் வளர்வது போல, நல்லறிஞர்களோடு பழகினால் நல்லறிவு பெருகும் என்பதற்கு நம் கிராமத் தலைவர் ஒரு நல்ல சான்று.

சரியாகச் சொன்னாய். மிகுந்த மணமுடைய பாதிரிப்பூக்களை ஒரு புதிய மண்பானையில் சில காலம் வைத்துவிட்டுப் பின்னர், அப்பானையில் தண்ணீரை ஊற்றினால் அந்நீரும் மணம் பெறுவது போலத்தான் நாமும் இதனைக் கருத வேண்டும்.

### நாலடியாரும் பொருளும்

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.**



படிப்பில்லாதவர்கள் என்றாலும் படித்தறிந்த பெரியோர்களுடன் சேர்ந்து பழகினால், அவர்களுக்கும் அப்பெரியோர் சேர்க்கையால் கொஞ்சம் கொஞ்சமாக நல்லறிவு வாய்க்கப் பெறும். எப்படி என்றால், சிறந்த அழகும் மணமும் நிறைந்த பாதிரிப்பூ வைத்திருந்த புதிய மண் பாண்டத்தில் உள்ள தண்ணீருக்கும் அதன் மணம் கிடைப்பது போல.

**4.2.1** புகுமுக வகுப்பிற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

### இடுபணி 1

**நாலடியாரையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**சொல், சொற்றொடர்களுக்கான பொருளைத் தெரிவு செய்து எழுதுக.**

1. கல்லாரே
2. கற்றாரை
3. சேர்ந்தொழுகின்
4. நல்லறிவு
5. நாளும்
6. தலைப்படுவர்

சேர்ந்து பழகினால் | படித்தறிந்தவர் | தினமும் | படிப்பில்லாதவர் | வாய்க்கப்படுவர் | சிறந்த அறிவு

### இடுபணி 3

**உரையாடலை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.**

### வளப்படுத்துதல்

**நாலடியார் உணர்த்தும் நீதியை 30 சொற்களில் எழுதுக.**

நீதி

### குறைநீக்கல்

**நாலடியாரில் விடுபட்ட சொற்களை எழுதி நிரப்புக.**

கல்லாரே யாயினும் கற்றாரைச் ________
________ நாளுந் ________ - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் ________ சேர்தலாற் புத்தோடு
________ தான்பயந் தாங்கு.



# தொகுதி 4 போதைப் பொருள்

## பாடம் 1 மறுவாழ்வு மையம்

கலந்துரையாடுக.

### போதைப் பித்தர் மறுவாழ்வு மையச் செயல்பாடுகள்



மனமகிழ் நடவடிக்கைகள்






விளையாட்டு



கருத்தரங்கு நடத்துதல்



போதைப் பித்தருக்கு
மருத்துவம் அளித்தல்



சமய போதனை
வழங்குதல்






மதிவிழிச் சேவை
வழங்குதல்

**இடுபணி 1**

**போதைப் பித்தர் மறுவாழ்வு மையத்தின் செயல்பாடுகள் குறித்து உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.**

1.2.1 நடப்புச் செய்தியையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.

## இடுபணி 2

**போதைப் பொருளுக்கு அடிமையாகாமல் இருக்க ஒருவர் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது பற்றிய உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.**



நல்ல பயனுள்ள பொழுது போக்கு



அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டல்



சமய நூல்களை வாசித்தல்



பெற்றோரின் ஆலோசனையைக் கேட்டு நடத்தல்

## இடுபணி 3

**போதைப் பொருளுக்கு அடிமையாகாமல் இருக்க குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு துணை புரியலாம் என்பதைப் பற்றிய உமது எண்ணங்களையும் கருத்துகளையும் நண்பர்களிடம் பண்புடன் கூறுக.**

| பெற்றோர் | சகோதரர்கள் |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

### அறிந்து கொள்க

**பண்புச் சொற்கள்**

- தாழ்மையுடன் கேட்கிறேன்.
- பணிவுடன் விடைபெறுகிறேன்.
- தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

# பாடம் 2 புகை பிடிக்காதீர்!

## வாசித்து அறிக.

**தேசிய இடைநிலைப்பள்ளி ஒன்றில் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு ஆளானவர்களின் எண்ணிக்கை**







### அறிந்து கொள்க

**பகுத்தாய்தல்**

- இ∴து ஓர் உயர்நிலைச் சிந்தனைத் திறன்.
- கொடுக்கப்பட்ட தகவல்களை நன்கு ஆராய்ந்து பகுத்துப் பார்த்தல்.

**பகுத்தாய்தல் வகைகள்**

- ஒற்றுமையைக் காண
- வேற்றுமையைக் காண
- உய்த்து உணர
- இனம் பிரித்திட
- ஆய்ந்திட
- வகைப்படுத்திட

### இடுபணி 1

**குறிவரைவிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்ந்திடுக.**

2.2.2 குறிவரைவிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்வர்.

## இடுபணி 2


**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. குறிவரைவு எதைப் பற்றி விளக்குகிறது?
2. மொத்தம் எத்தனை மாணவர்கள் அப்பள்ளியில் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றனர்?
3. புகைபிடிக்கும் பழக்கம் எந்தப் படிவத்தில் அதிகமாக இருக்கிறது? ஏன்?
4. படிவம் ஒன்றில் பயிலும் மாணவர்களுக்கு இப்பழக்கம் ஏற்படக் காரணம் என்னவாக இருக்கும்?
5. மாணவர்கள் இப்பழக்கத்திலிருந்து விடுபட பள்ளி அளவில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட வட்டக்குறிவரைவிலுள்ள தகவல்களைப் பகுத்தாய்வு செய்க.**

போதைப்பொருள் விநியோகிப்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் தொடர்பாக 100 மாணவர்கள் வழங்கிய பரிந்துரைகள்.




மூலம்: டெங்கில் இடைநிலைப்பள்ளியின் மாணவர் கட்டொழுங்குப் பிரிவு 2019

## பாடம் 3 விழிப்புணர்வு

**தொகுத்து எழுதுக.**








**போதைப்பொருள் விழிப்புணர்வு முறைகள்.**

- போதைப் பொருளின் அபாயத்தை மக்களுக்குத் தெரியப்படுத்துதல்.
- போதைப் பொருள் விழிப்புணர்வுப் பதாகைகள், சுவரொட்டிகளை ஆங்காங்கே மக்களின் பார்வைக்கு வைத்தல்.
- போதைப் பொருளை உட்கொள்வதாலும் விநியோகிப்பதாலும் ஏற்படும் விளைவுகளை உணர்த்துதல்.
- வசிப்பிடங்களில் கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்தல்.
- பள்ளிகளில் போதைப் பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்துதல்.
- போதைப் பொருள் மறுவாழ்வு மையங்களுக்கு இளைஞர் சமுதாயத்தை அழைத்துச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.



**இடுபணி 1**

**போதைப் பொருள் விழிப்புணர்வு முறைகள் தொடர்பான கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

3.3.1 கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.

## இடுபணி 2

**மகிழ்ச்சியான வாழ்க்கை முறை தொடர்பான கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- ஒவ்வொரு நாளும் இறைவழிபாடு செய்தல்
- உடற்பயிற்சியைத் தவறாமல் செய்தல்
- ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டிக் கொள்ளுதல்
- ஆரோக்கியமான சரிவிகித உணவை உட்கொள்ளுதல்
- நல்ல பயனுள்ள பொழுதுபோக்கைக் கடைப்பிடித்தல்
- விடுமுறைக் காலங்களில் குடும்பத்தினருடன் சுற்றுலா மேற்கொள்ளுதல்

### அறிந்து கொள்க

**தொகுத்து எழுதுதல்**

- நான்கு பத்தியில் எழுதுதல்.
- முன்னுரை
  தெரிநிலை கருத்து
  புதைநிலை கருத்து
  முடிவுரை
- சொந்த நடையில் எழுதுதல்.
- ஏற்ற இடைச் சொற்களைப் பயன்படுத்துதல்.
- தெரிநிலைக் கருத்துகளை அடையாளங்காணுதல்.
- புதைநிலைக் கருத்துகளை ஆராய்ந்து அறிதல்.

## இடுபணி 3


**படங்கள் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**


ஒழுக்கமிக்க மாணவர்


அன்பு செலுத்துதல்


பெரியோரை மதித்தல்


கல்வியில் கவனம் செலுத்துதல்


இறைநம்பிக்கை கொள்ளுதல்


நேரத்தை முறையாக நிருவாகம் செய்தல்

# இலக்கணம்

## வேற்றுமை உருபுகளை அறிக.

### வேற்றுமை

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.
- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை:

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) | உருபு இல்லை | - முகிலன் தேர்வு எழுதினான். |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | - அம்மா முகிலனைப் பாராட்டினார். |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | - கோயில் முகிலனால் கட்டப்பட்டது.<br>- தம்பி முகிலனோடு கடைக்குச் சென்றான். |
| நான்காம் வேற்றுமை | கு | - முகிலனுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. |
| ஐந்தாம் வேற்றுமை | இன், இருந்து, இல், நின்று | - முகிலன் வீட்டிலிருந்து புறப்பட்டான்.<br>- முகிலனில் சிறந்தவன் அகிலன்.<br>- பழம் மரத்தினின்று விழுந்தது. |
| ஆறாம் வேற்றுமை | அது, உடைய | - முகிலனது புத்தகம் கிடைத்து விட்டது.<br>- முகிலனுடைய வீடு அழகாக இருக்கும். |
| ஏழாம் வேற்றுமை | இல், இடம், பால், கண் | - முகிலனிடம் நற்பண்புகள் இருக்கின்றன.<br>- முகிலன்பால் அன்பு கொள்க.<br>- முகிலன் பள்ளியில் படித்தான்.<br>- அவன்கண் நட்பு கொண்டான். |
| எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) | உருபு இல்லை (விளித்தல்/அழைத்தல்) | - முகிலா! இங்கே வா. |

5.2.1 வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. வேற்றுமை என்றால் என்ன?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
3. எந்தெந்த வேற்றுமைகளுக்கு உருபு இல்லை?
4. முதல் வேற்றுமை எதனைக் குறிக்கின்றது?
5. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை?
6. 'ஐ' எனப்படுவது என்ன வேற்றுமை?
7. 'அரசனுக்கு' எனும் சொல்லில் என்ன வேற்றுமை சேர்ந்துள்ளது?
8. எட்டாம் வேற்றுமையை வேறு எவ்வாறு அழைக்கலாம்?

## இடுபணி 2

**பின்வரும் வாக்கியங்களில் வண்ணத்திலான சொற்கள் எவ்வகை வேற்றுமையை ஏற்றுள்ளன என்பதை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

எ.கா:
**கமலவேணி** பூப்பந்து விளையாடினாள்.
- முதல் வேற்றுமை (எழுவாய்)



1. **மாலதி கவிதாவுடன் கோவிலுக்குச்** சென்றாள்.
2. **இளவழகு பள்ளிக்குச்** சென்றான்.
3. **கணபதியால் பூங்குன்றன் ஏச்சுப் பேச்சுக்கு** ஆளானான்.
4. **பள்ளிப் பாடத்தைச் செய்தவுடன் கமலம்** குளிக்கச் சென்றாள்.
5. **ஏழைக்கு** நாம் உதவ வேண்டும்.
6. **பெரியவரொடு சிறுமி** ஒருத்தியும் நடந்து வந்தாள்.
7. **அக்கா** ஒவ்வொரு நாளும் **இறைவனை** வணங்குவார்.
8. **கர்ணன் அம்பை** எய்தான்.



## இடுபணி 3

**பிரித்தெழுதுக.**

1. விமலனை =
2. அரத்தால் =
3. பானையுடன் =
4. தலைவனை =
5. முரளிக்கு =
6. நண்பனோடு =
7. தோழியுடன் =
8. கோவிலுக்கு =
9. வணிகனை =
10. பள்ளிக்கு =

## வளப்படுத்துதல்

**பின்வரும் சொற்களுடன் வேற்றுமை உருபை இணைத்து வாக்கியம் அமைக்கவும்.**

1. ஒற்றுமை
2. நாடு
3. அன்பு
4. நேர்மை
5. குடும்பம்
6. நண்பர்
7. தோட்டம்
8. பணி

## குறைநீக்கல்

**சேர்த்தெழுதுக.**

1. அன்பு + ஐ =
2. பாரதி + உடன் =
3. இறைவன் + கு =
4. ஏழை + ஒடு =
5. மரம் + ஐ =
6. கோவலன் + உடன் =
7. கடை + கு =
8. அன்பு + ஒடு =
9. தந்தை + ஐ =
10. மனிதன் + கு =
11. நண்பர் + ஒடு =
12. பசு + கு =
13. கன்று + உடன் =
14. மாணவன் + ஐ =
15. பகைவன் + கு =
16. வண்டி + ஒடு =

# தொகுதி 5 ஆரோக்கியமும் நாமும்

## பாடம் 1 உடல் நலம் பேணுவோம்

கலந்துரையாடி அறிக.





கண் பரிசோதனை



இரத்த அழுத்தப் பரிசோதனை



உயரம் அளத்தல்



மருத்துவ ஆலோசனை பெறுதல்



சரியான மருந்தைப் பெறுதல்



நீரிழிவு நோய் பரிசோதனை





இரத்த தானம் செய்தல்

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டி உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.**

## இடுபணி 2

**‘உடல் நலத்தைப் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் முதன்மைக் கடமையாகும்’, இவ்வரிக்கு ஏற்ப நாம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறி உரையாடுக.**

## இடுபணி 3

**சூழல் படங்களுக்கு ஏற்ப எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறிக் குழுவில் உரையாடுக.**



தியானம்



மெதுநடை



தைச்சீ



எட்டு எண் பயிற்சி

## பாடம் 2 உணவின் மகிமை

**பகுத்தாய்ந்து அறிக.**

**சீரான உணவுகள்**

| உணவு | சுவை | பயன் |
|---|---|---|
| செம்மங்கி (கேரட்), கரும்பு, பரங்கி, செங்கிழங்கு (பீட்ரூட்) | இனிப்பு | தசையை வளர்க்கும் |
| வெந்தயம், பாகற்காய், கத்தரி | கசப்பு | நரம்புகளை வலுப்படுத்தும் |
| மிளகாய், மிளகு, மஞ்சள், கடுகு | கார்ப்பு | எலும்புகளை வலுப்படுத்தும் |
| தக்காளி, மாங்காய், எலுமிச்சை | புளிப்பு | தேவையான கொழுப்பைத் தரும் |
| முள்ளங்கி, பூசணி, சுரைக்காய், வாழைத்தண்டு | உவர்ப்பு | தேவையான உமிழ் நீரைச் சுரக்கச் செய்யும் |
| நெல்லிக்கனி, மாதுளை, வாழைக்காய், அத்திப்பழம் | துவர்ப்பு | இரத்தத்தைச் சுத்தம் செய்யும் |

மூலம்: உணவும் நாமும்

**இடுபணி 1**

**அட்டவணையிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்வு செய்க.**

2.2.3 அட்டவணையிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்வர்.


## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. தசையை வளர்க்கும் உணவுகள் யாவை?
2. நரம்புகள் வலுவிழந்த ஒருவர் உண்ண வேண்டிய உணவுகள் யாவை?
3. உமிழ் நீர் சுரக்கச் செய்யும் உணவுகளைக் கூறுக.
4. வாழைத்தண்டு, வாழைக்காய் ஆகியவற்றின் சிறப்புகளைக் கூறுக.
5. இரத்த சோகை ஏற்பட்ட நோயாளி ஒருவர் அதிகம் உண்ண வேண்டிய உணவுகள் யாவை?
6. உணவுக் கூம்பு பற்றிய விவரங்களைக் கூறுக.

## இடுபணி 3

**தாமரை கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் தங்களின் உடல் நலத்தைப் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அட்டவணையிலுள்ள தகவல்களைக் கொண்டு பகுத்தாய்ந்திடுக.**



| | எண்ணிக்கை | |
|---|---|---|
| நடவடிக்கைகள் | ஆண் | பெண் |
| மெதுவோட்டம் | 42 | 28 |
| மிதிவண்டி மிதித்தல் | 35 | 10 |
| மெதுநடை | 30 | 35 |
| இசை உடற்பயிற்சி | 10 | 30 |
| நீச்சல் | 45 | 25 |
| உடற்பயிற்சி நிலையம் | 40 | 20 |
| தற்காப்புக்கலை | 30 | 15 |
| யோகப்பயிற்சி | 10 | 35 |
| பூப்பந்து | 38 | 25 |
| காற்பந்து | 60 | 5 |



# பாடம் 3 சிறப்புத் தரும் கீரைகள்

## வாக்கியம் எழுதுக.

- ✔ நினைவாற்றல் அதிகரிக்கும்
- ✔ இரும்பு சத்து நிறைந்தது
- ✔ குடல் புண்ணைக் குணப்படுத்தும்

- ✔ நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்
- ✔ இளநரை மறையும்
- ✔ கண்பார்வை அதிகரிக்கும்



வல்லாரை



முருங்கைக் கீரை

புளிச்சக் கீரை



மணத் தக்காளிக் கீரை



- ✔ சருமத்தை மெருகூட்டும்
- ✔ பசியின்மையைப் போக்கும்
- ✔ உடல் வெப்பத்தை நீக்கும்

- ✔ வாய்ப்புண்ணைக் குணப்படுத்தும்
- ✔ கல்லீரலைப் பாதுகாக்கும்
- ✔ மலச்சிக்கலைப் போக்கும்

### இடுபணி 1

**கீரைகளின் சிறப்புகள் பற்றிய குறிப்புகளைக் கொண்டு வாக்கியங்கள் எழுதுக.**

3.1.1 தலைப்பையொட்டி வாக்கியங்கள் எழுதுவர்.

தொகுதி 5

## இடுபணி 2

**ஆரோக்கியமான நடவடிக்கைகளைக் குறிக்கும் படங்களுக்கு ஏற்ற வாக்கியங்கள் எழுதுக.**



வீணை மீட்டுதல் - மன அமைதி



சுற்றுலா - ஒற்றுமை



பாடல் பாடுதல் - மகிழ்ச்சி

## இடுபணி 3

**சூழல் படத்திற்குத் தொடர்பான ஐந்து வாக்கியங்களை அமைத்திடுக.**



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளை அறிக.




1 நாம் எந்தவொரு செயலையும் **ஆற அமர** யோசித்துச் செய்ய வேண்டும் என்று அப்பா எனக்கு அறிவுரை கூறினார்.

2 ஒவ்வோர் ஆண்டும் தீபாவளித் திருநாளில் எங்கள் வீட்டிற்கு **உற்றார் உறவினர்கள்** வருவது வழக்கமான ஒன்றாகும்.

3 எங்கள் குடும்பம் இன்று **சொத்து சுகத்துடன்** இருப்பதற்கு அடிப்படைக் காரணம் விடாமுயற்சி, கடின உழைப்பு என்றால் மிகையாகாது.

4 நாம் பிறருடைய **குற்றம் குறைகளைப்** பற்றிப் பேசுவதால் எந்தவொரு பயனும் விளையப் போவதில்லை என்று என் தாத்தா நிதமும் கூறுவார்.

5 என் பெற்றோர் **இரவு பகல்** பாராமல் உழைத்து வருகின்றனர்.

### இணைமொழியும் பொருளும்

| | | |
|---|---|---|
| ஆற அமர | - | நிதானமாக / பரபரப்பின்றி |
| இரவு பகல் | - | ஓய்வில்லாமல் / தொடர்ந்து |
| சொத்து சுகம் | - | வசதியுடன் |
| குற்றம் குறை | - | தவறும் குறையும் |
| உற்றார் உறவினர் | - | நெருக்கமானவர்களும் சுற்றத்தாரும் |

**4.3.1** புகுமுக வகுப்பிற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**பொருத்தமான இணைமொழியை எழுதுக.**

1. ரகுவரன் எப்பொழுதும் தன் நண்பர்களின் ______ களைப் பார்ப்பதால் அவனுடன் யாரும் பழக விரும்புவதில்லை.

2. உமையாள் தனது பிறந்தநாள் விழாவுக்கு ______ களை அழைத்திருந்தாள்.

3. திரு. மேகநாதன் ______ பாராமல் கடுமையாக உழைத்ததால் இன்று வசதியுடன் வாழ்ந்து வருகின்றார்.

4. மணிமாலா தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை ______ திறம்பட யோசித்துச் செய்வாள்.

5. விடாமுயற்சியுடன் உழைப்பவர்கள் எதிர்காலத்தில் ______ நிறைந்த வாழ்க்கை வாழ்வர்.




## இடுபணி 2

**இணைமொழிக்கு ஏற்ற பொருளை எழுதுக.**

1. குற்றம் குறை - ______
2. உற்றார் உறவினர் - ______
3. சொத்து சுகம் - ______
4. ஆற அமர - ______
5. இரவு பகல் - ______

## இடுபணி 3

**இணைமொழிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

- ஆற அமர
- குற்றம் குறை
- இரவு பகல்
- உற்றார் உறவினர்
- சொத்து சுகம்

## வளப்படுத்துதல்


**படத்திற்குப் பொருத்தமான இணைமொழியை எழுதுக.**











## குறைநீக்கல்


**பொருத்தமான இணையுடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| ஆற அமர | ஓய்வில்லாமல் / தொடர்ந்து |
| இரவு பகல் | நெருக்கமானவர்களும் / சுற்றத்தாரும் |
| சொத்து சுகம் | தவறும் குறையும் |
| குற்றம் குறை | நிதானமாக / பரபரப்பின்றி |
| உற்றார் உறவினர் | வசதியுடன் |

# தொகுதி 6 பாதுகாப்பு

## பாடம் 1 எங்கும் பாதுகாப்பு

கலந்துரையாடி கூறுக.






**இடுபணி 1**


**சூழலில் காணப்படும் பாதுகாப்புப் பற்றிய கருத்துகளையும் எண்ணங்களையும் பண்புடன் கூறுக.**

1.2.3 சூழலையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.


இடுபணி 2

சூழலையொட்டி உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.

அ)




ஆ)



# பாதுகாப்பாய் வாழ்வோம்



## வாசித்து அறிக.

### வீடு



வீட்டுக்குப் பாதுகாப்பு அவசியம். ஆதலால், எங்கள் வீட்டைச் சுற்றிலும் வேலி அமைத்திருக்கின்றோம். வீட்டின் முன்புறமும் வெளிப்புறமும் உள்ள இரும்புக் கதவுகளுக்குப் பூட்டு போட்டிருக்கிறோம். வீட்டின் உள்ளேயும் வெளியேயும் மறைக்காணியைப் **பொருத்தி** இருக்கிறோம். மேலும், வீட்டைப் **பாதுகாக்க** நன்றியுள்ள பிராணியான நாயையும் வளர்த்து வருகின்றோம்.

### பள்ளி



எங்கள் பள்ளி மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றது. எங்கள் பள்ளியில் நான்கு பாதுகாவலர்கள் இரவும் பகலும் காவல் **புரிகின்றனர்**. அவ்வப்போது பள்ளிக்குக் காவல் துறையினர் வந்து செல்கின்றனர். பள்ளியைச் **சுற்றிலும்** சுவர் வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி வளாகத்தில் பல இடங்களில் மறைக்காணி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் அவசர வேளையில் தொடர்பு கொள்ளப் பொதுத் தொலைபேசி அமைக்கப்பட்டிருக்கிறது.

### குடியிருப்புப் பகுதி



எங்கள் குடியிருப்புப் பகுதியில் பல பாதுகாப்புத் திட்டங்கள் **உருவாக்கப்பட்டுள்ளன**. எங்கள் வசிப்பிடத்தில் மொத்தம் 120 வீடுகள் உள்ளன. அந்த வசிப்பிடத்தின் பாதுகாப்பு கருதி இரண்டு பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் இங்கு வசிப்பவர்கள் சுழல் முறையில் ஒவ்வொரு நாளும் பாதுகாப்புப் **பணிகளை** மேற்கொண்டு வருகின்றனர். எங்கள் வசிப்பிடம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருப்பதை அனைவரும் உறுதி செய்து கொண்டிருக்கிறோம். பல இனம் வாழும் எங்கள் வசிப்பிடத்தில் சிலம்பம், சீலாட், தேகுவாண்டோ போன்ற தற்காப்புப் பயிற்சிகளும் **வழங்கப்பட்டு** வருகின்றன.

என்னை நுணுகுக

2.1.1 வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான, வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

## இடுபணி 2

**வண்ணத்திலான சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் கூறுக.**

## இடுபணி 3

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. வீடுகளுக்கு எவ்வகையான பாதுகாப்புகள் அமைக்கப்பட்டுள்ளன?
2. பள்ளியில் உள்ள பாதுகாப்பு விவரங்களைப் பற்றிக் கூறுக.
3. குடியிருப்புப் பகுதியில் உள்ள பாதுகாப்பு முறைகள் பற்றி விவரித்துக் கூறுக.
4. சாலையில் நீ கண்ட பாதுகாப்புகள் பற்றி விளக்கிக் கூறுக.
5. ஒரு மாணவனுக்கு வீட்டிலும் பள்ளியிலும் தேவையான பாதுகாப்புகள் யாவை?

## வளப்படுத்துதல்

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**



சீனப் பெருஞ்சுவர்



ஆபாமோசா கோட்டை

உலக அதிசயங்களில் ஒன்றாகும். இப்பெருஞ்சுவர், சீனப் பேரரசை எதிரிகளிடமிருந்து காப்பதற்காகக் கட்டப்பட்ட அரணாகும். பெருஞ்சுவர் என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட இச்சுவர் சின் சி ஷூவாங் எனும் சீனப் பேரரசரால், மிங் வம்சத்தினர் வாழ்ந்த காலத்தில் கட்டப்பட்டது.

வரலாற்றுப் புகழ்பெற்ற மலாக்கா மாநிலத்தில் இக்கோட்டை அமைந்துள்ளது. இது போர்த்துக்கீஸியர்களால் கட்டப்பட்டது. 1511ஆம் ஆண்டு மலாக்காவைக் கைப்பற்றிய போர்த்துக்கீஸியர்கள் இக்கோட்டையைக் கட்டினர். ஏறக்குறைய 5 மாதங்களில் இதனைக் கட்டி முடித்தனர். கடல் மார்க்கமாக வரும் எதிரிகளை அடையாளம் காணவும் எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவும் போர்த்துக்கீசியர்கள் இக்கோட்டையைக் கட்டினர்.

## பாடம் 3 அச்சமின்றி வாழ்வோம்



### கடிதம் எழுதுக.

அறிவழகன் த/பெ பாலன்,
எண் 10, பெஸ்தாரி கிராமம்,
42700 பந்திங்,
சிலாங்கூர்.

---

கிராமத் தலைவர்,
பெஸ்தாரி கிராமம்,
42700 பந்திங்,
சிலாங்கூர். 15 நவம்பர் 20□□

ஐயா,

<u>பெஸ்தாரி கிராம இளைஞர்களின் தகாத நடவடிக்கை</u>

வணக்கம். நான் அறிவழகன் த/பெ பாலன். நான் பெஸ்தாரி கிராமத்தில் கடந்த 20 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நமது கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் சிலருடைய நடவடிக்கைகள் மனம் திருப்தியளிக்கும் வகையில் இல்லை. சில இளைஞர்களின் தகாத செயல்கள் என் மனத்தைப் பாதித்துள்ளன. என் மன ஆதங்கத்தை உங்களிடம் தெரிவிக்கவே இந்த மடலை எழுதுகிறேன்.

2. இன்றைய இளைஞர்கள்தாம் எதிர்காலத் தலைவர்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு சில இளைஞர்கள் செய்கின்ற தவற்றினால் பிற இளைஞர்களும் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது. கடந்த சில வாரங்களாக ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் குறிப்பிட்ட சில இளைஞர்கள் நம் கிராமத்தில் இருக்கின்ற காலி வீட்டில் தஞ்சம் புகுகின்றனர். புகைபிடிப்பது, மது அருந்துவது, சூதாடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தக் காலி வீட்டுக்கு அருகில்தான் எங்களுடைய வீடும் அமைந்திருக்கின்றது. பல வேளைகளில் அவ்விளைஞர்கள் கூச்சலிட்டுக் கொண்டும் தகாத வார்த்தைகளைப் பேசிக் கொண்டும் இருக்கின்றனர். நள்ளிரவு வரை சில நாள்களில் அங்கேயே இருக்கின்றனர். இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு எங்களால் இருக்க முடியவில்லை.

3.4.1 130 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

3. எங்களுக்கு ஒவ்வொரு நாளும் அச்சமும் பயமும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. எனவே, கிராமத் தலைவர் என்ற முறையில் தாங்கள் இந்த இளைஞர்களின் தகாத செயல்களுக்கு முடிவு கட்ட வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.


நன்றி, வணக்கம்.

இக்கண்,
அறிவழகன்
(அறிவழகன் த/பெ பாலன்)
குடியிருப்பாளர்,
பெஸ்தாரி கிராமம்.

## இடுபணி 1

**அலுவல் கடிதத்தை ஆராய்ந்து பின்வரும் குறிப்புகளுக்கேற்ப வகைப்படுத்தி எழுதுக.**


எ.கா: விளிப்பு - ஐயா



## இடுபணி 2

**பின்வரும் குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 130 சொற்களில் ஓர் அலுவல் கடிதம் எழுதுக.**


தலைப்பு:
உமது பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் 'தமிழர் விழா' எனும் கருப்பொருளில் கலைநிகழ்ச்சி ஒன்றனை ஏற்பாடு செய்துள்ளது. அவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உமது பள்ளி முதல்வருக்கு ஒரு கடிதம் எழுதுக.




### அறிந்து கொள்க

**அலுவல் கடிதத்தின் அமைப்பு முறை**

1. அனுப்புநரின் முகவரி
2. இடைக்கோடு இடுதல்
3. பெறுநரின் பெயர், முகவரி
4. வலப்புறம் தேதி எழுதுதல்
5. விளிப்பு எழுதுதல்
6. கருப்பொருள் அல்லது தலைப்பு எழுதிக் கோடிடுதல்
7. முன்னுரைப் பத்தி எழுதுதல் (எண் இடவேண்டியதில்லை)
8. கருத்துப் பத்திகளை 2 என எண்ணிட்டுத் தொடங்கி, பிற பத்திகளுக்கு 3, 4, 5 என்று எண்ணிட்டு எழுதுதல்.
9. முடிவுரைப் பத்தியை எழுதுதல்.
10. எழுதியவரின் பெயர் மற்றும் கையொப்பம் இடுதல்
11. பதவி, இயக்கத்தின் பெயர்



# இலக்கணம்

## வினாவெழுத்துகளை அறிக.



வினா எழுத்துகள் 5.
அவை எ, ஏ, யா, ஆ, ஓ ஆகும்.

இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.

எ, யா - சொல்லின் முதல் எழுத்தாக வரும்
எ.கா: **எ**து? **யா**து?

ஆ, ஓ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்.
எ.கா: அவனா? (அவன் + **ஆ**)
அதுவோ? (அது + **ஓ**)

ஏ - சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.
எ.கா: ஏன் சென்றாய்?
அவன் செய்தது நல்லதுதானே?
(நல்லது + தான் +**ஏ**)

### இடுபணி 1

**வாக்கியங்களில் வினா எழுத்துகளைக் கொண்ட சொற்களை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

**எ.கா:**
உன் நண்பனா உன்னைச் சந்தேகித்தான்? என்று கலையரசன் வினவினான்.
நண்பனா = நண்பன் + ஆ

1. “இவற்றுள் உன் புத்தகம் எது?” என்று ஞானவள்ளி தன் தங்கையிடம் கேட்டாள்.
2. அச்சிறுவனின் பெற்றோர் யார்?
3. “நீ ஏன் என் தம்பியை அடித்தாய்?” என்று புகழேந்தி கோபமாகக் கேட்டான்.
4. “நீதான் அந்தக் கள்வனோ?” எனக் காவல் துறை அதிகாரி கேட்டார்.
5. “தேர்வுக்கு முன் யாது செய்ய வேண்டும்?” என்று மாணவர்கள் வினவினர்.
6. “நீ இங்கு வந்த நோக்கம் என்ன?” என்று குரு தம் சீடனிடம் கேட்டார்.

5.1.2 வினாவெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


## இடுபணி 2

**பொருத்தமான வினாச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

1. “ ____________ (யார், ஏன்) கல்வியின் அவசியத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்?” என்று ஆசிரியர் விளக்கினார்.
2. “உன்னுடைய சகோதரன் ____________ ?” (எது, யார்)
3. “ ____________ (உன்னிடம்தானே, உன்னிடம்தானோ) அந்தப் பரிசைக் கொடுத்தேன்?” என்றான் பொன்முடி.
4. “மேசையின் மேல் வைத்திருந்த எழுதுகோல்கள் ____________ ?” (என்ன, எங்கே) என இந்திரா கேட்டாள்.
5. “தமிழ் உயிர் எழுத்துகள் ____________ ?” (யாது, யாவை) என்று அப்பா தம்பியிடம் கேட்டார்.
6. “உன் செல்லப் பிராணி ____________ ?” (யார், யாது) என்று தங்கை கேட்டாள்.
7. “ ____________ (ஏது, ஏன்) உன் நண்பர்கள் உன்னை விட்டுப் பிரிந்தனர்?” என்று அம்மா சுகந்தியிடம் கேட்டார்.
8. “என்னை ____________ (நீதானோ, நீதானே) இந்த விருந்து நிகழ்ச்சிக்கு வரச் சொன்னாய்?” என்று சந்திரமதி வினவினாள்.

## வளப்படுத்துதல்

**வினாச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**




## குறைநீக்கல்

**வினாவெழுத்துகளைக் கொண்டு வினாச் சொற்களை உருவாக்குக.**

எ → ____________ ____________ ____________

ஏ → ____________ ____________ ____________

யா → ____________ ____________ ____________


ஆ → ____________ ____________ ____________

ஓ → ____________ ____________ ____________

# தொகுதி 7 குடியியல் போற்றுவோம்

## பாடம் 1 சமாதானம் தேவை

செவிமடுத்திடுக.




# உலக அமைதி

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். உலகம் சமாதானம் அடைய வேண்டும். உலக மக்களிடையே சமத்துவம் நிலவ வேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. தனி ஒரு மனிதனின் சமாதானத்தின் மூலம் இந்த உலகமே சமாதானம் அடைய வேண்டும்.

உலக நலமும், தேச வளமும் குடும்பச் செழிப்பும் ஒரு தனி மனிதனின் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றிலிருந்துதான் தொடங்குகின்றன. உலகிலுள்ள ஒவ்வோர் உயிரும் சமாதானம் அடைந்தால் உலகம் கண்டிப்பாகச் சமாதானம் அடையும். அதே போல, நாம் ஒருவரை ஒருவர் மதித்து, அரவணைத்து ஆதரவு நல்கி, ஒருமித்த சிந்தனையோடு பழகினால் உலகில் சமத்துவத்தோடு சகோதரத்துவமும் மேலோங்கும்.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதும், புரிந்துணர்வுடன் பழகுவதும், குற்றங்குறைகளை ஒரு பொருட்டாகக் கருதாமல் இருப்பதும், உலக இயல்பைப் புரிந்து நடப்பதும் அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். ஒரு தனி மனிதனின் சமாதானத்தின்வழி அந்தக் குடும்பம் சமாதானம் அடைகின்றது. ஒரு குடும்ப சமாதானம் ஒரு நாட்டின் சமாதானத்திற்குப் பாதை அமைக்கிறது. ஒரு நாட்டின் சமாதானம் உலக சமாதானத்திற்கு வித்திடுகிறது.

என்னை நுணுகுக

1.3.1 செவிமடுத்த உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுவர்.

**இடுபணி 1**

**செவிமடுத்த உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுக.**

**இடுபணி 2**

**'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' எனும் தொடர் உணர்த்தும் தகவலை விளக்குக.**

**இடுபணி 3**

**உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுக.**

வாழ்வது ஒரு முறை வாழ்த்தட்டும் தலைமுறை என்பார்கள். வாழ்க்கை என்பது நமக்கு நாமே எழுதும் கடிதம் போன்றது, ஒவ்வொரு பக்கத்தையும் இரசித்து எழுத வேண்டும். அப்பொழுதுதான் நம் கதை நமக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும். நமது கதையில் வரும் இன்பங்களும் துன்பங்களும் அனுபவம் எனும் தூரிகையால் வரையப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமது எண்ணம், சொல், செயல் ஆகியவையே நமது வாழ்க்கையின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று பாடுவதுகூட நமது எண்ணம் உயர்வாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். 'நீரளவே ஆகுமாம் நீராம்பல்' என்பது நீரின் அளவைப் பொருத்துத்தான் தாமரை உயர்கின்றது என்பதை விளக்குகின்றது. அதுபோல நமது எண்ணத்தைப் பொருத்துத்தான் நமது வாழ்வும் அமைகின்றது. மனம் அது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது போல, மனம் செம்மைப்பட வேண்டுமானால் அனுபவங்கள் பாடம் நடத்த வேண்டும். நமது பேச்சில் நாம் கவனம் வைத்தால் பல தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

இரண்டு இடத்தில் பேசாதீர்கள்.
ஒன்று முட்டாள்களின் மத்தியில்,
மற்றொன்று புத்திசாலிகளின் மத்தியில்.
ஏனென்றால் இரண்டு தரப்பினரும் நமது கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இதுவும் அனுபவத்தின் வெளிப்பாடுதான். நம்முடைய பேச்சை அனைவரும் கேட்க வேண்டும். கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என்று எண்ணுவது தவறு. பல வேளைகளில் நமது பேச்சை நாமே கேட்காதபோது பிறர் மட்டும் கேட்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது.

நாம் நமது செயலில் கவனம் வைத்தால் பல துன்பங்களிலிருந்து விடுபடலாம். பிறருடைய புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் வசப்படாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பல அவமானங்களுக்குப் பிறகு ஒரு தெளிவு பிறக்கின்றது.

மூலம்: உயர்ஞான தீபம், (ஜூலை 2019)

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியிலுள்ள தகவலை விளக்கிக் கூறுக.**




பெண்கள் உலகின் கண்கள் என்பர். உலகில் பெண்களின் சாதனைகள் அளப்பரியது எனலாம். சமைத்திடும் கரங்களும் சரித்திரம் படைத்திட வேண்டும் என்பது பாரதியின் கனவாக இருந்தது. அந்தக் கனவு நனவாகி விட்டது என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். பெண்கள் வேலைக்குச் செல்வதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் மறுத்திட இயலாது.



பெண்கள் வேலைக்குச் செல்வதால் வீட்டின் பொருளாதாரம் மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரமும் உயர்வடைகின்றது. மேலும், பெண்கள் வேலைக்குச் செல்வதால் குடும்பத் தேவைக்கு மிஞ்சிய பணத்தைச் சேமித்து வைக்க முடிகின்றது. அப்பணம் ஆபத்து அவசர வேளைகளில் உதவும். மேலும், பிறரிடம் உதவி கேட்டு கையேந்த வேண்டியிருக்காது. பெண்கள் தங்களுடைய பொது அறிவையும் பட்டறிவையும் பெற்று, நலமிகு குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள வழிவகுக்கின்றது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்குத் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இதன்வழி பிற குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க முடியும். குடும்பத்தில் கணவனோடு இணைந்து பணிபுரியும் பெண்களால் குடும்பச் சுமையைக் குறைக்க முடிகிறது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது போல ஒத்த சிந்தனையுடன், ஒருமித்த கருத்துடன் குடும்ப நலன் கருதி கணவனும் மனைவியும் செயல்பட்டால் நல்லதொரு குடும்பம் உருவாகும் என்பது திண்ணம். அன்பான, பண்பான, ஆரோக்கியமான குடும்பப் பெண்களால் மட்டுமே நல்வாழ்வுக்கு வழிகாட்ட முடியும். எனவே, பெண்கள் தங்களது உடல் நலம், மன நலம், அறிவு நலம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொண்டு குடும்பச் சேவையையும் சமூகச் சேவையையும் சீராக, சிறப்பாகச் செய்ய விழைவோமாக.

## பாடம் 2 சுய கட்டுப்பாடு

### வாசித்து அறிக.

பெற்றோர் தம் பிள்ளைகளுக்குச் சுய கட்டுப்பாட்டு முறையினைக் கற்பித்துப் பயிற்றுவித்தல் வேண்டும். சுய கட்டுப்பாடு என்பது, ஒருவன் தன் மனச்சான்றின்படி ஒரு கொள்கையை உருவாக்கி, அதற்குச் சில ஒழுங்குகளை விதித்து, அதன்படி தன்னை அடக்கி ஆளுகின்ற மனப்பான்மையேயாகும்.

பொதுவாகப் பிள்ளைகளுக்கு ஒழுங்கு முறைகளும் அவற்றுக்கான கட்டுப்பாடுகளும் அவசியம் தேவைப்படுகின்றன. ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாமல் அவர்கள் இருப்புக் கொள்ளாத நிலையை உடையவர்களாய் இருக்கிறார்கள். கட்டுப்பாடுகளை உடையவர்களாகவும், அவற்றைப் பின்பற்றுகிறவர்களாகவும் பிள்ளைகளைப் பழக்குவது பெற்றோரின் முக்கியக் கடமையாகும்.




பிள்ளைகளை ஒழுங்கு முறையோ, கட்டுப்பாடோ இல்லாமல் விட்டுவிட்டால், அவர்கள் தங்கள் போக்கில் சென்று தடுமாறிச் சீர்கெட்டு விடுவார்கள். எனவே, பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கட்டுப்பாட்டை உணர்த்த வேண்டியது அவசியம்.

பிள்ளைகளுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாட்டு வரையறைகள் மிகவும் அதிகமானவையாகவோ மிகவும் குறைந்தவையாகவோ இருத்தல் கூடாது. பிள்ளைகளின் வயதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளின் வயது நிலைக்கேற்பக் கட்டுப்பாடுகளை விதித்தல் வேண்டும்.

பெற்றோரின் அன்பும் கட்டுப்பாடும்தான் நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளை உருவாக்குகின்றன. எனவே, பெற்றோரின் சிறந்த வழிகாட்டலே நன்மகவை உருவாக்குகிறது என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்க்கப்படும் குழந்தை ஊதாரியாகி விடுகின்றது. ஒருவன், தன்னை முழுமையாக அறிந்து கொள்ள சுய கட்டுப்பாடு வழிவகுக்கின்றது.

2.3.1 வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்காண்பர்.

## இடுபணி 1

**மௌனமாக வாசித்திடுக. பின் வாசிப்புப் பகுதியின் கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்காண்க.**

## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. சுய கட்டுப்பாடு என்றால் என்ன?
2. பெற்றோர்கள் ஏன் பிள்ளைகளுக்குச் சுய கட்டுப்பாட்டினைக் கற்றுக் கொடுக்க வேண்டும்?
3. சுய கட்டுப்பாட்டின் வரையறை பற்றி விளக்குக.
4. இறுதிப் பத்தி உணர்த்தும் கருத்து என்ன?
5. நீர் சுய கட்டுப்பாடு உள்ளவரா? விளக்குக.

## இடுபணி 3

**ஆப்ரஹாம் லிங்கன் எழுதிய கடிதத்தின் கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்காண்க.**



என் பிள்ளைக்குத் தன்னம்பிக்கையைச் சொல்லிக் கொடுங்கள். வாழ்வின் வெற்றியையும் தோல்வியையும் சரிசமமாக மகிழ்ச்சியுடன் அவர் ஏற்கட்டும். கடுமையான உழைப்பால் பெறும் ஒரு வெள்ளி நாணயம் நூறு தங்க நாணயங்களைவிட மேல் என்று அறியட்டும். வெற்றி பெற இயலாமல், உதிர்ந்த கண்ணீருக்காக வெட்கமுறத் தேவையில்லை என்று அவருக்குச் சொல்லுங்கள். தம் மீது உறுதியாக நம்பிக்கை கொள்ளுமாறு அவருக்கு எடுத்துரையுங்கள். இவ்வுலகமெல்லாம் அவரை எதிர்த்து நின்றாலும் கும்பலிலேயே பத்தோடு பதினொன்றாக அவர் ஆகக் கூடாது. தமது சொந்தச் செயல்களின் மூலமாகத்தான் பெருமை சேர வேண்டும் என்று எடுத்துரையுங்கள்.

தங்களன்புள்ள,
ஆப்ரஹாம் லிங்கன்


## வளப்படுத்துதல்

**கருத்துரையில் காணும் கருப்பொருளையும் கருச்சொல்லையும் அடையாளங்காண்க.**





ஒழுக்கம் மாணவர்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். காலந்தவறாமை, நேர்மை, மரியாதை, பணிவு போன்றவை ஒழுக்கமுள்ள மாணவன் கடைப்பிடிப்பவையாகும்.



நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால் சரிவிகித உணவு முறையைக் கையாள வேண்டும். நாம் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உணவுக் கூம்பின் அடிப்படையில் உணவு உட்கொள்ள வேண்டும்.

## குறைநீக்கல்

**கருப்பொருளுடன் தொடர்புடைய கருச்சொற்களை அடையாளங்காண்க.**

**பள்ளியில்**

பாட்டும் கதையும் படித்து வா!
பண்பைக் கடைப்பிடித்து வா!
நாட்டுப் பற்றை வளர்த்து வா!
நமது மொழியைக் கற்று வா!

**திருக்குறள்**

அன்பைப் பற்றிச் சொல்லுமே!
அறத்தை விளக்கிக் கூறுமே!
பண்பை எடுத்துக் காட்டுமே!
பணிவை உயர்வை ஊட்டுமே!

## பாடம் 3 கடமை அறிக

### கலந்துரையாடி எழுதுக.





3.1.1 • தலைப்பையொட்டி வாக்கியங்கள் எழுதுவர்.

## இடுபணி 1

**'நமது கடமை' எனும் தலைப்பில் அமைந்துள்ள சூழலுக்கு ஏற்ப வாக்கியங்களை உருவாக்கி எழுதுக.**

## இடுபணி 2

**'நல்லதொரு குடும்பத்தை எவ்வாறு உருவாக்குவது' எனும் தலைப்பையொட்டி வாக்கியங்கள் அமைத்திடுக.**



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.

சூழல்: ஓய்வு நேரத்தில் பள்ளிப் பூங்காவில் சுகுணா தன் நண்பர்களுடன் ஆசிரியர் போதித்த திருக்குறளையும் அதன் பொருளையும் பற்றிக் கலந்துரையாடுகின்றாள்.




4.1.1 • புகுமுக வகுப்பிற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.




## திருக்குறளும் பொருளும்

**செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்? (குறள் 420)**

செவியால் கேள்விச்சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன? உயிரோடு வாழ்ந்தாலும் என்ன?

**கருத்து :**
நாக்கின் சுவையை உணர்வதை விட கேள்வியாகிய அறிவுச் சுவையை உணர்வதே சிறப்பாகும்.

## இடுபணி 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.**

## இடுபணி 2

**திருக்குறளில் விடுபட்ட பகுதியை எழுதுக. பின் அதன் பொருளை எழுதுக.**

செவியின் ______ ______ மாக்கள்
______ ______ என்?

## இடுபணி 3

**திருக்குறள் உணர்த்தும் கருத்துகளைத் தெரிவு செய்க. சரி (✓) பிழை ( X ) என அடையாளமிடுக.**

1. அறிவுள்ள மக்களாலேயே உலகம் நிறைந்திருக்க வேண்டும். ______
2. இந்த உலகத்தில் மக்களைவிட மாக்களே அதிகமாக இருக்கின்றனர். ______
3. செவியால் கேட்டறியும் சுவைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். ______
4. கேள்விச் சுவையற்றோர் மாக்கள் எனவும் அவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் எனவும் கருதப்படுகின்றனர். ______
5. அறுசுவையை உணர்ந்து அனுபவித்து உண்பது குற்றமில்லை. ______
6. செவி உணவை நாடாமல் வாயுணர்வினை மட்டுமே உணவாக நாட வேண்டும். ______
7. செவியின் சுவை தெரியாமல் விலங்குகளைப் போல வாயின் சுவை மட்டுமே மக்களுக்குத் தெரிவதால் அவர்கள் மாக்கள் எனப்படுகின்றனர். ______
8. வாயால் நுகரும் இன்பத்தை மட்டுமே அறிபவன் மனிதன். ______

## வளப்படுத்துதல்

**திருக்குறளின் பொருளுக்கேற்ற சூழல் ஒன்றனை உருவாக்கி நடித்துக் காட்டுக.**

## குறைநீக்கல்

**சொல்லுக்கு ஏற்ற பொருளோடு இணைத்திடுக.**

| | |
|---|---|
| செவியின் | அறிவினையுடைய |
| சுவை | பகுத்தறிவற்றவர்கள் |
| உணரா | காதின் |
| உணர்வின் | இறந்தாலும் |
| மாக்கள் | என்ன |
| அவியினும் | ருசி |
| வாழினும் | தெரியாத |
| என் | வாழ்ந்தாலும் |



# தொகுதி 8 சமூக மேம்பாடு

## பாடம் 1 உன்னால் முடியும் தம்பி

### செவிமடுத்திடுக.

உன்னால் முடியும் தம்பி தம்பி
உனக்குள் இருக்கும் உன்னை நம்பி

உன்னால் முடியும் தம்பி தம்பி - அட
உனக்குள் இருக்கும் உன்னை நம்பி

தோளை உயர்த்து தூங்கி
விழும் நாட்டை எழுப்பு - உன்
தோளை உயர்த்து தூங்கி விழும் நாட்டை எழுப்பு
எதையும் முடிக்கும் இதயம் உன்னில் கண்டேன்
(உன்னால் முடியும்)

நாளைய நாட்டின் தலைவனும் நீயே
நம்பிக்கை கொண்டு வருவாயே
உனக்கென ஓர் சரித்திரமே
எழுதும் காலம் உண்டு
(உன்னால் முடியும்)

கல்லூரி பள்ளி இல்லாத ஊரை
கையோடு இன்றே தீ மூட்டுவோம்
கல்லாத பேர்கள் இல்லாத நாடு
நம்நாடு என்றே நாம் மாற்றுவோம்
இருக்கிற கோவிலை எல்லாம்
படிக்கிற பள்ளிகள் செய்வோம்
அறிவென்னும் கோபுரம் அங்கே நாம் காணுவோம்

வானம் உங்கள் கைகளில் உண்டு
ஞானம் உங்கள் நெஞ்சினில் உண்டு
நான் என்று எண்ணாமல்
நாம் என்று உறவு கொள்ளணும்
(உன்னால் முடியும்)
(புலமைப்பித்தன்)




என்னை நுணுகுக



1.3.2 செவிமடுத்த கவிதையிலுள்ள கருத்துகளைக் கூறுவர்.

## இடுபணி 1

**செவிமடுத்த கவிதையிலுள்ள கருத்துகளைக் கூறுக.**

## இடுபணி 2

**கவிதையைச் செவிமடுத்து வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. கவிதையை இயற்றியவர் யார்?
2. 'தோளை உயர்த்து தூங்கி விழும் நாட்டை எழுப்பு' என்று கூறுவதன் பொருளை விளக்குக.
3. எதைத் தீ மூட்ட வேண்டும் என்று கவிஞர் கூறுகின்றார்?
4. இக்கவிதையில் கவிஞரின் எதிர்பார்ப்புகள் யாவை?
5. இக்கவிதையின்வழி நீர் என்ன அறிந்து கொண்டீர்? விளக்குக.

## வளப்படுத்துதல்

**கவிதையின்வழி கவிஞர் உணர்த்தவரும் செய்தியைக் கூறுக.**

சின்னப் பயலே சின்னப் பயலே

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி - உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே - நீ
தரும் மகிழ்ச்சி

நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி - உன்
நரம்போடுதான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி

(- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்)



என்னை நுணுகுக

## குறைநீக்கல்

**'சின்னப் பயலே சின்னப் பயலே' கவிதையில் பின்வரும் வரிகள் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.**

1. ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
2. ஆசையோடு ஈன்றவளுக்கு
3. நரம்போடுதான் பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி

பாடம் 2

# பிள்ளை வளர்ப்பு

**உரக்க வாசித்திடுக.**



எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே! என்ற பாடல் வரிகள் ஓர் உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றன. பெற்றோரின் வளர்ப்பினைப் பொருத்துத்தான் பிள்ளைகளின் உடல் நலம், மன நலம், அறிவு நலம், ஆன்ம நலம் அமைகின்றது என்றால் அதை மறுக்க முடியுமா?

அன்பு கலந்த அணுகுமுறையினால் நல்ல பண்புள்ள பிள்ளைகளை உருவாக்க முடியும். உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதோடு நலமிகு கல்வியை வழங்கி, நன்னெறிப் பண்புகளை ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகள் சிறந்தவர்களாக விளங்குவர். என்ன செய்தால் சிறந்ததொரு பிள்ளையை உருவாக்க முடியும்?

தேவையான அளவு ஏற்புடைய சத்துகள் நிறைந்த, சரிவிகித உணவுகளைப் பிள்ளைகள் உட்கொள்வதை உறுதி செய்ய வேண்டும். பிள்ளைகளிடம் அன்பான, கனிவான, பண்பான, தெளிவான வார்த்தைகளைப் பேசி மனம் கவர வேண்டும். தவறுகள் செய்யும்பொழுது வன்முறையற்ற மிதமான கண்டிப்புடன் வழிநடத்த வேண்டும். நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு நல்லதொரு பொழுதுபோக்கை ஏற்படுத்தித் தர வேண்டும். பிள்ளைகளின் ஆய்வுச் சிந்தனையையும் ஆக்கச் சிந்தனையையும் வளர்க்க வாய்ப்புகள் வழங்க வேண்டும். மனமகிழ் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பிள்ளைகள் ஒழுக்க சீலர்களாக வளர்வதை உறுதிசெய்ய வேண்டும். தோழமைப் பண்புடன் பிள்ளைகளிடம் மனம் திறந்து பேச வேண்டும். அதன்வழி, பெற்றோர் பிள்ளைகள் உறவு வலுப்பெறும். இணக்கமும் புரிந்துணர்வும் மேலோங்கும்.

குடும்ப மேன்மைக்காகப் பொருளீட்டும் அதே வேளையில் பிள்ளைகளுக்கு இறை சிந்தனையை வழங்கத் தவறிவிடக்கூடாது. நற்பண்புகளையும் நற்சிந்தனைகளையும் வளர்க்கும் திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்று இறையுணர்வை ஏற்படுத்த வேண்டும். சமய போதனைகளை வழங்க வேண்டும். பிள்ளைகளின் ஆன்ம நலம் கருதி நேரத்தை அவர்களுடன் செலவு செய்வது சாலச் சிறந்த செயலாகும்.

என்னை நுணுகுக


2.1.1 வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

## இடுபணி 2

**பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு தொடர்பான கருத்துகளைக் குமிழி வரைபடத்தில் எழுதி வாசித்திடுக.**




## இடுபணி 3

**துன் வீ.தி. சம்பந்தன் தொடர்பான தகவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**



## சமூகச் சேவையாளர்! இவரைத் தெரியுமா?

தேசிய நிலநிதிக் கூட்டுறவுக் கழகத்தைத் தோற்றுவித்தவர்.

ம.இ.கா. தேசியத் தலைவராகவும் மலேசிய அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

துன் வீ.தி. சம்பந்தன் அவர்கள் மலேசியாவில் ஒரு நாள் பிரதமராகவும் பதவி வகித்துள்ளார் என்றால் நம்புவீர்களா?

பறவைக்கும் கூடு உண்டு, தோட்டப் பாட்டாளிகளுக்குக் குடியிருக்க ஒரு வீடு இல்லையே! என்று முழங்கியவர்.


# பாடம் 3 மனித நேயம்

## தொகுத்து எழுதுக.



எண்ணத்தில் மனித நேயம்

தன்னைப் போலவே பிறரும் தங்களுடைய வாழ்க்கையில் முன்னேற வேண்டும்; மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று எண்ணுதல்.




சொல்லில் மனித நேயம்

நாம் அனைவரும் கண்டிப்பாக மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் வாழ்வோம் என்று நம்பிக்கையளித்தல்.




செயலில் மனித நேயம்

பிறருடைய துன்பத்திலும் இன்பத்திலும் பங்கு கொண்டு எந்தவொரு பிரதிபலனும் பாராமல் செயல்படுதல்.

- உதவி செய்தல், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழுதல்.
- தன்னுயிரைப் போல பிற உயிர்களையும் நேசித்தல்; அன்பு காட்டுதல்.
- பொறுமை, இரக்கம், கருணையுடன் பிறரை அணுகுதல்.

### இடுபணி 1

**மனித நேயம் தொடர்பான கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

## இடுபணி 2

**கோபம் தொடர்பான கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**கோபம்**

| காரணம் | பாதிப்பு | தவிர்க்கும் முறை |
| --- | --- | --- |
| குடும்பப் பொருளாதாரச் சிக்கல் | குடும்பத்தில் நிம்மதி இழக்க நேரிடும் | விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் |
| குடும்பத்தில் புரிந்துணர்வு, ஒற்றுமை இல்லாமை | உறவுகளில் விரிசல் ஏற்படும் | யோகப் பயிற்சி, தியானம் மேற்கொள்ளுதல் |
| பிள்ளைகளின் மூலம் ஏற்படும் மன உளைச்சல் | பல நோய்களுக்கு ஆளாக நேரிடும் | கோபப்படும்பொழுது சிந்தனையை வேறுபக்கம் திருப்புதல் |

## இடுபணி 3

**‘ஒரு குடிமகனின் கடமை’ தொடர்பான கருத்துகளைப் படங்களின் துணையுடன் தொகுத்து எழுதுக.**



## பாடம் 4 இலக்கணம்

### வலிமிகும் இடங்கள் அறிக.

- சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.

- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்.

குறிப்பு: **நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்**
**வருமொழி - அடுத்து நிற்கும் சொல்**

- இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) க்குப் பின் க், ச், த், ப் வரின் வலிமிகும்.

எ.கா:- இராமனை + பார் = இராமனை**ப்** பார்
கையை + தட்டு = கையை**த்** தட்டு

- நான்காம் வேற்றுமை உருபு (கு) க்குப் பின் க், ச், த், ப் வரின் வலிமிகும்.

எ.கா:- அவனுக்கு + சொல் = அவனுக்கு**ச்** சொல்
விலைக்கு + தந்தான் = விலைக்கு**த்** தந்தான்.

5.4.1 • இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**பின்வரும் கூற்றுகளில் இடம்பெற்றுள்ள இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப் பின் வலிமிகுந்துள்ள சொற்றொடர்களை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**



பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்

கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையைப் பிள்ளைகளின் கல்விக்குச் செலுத்தினால் நன்மையைக் கொடுக்கும்.




நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

போரிட வாருங்கள். உங்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவதோடு வாழ்க்கைக்குப் புதிய பாதையைக் காட்டுகிறேன்.

## இடுபணி 2

**பின்வரும் சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

- கடைக்குச் சென்றோம்
- பலகாரங்களைச் சாப்பிட்டேன்
- பாடத்தைப் போதித்தார்
- வேலைக்குச் சென்றார்
- தகவலைச் சொன்னாள்
- தலைவருக்குக் கொடுத்தார்



## இடுபணி 3

**பொருத்தமான வேற்றுமை உருபைத் தெரிவு செய்து வாக்கியத்தை நிறைவு செய்க.**
**எ.கா:**

- ஒவ்வொரு வாரமும் அம்மா **கோவில்** (ஐ, கு) செல்வார்.
- ஒவ்வொரு வாரமும் அம்மா **கோவிலுக்குச்** செல்வார்.

1. இறைவன் **நல்லவர்கள்** (ஐ, கு) சோதிப்பான். ஆனால், கைவிடமாட்டான்.
2. பல் மருத்துவர் தங்கையின் **பல்** (ஐ, கு) பிடுங்கினார்.
3. சாலையில் நாம் **வாகனம்** (ஐ, கு) கவனமாகச் செலுத்த வேண்டும்.
4. சோழன் **தன்** (ஐ, கு) உதவி செய்த **நண்பர்கள்** (ஐ, கு) போற்றினான்.
5. பள்ளியில் நடைபெற்ற **ஆண்டுக் கூட்டம்** (ஐ, கு) அதிகமான பெற்றோர்கள் வந்திருந்தனர்.

## வளப்படுத்துதல்

**வேற்றுமை உருபு ஐ, கு ஆகிய உருபுகளைக் கொண்டுள்ள 10 சொற்களை உருவாக்கு; பின்னர் அவற்றை வலிமிகுமாறு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

**எ.கா:** பழம் + ஐ = பழத்தை

- நான் ஒவ்வொரு நாளும் மதிய வேளையில் ஒரு துண்டு பப்பாளிப் பழத்தைச் சாப்பிடுவேன்.

## குறைநீக்கல்

**அ. சேர்த்தெழுதுக.**

1. மலை + ஐ = ____
2. தோட்டம் + கு = ____
3. சட்டம் + ஐ = ____
4. கோவில் + கு = ____
5. மலர் + ஐ = ____
6. புத்தகம் + ஐ = ____
7. கடல் + கு = ____
8. தம்பி + கு = ____
9. வீடு + ஐ = ____
10. அரசன் + கு = ____
11. ஏழை + ஐ = ____
12. உறவு + கு = ____

**ஆ. பிரித்தெழுதுக.**

1. தண்ணீரை = ____
2. மகனுக்கு = ____
3. குயவனை = ____
4. தோட்டத்தை = ____
5. ஏழைக்கு = ____
6. இறைவனை = ____
7. மனைவிக்கு = ____
8. கோழிக்கு = ____
9. தமிழை = ____
10. அப்பாவுக்கு = ____
11. தலைவனை = ____
12. சிலைக்கு = ____

# தொகுதி 9 அறிவியல் யுகம்

## பாடம் 1 இளம் விஞ்ஞானி

### கலந்துரையாடி கூறுக.

சூழல்: அமெரிக்காவின் உயரிய இளம் விஞ்ஞானி விருதை இந்திய வம்சாவளி மாணவி கீதாஞ்சலி வென்றுள்ளார். அவருடன் தோழி பவித்திரா உரையாடுகின்றார்.

**பவித்திரா:** வணக்கம் கீதா. நலமா? முதலில் உனது சாதனைக்காக எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கீதாஞ்சலி:** வணக்கம் பவி. நலம். உனது வாழ்த்துகளுக்கு மிக்க நன்றி.

**பவித்திரா:** கீதா... உனது கண்டுபிடிப்பைப் பற்றிச் சற்று விளக்குவாயா?

**கீதாஞ்சலி:** நிச்சயம் விளக்குகிறேன். காரீயத்தால் தூய்மைக்கேடு அடைந்துள்ள தண்ணீரை எளிதில் கண்டுபிடிக்கும் 'தெத்தீஸ்' எனும் கருவியை உருவாக்கினேன். இந்தக் கருவி மிகத் துல்லியமாகவும் மிக விரைவாகவும் திறன்பேசி செயலி மூலம் கண்டுபிடிக்கும் ஆற்றல் கொண்டதாகும்.

**பவித்திரா:** ஓ... அப்படியா! இந்தக் கண்டுபிடிப்பினால் என்ன நன்மை கீதா?

**கீதாஞ்சலி:** தூய்மைக்கேடு அடைந்துள்ள தண்ணீரைக் குடிப்பவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் சில குறைபாடுகளுக்கு ஆளாக நேரிடும். அதனைத் தடுக்க இக்கருவி துணைபுரியும்.

**பவித்திரா:** சிறந்த கண்டுபிடிப்பு கீதா. இக்கண்டுபிடிப்பினால் உனக்குப் பல பாராட்டுகள் கிடைத்திருக்குமே!

**கீதாஞ்சலி:** இளம் விஞ்ஞானி எனும் விருதை வழங்கி கௌரவிக்கப்பட்டேன். மேலும் இருபத்தைந்தாயிரம் டாலர் பரிசுத் தொகையும் கிடைத்தது.

**பவித்திரா:** வாழ்த்துகள் கீதா. மிக்க மகிழ்ச்சி.







தெத்தீஸ் கருவி (Tethys Device)

என்னை நுணுகுக

1.3.3 • செவிமடுத்த உரையாடலிலுள்ள தகவல்களைக் கூறுவர்.

## இடுபணி 1

**செவிமடுத்த உரையாடலிலுள்ள தகவல்களைக் கூறுக.**

## இடுபணி 2

**நமது அன்றாட வாழ்க்கையில் அறிவியல் சாதனங்களின் பங்களிப்புப் பற்றிய உரையாடலிலுள்ள தகவல்களைக் கூறுக.**



வணக்கம் நண்பர்களே! இன்றைய உங்களின் பணிகள் எப்படி இருந்தன? இன்று நான் சுமார் ஐம்பது துணிகளைச் சலவை செய்தேன். இன்று மட்டும் மூன்று முறை இயக்கப்பட்டேன்.

சலவை இயந்திரம்




என்னைப் போட்டுக் சுழற்றி எடுத்துவிட்டார்கள். இன்று நமது இல்லத்திற்கு விருந்தினர்கள் வந்ததால் பலவிதமான சமையல்கள் நடைபெற்றன. எனக்குத்தான் ஓய்வே இல்லை.

அரைவு இயந்திரம்



இன்று என்னுடைய சூடு எனக்கே பொறுக்கவில்லை. ஆளுக்கு ஆள் காலையிலிருந்து என்னைத் தேய்த்து எடுத்துவிட்டார்கள். அதில் ஒருவன் என்னைக் கீழே போட்டுவிட்டான். என் முதுகுப் பகுதி வலிக்கிறது.

ஸ்திரிப்பெட்டி



என்னை ஓர் அலைவரிசையில் வைக்கவில்லை. சிறுவர்கள் என்னை மாறி மாறி அங்கும் இங்கும் அலைக்கழித்தனர். 24 மணி நேரமும் எனக்கு ஓய்வே இல்லை.

தொலைக்காட்சிப் பெட்டி

## பாடம் 2 அறிவியல் வளர்ச்சி

### வாசித்து அறிக.

அறிவியல் மனித வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மனிதர்கள் தங்களது அன்றாடப் பணிகளை எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிக்க பல கருவிகள் **உருவாக்கப்பட்டுள்ளன**. வீட்டில் எல்லா இடங்களிலும் நாம் பயன்படுத்தும் அறிவியல் **சாதனங்களை** நம் கண் முன்னே கொண்டு வந்தால் இந்த உண்மை புரியும்.

மருத்துவத்துறையில் அறிவியல் **வளர்ச்சியால்** பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பல வகையான மருந்துகளும் மருத்துவக் கருவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. உடலிலுள்ள உள்ளுறுப்புகளில் ஏற்பட்டுள்ள **குறைபாடுகளைப்** படம் பிடித்துக் காட்டும் கருவிகளும், புதிய அறுவை சிகிச்சை முறைகளும் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களாகும்.

விவசாயத் துறையில் பல நவீன இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பயிர் செய்வதற்கும் அறுவடை செய்வதற்கும் பல எளிய கருவிகள் உருவாக்கப்பட்டு மிகுந்த **பலனை** ஏற்படுத்தி இருக்கின்றன. மேலும், நவீன இரசாயன உரங்கள், பயிர்கள் நன்கு செழித்து வளரவும், அதிகமான **விளைச்சலைத்** தரவும் பேருதவி புரிகின்றன.

போக்குவரத்துத் துறையிலும் அறிவியல் அரிய சாதனைகளைச் செய்துள்ளது. வானிலும், நீரிலும் நிலத்திலும் பயணிக்கக்கூடிய **புதுமையான** வாகனங்கள் உருவாக்கப்பட்டு மனமகிழ்வுடன் **பயணிக்க** வழிவகுத்துள்ளது. மேலும், மிக விரைவில் நமது இலக்கை அடைய இவ்வாகனங்கள் துணைபுரிகின்றன.








2.3.2 • வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்பர்.

### இடுபணி 1

**மௌனமாக வாசித்து வண்ணத்திலான சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் கூறுக.**

### இடுபணி 2

**மௌனமாக வாசித்து வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க.**

### இடுபணி 3

**பின்வரும் துறைகளில் அறிவியல் எப்படிப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதனைப் பின்வரும் மர வரைபடம் வழி விளக்குக.**

அறிவியல் வளர்ச்சி

| மருத்துவம் | விவசாயம் | போக்குவரத்து |
|---|---|---|
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |

### வளப்படுத்துதல்

**‘அல்பிரைட் நோபல்’ பற்றிய முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**



நோபல் பரிசை நிறுவிய அல்பிரைட் நோபல் தமது கடைசி காலத்தில் தாம் எழுதி வைத்த இறப்பு முறியின் அடிப்படையில் அவரது பெயரில் அந்த நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. செல்வந்தரின் மகனான அல்பிரைட் நோபல் படிப்பில் மிகுந்த கெட்டிக்காரராக விளங்கினார். தமது 16 ஆவது வயதிலேயே ஆங்கிலம், ஜெர்மன், ஸ்வீடன், பிரெஞ்சு, ரஷ்யன் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய வல்லமை பெற்றிருந்தார். நைட்ரோ கிளசரின் எனும் வேதியல் பொருளின் மீது ஆராய்ச்சியை மேற்கொண்டார். நைட்டிரோ கிளசரினுக்கு உள்ளே இருக்கும் கட்டுக்கடங்காத ஆற்றலைக் கண்டுபிடித்து, அதனைக் கட்டுப்படுத்திப் பாதுகாப்பாக வெடிக்கச் செய்ய முனைந்தார். இக்கண்டுபிடிப்புக்கு நோபல் லைட்டர் என்று பெயரிட்டு சுவீடன் அரசிடம் காப்புரிமையையும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து டைனமைட் தொழிற்சாலையை நிறுவினார். அவர் தமது கண்டுபிடிப்பான டைனமைட் உலக அழிவு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதை எண்ணி வருந்தினார். மக்கள் தம்மைத் தவறாக விமர்சிப்பதைக் கருத்தில் கொண்டு தமது பெயர் நல்ல பணியுடன் தொடர்பு பெற வேண்டும் என்று விரும்பித் தமது சொத்தை மனித குலத்துக்காகப் பணியாற்றும் மனிதர்களைத் தெரிவு செய்து விருதாக வழங்க வேண்டும் என்று இறப்புமுறி எழுதி வைத்தார்.

# பாடம் 3 இயந்திர மனிதன்

**உரையாடல் எழுதுக.**

சூழல்: வகுப்பறையில் அறிவியல் ஆசிரியரிடம் சங்கீதனும் ரவியும் தாங்கள் உருவாக்கவிருக்கும் கருவியைப் பற்றிக் கருத்து கேட்கின்றனர்.




3.4.2 130 சொற்களில் உரையாடல் எழுதுவர்.







## இடுபணி 1

**படத்தில் கொடுக்கப்பட்டுள்ள உரைகுமிழ்களை உரையாடல் வடிவில் எழுதுக.**

சூழல்:

-
-
-
-

## இடுபணி 2

**சூழலையும் குறிப்புகளையும் துணையாகக் கொண்டு 130 சொற்களில் உரையாடல் எழுதுக.**

சூழல்: அறிவியல் பாடத்தில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ள தமது தம்பிக்கு அப்பாடத்தில் சிறந்து விளங்குவதற்கான வழிகளை அக்காள் திவியா கூறுகின்றாள்.

- அதிக பயிற்சிகள் செய்தல்
- பரிசோதனையின்போது கவனம் செலுத்துதல்
- ஆசிரியரை அணுகி விளக்கம் பெறுதல்
- அறிவியல் தொடர்பான வலைத்தளங்களில் உலாவுதல்

## வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் விளம்பரத்தைப் பார்த்து அமுதனும் அவனது நண்பனும் உரையாடுகின்றனர். 130 சொற்களில் அவ்வுரையாடலை எழுதுக.**



பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடர்களையும் பொருளையும் அறிக.

சூழல் 1

கடந்த மாதம் நான் என் அப்பாவுடன் மோரிப் கடற்கரைக்குச் சென்றிருந்தேன். அன்று ஆடிப் பெருக்கு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. என் அப்பா என்னைச் சிறிது நேரம் கடற்கரையில் இருக்கும்படி கூறி கடலில் குளித்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்றார். நானும் கடற்கரையில் காத்துக் கொண்டிருந்தேன். 30 நிமிடங்களாகியும் அப்பாவைக் காணவில்லை. என்ன செய்வது? யாரிடம் சென்று கேட்பது என்று அறியாமல் தவித்தேன். எனக்குக் '**கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல**' இருந்தது. சிறிது நேரத்தில் அப்பா என் முன் தோன்றினார். அப்பொழுதுதான் எனக்கு உயிர் வந்தது.





சூழல் 2

கேத்தி நிறுவனத்தின் தலைமை அதிகாரிக்கும் துணை அதிகாரிக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. கருத்து வேறுபாடு பகைமையாக மாறியதால் இருவரும் **கீரியும் பாம்பும் போல** இருந்தனர். இருவருக்குமிடையே இருந்த பகைமை, நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது.

சூழல் 3

திரு. குமாரசாமி காலவே தோட்டத்தில் பால் மரம் சீவும் தொழில் புரிந்து வந்தவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள். அவரின் மனைவி சில ஆண்டுகளுக்கு முன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கடினமாக உழைத்தார். கூடுதல் நேரம் வேலை செய்து பொருளீட்டினார். பிள்ளைகள் ஐவரையும் நன்கு படிக்க வைத்தார். அவருடைய அயரா உழைப்பு வீண் போகவில்லை. பிள்ளைகள் பல்கலைக்கழகம் வரை சென்று படித்தனர். நல்ல வேலையில் அமர்ந்தனர். **ஒளியைக் கண்ட இருள் போல** அவருடைய துன்பங்கள் நீங்கின.




4.4.1
- புகுமுக வகுப்பிற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



சூழல் 4

வறுமைக்கு மத்தியிலும் தன்மானம் குறையாது சுந்தரம் தன் குடும்பத்தை வழிநடத்தி வந்தார். தொழிற்சாலையில் ஆள்குறைப்பின் காரணமாக அவருக்கு வேலையும் பறிபோனது. மேலும், தன் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் வீடும் பாதிப்புக்குள்ளானது. அவருக்கு ஏற்பட்டு வரும் துன்பங்கள் **எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல** தொடர்ந்து வந்து தாக்கினாலும் மனம் தளராது தொடர்ந்து போராடி வருகிறார்.

சூழல் 5

திடீரென வீட்டில் நுழைந்த கள்வர்களைச் சமாளிக்க இயலாது விமலா சிலையானாள். அவர்கள் தோற்றமும், அச்சுறுத்தும் பார்வையும் அவளை நடுநடுங்கச் செய்தது. மேலும், பெரிய கரிய உருவத்தில் நுழைந்த மற்றொரு கொள்ளையனைக் கண்டதும் **கருடனைக் கண்ட பாம்பு போல** பயந்து தரையில் சாய்ந்தாள்.



**உவமைத்தொடர்களும் பொருளும்**


- **கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல**
  - செய்வதறியாது தவித்தல்
- **கீரியும் பாம்பும் போல**
  - பகைமையுடன் இருத்தல்
- **ஒளியைக் கண்ட இருள் போல**
  - துன்பம் நீங்குதல்
- **எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல**
  - துன்பத்துக்குமேல் துன்பம்
- **கருடனைக் கண்ட பாம்பு போல**
  - பய உணர்வு

## இடுபணி 1

**சூழலில் கொடுக்கப்பட்டுள்ள உவமைத்தொடர்களை அறிந்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**உவமைத் தொடர்களுக்கு ஏற்ற பொருளைத் தெரிவு செய்து எழுதுக.**




1. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல
2. கீரியும் பாம்பும் போல
3. ஒளியைக் கண்ட இருள் போல
4. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல
5. கருடனைக் கண்ட பாம்பு போல

## வளப்படுத்துதல்

**ஏதேனும் ஓர் உவமைத்தொடருக்குச் சூழல் கதையை உருவாக்குக.**

## குறைநீக்கல்

**விளக்கத்திற்கு ஏற்ற உவமைத்தொடரை எழுதுக.**

1. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு குடும்பச் சுமை குறைதல்.
2. ஒரு துயரமான சூழலுக்குப் பிறகு மீண்டும் துன்பம் நிகழுதல்.
3. என்ன செய்வது? ஏது செய்வது? என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருத்தல்.
4. கருத்து வேறுபாட்டினால் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டிருத்தல்.
5. மிகுந்த பய உணர்வுடன் இருத்தல்.

# தொகுதி 10 விளையாடி மகிழ்வோம்

## பாடம் 1 ஹாக்கி விளையாட்டு

கலந்துரையாடுக.






**இடுபணி 1**

**ஹாக்கி விளையாட்டுத் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட மாதிரியைப் பயன்படுத்தி விவரங்கள் அறிய கேள்விகள் கேட்டிடுக.**

1.4.1 • பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்கள் அறியக் கேள்விகள் கேட்பர்.

## இடுபணி 3

**படங்களைப் பார்த்துப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்கள் அறியக் கேள்விகள் கேட்டிடுக.**





பல்வகை விளையாட்டுகள்






## வளப்படுத்துதல்

**படங்களைப் பார்த்துப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டிடுக.**






# பாடம் 2 விளையாட்டுப் பிரிவுகள்

**வாசித்து அறிக.**







விளையாட்டு என்பது பொழுது போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். விளையாட்டு ஒருவருடைய உடல், மன அமைதிக்கு வித்திடுகிறது. அமைதியான மனத்தில் அற்புதமான கருத்துகள் வெளிப்படுகின்றன.

விளையாட்டுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம். முதல் பிரிவு உள்ளக, வெளியக விளையாட்டு. இரண்டாம் பிரிவு திடல் தடப் போட்டி. மூன்றாம் பிரிவு குழு மற்றும் தனி விளையாட்டு.

இடங்களுக்கு உள்ளே விளையாடும் சதுரங்கம், கேரம், பரமபதம், தாயம், மேசைப்பந்து, பூப்பந்து போன்றவை உள்ளக விளையாட்டுகள் எனப்படுகின்றன. இடங்களுக்கு வெளியே விளையாடும் துடுப்பாட்டம், கூடைப்பந்து, வலைப்பந்து, எறிபந்து போன்றவை வெளியக விளையாட்டுகள் எனப்படுகின்றன.

விளையாடுகின்ற விளையாட்டைக் குழுவாக விளையாடினால் அது குழு விளையாட்டு எனப்படும். காற்பந்து, கூடைப்பந்து, எறிபந்து, கிட்டிப்புள், கிளித்தட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஓட்டம், சாக்கு ஓட்டம், நீளம் பாய்தல், தாயம், மேசைப்பந்து போன்றவற்றைத் தனி விளையாட்டுகளாகவும் விளையாடலாம்.

விளையாடுவதால் உடல்நலம், மனநலம், அறிவு நலம் பெற்றுச் சமுதாயத்தில் ஒரு சிறந்த மனிதராக உருவாகலாம். மேலும், சமுதாயத்தில் ஒற்றுமையும் இணக்கமும் மேலோங்குகின்றன. விளையாடுவதால் ஒருவருடைய தலைமைத்துவப் பண்பு வளர்கிறது; தன்னம்பிக்கை உயர்கிறது. நோயின்றி நலமாக வாழ வழிவகுக்கின்றது. நலமான, அமைதியான வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்ள முடிகின்றது. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு வெற்றியும் புகழும் கிடைப்பதோடு சன்மானமும் கிடைக்கின்றது. மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. எனவே, அனைவரும் ஒருசில குறிப்பிட்ட விளையாட்டினைத் தெரிவு செய்து விளையாடுவது அவசியமாகிறது.

(மூலம்: இணையம் - சில மாற்றங்களுடன்)

**2.4.2** விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**உரைநடைப்பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் கூறுக.**


1. விளையாட்டு என்றால் என்ன?
2. விளையாட்டுப் பிரிவுகளை மர வரைபடத்தில் எழுதி வாசித்திடுக.
3. பின்வரும் ஒவ்வொரு விளையாட்டுக்கான எடுத்துக்காட்டுகளை எழுதி வாசித்திடுக.

- உள்ளக விளையாட்டு →
- வெளியக விளையாட்டு →
- குழு விளையாட்டு →
- தனி விளையாட்டு →
- திடல் தடப் போட்டி →

## இடுபணி 2

**ஒலிம்பிக் விளையாட்டுத் தொடர்பான தகவல்களை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்குப் பதில் கூறுக.**

### ஒலிம்பிக் விளையாட்டு



- ஐந்து வளையங்களும் உலகிலுள்ள ஐந்து கண்டங்களின் ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கின்றன.
- கடந்த காலங்களில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுகள் தற்பொழுது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோடைக் காலத்திலும் குளிர் காலத்திலும் மாற்றி மாற்றி பல்வேறு நாடுகளுக்கிடையே நடத்தப்படுகின்றன.
- ஒலிம்பிக் விளையாட்டு 1896இல் முதன் முதலில் கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடத்தப்பட்டது.
- இந்த ஒலிம்பிக் விளையாட்டின் பொருட்டு ஒலிம்பிக் தீபம் முதன்முதலில் 1928இல் ஆம்ஸ்டர்டாமில் (Amsterdam) ஏற்றப்பட்டது.
- ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்குத் தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற பரிசுகள் வழங்கப்படுகின்றன.



1. ஒலிம்பிக் விளையாட்டு முதன் முதலில் எங்கு நடத்தப்பட்டது?
2. ஒலிம்பிக் விளையாட்டின் வெற்றியாளர்கள் பெறும் பரிசுகள் யாவை?
3. தற்போது ஒலிம்பிக் விளையாட்டு பருவக் காலத்திற்கு ஏற்ப நடத்தப்படுகிறது. ஏன்?
4. இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபட எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

# பாடம் 3 பாரம்பரிய விளையாட்டுப் போட்டி

## நிரல்படுத்தி எழுதுக.



- போட்டிகள் முறையாகத் தொடங்கப்பட்டன.
- மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் பங்கெடுத்தனர்.
- போட்டி நடைபெறும் நாளும் வந்தது.
- எங்கள் பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி ஒன்றனை ஏற்பாடு செய்தது.
- பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளின் விதிமுறைகள் அனைத்தும் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டன.
- சமமான புள்ளிகள் பெற்ற குழுக்கள் இரண்டாம் சுற்று, மூன்றாம் சுற்றென விளையாடினர்.
- மாவட்டக் கல்வி அதிகாரி பரிசுகளை வழங்கினார்.
- மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் விளையாடினர்.
- நம் மாணவர்களின் சிறந்த எண்ணங்கள், கட்டொழுங்கு ஒற்றுமை பற்றி கல்வி அதிகாரி பாராட்டிப் பேசினார்.



3.2.1 • வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 1

**பாரம்பரிய விளையாட்டுப் போட்டி தொடர்பான வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுக.**

## இடுபணி 2

**கோலி, பல்லாங்குழி ஆகிய விளையாட்டுகள் தொடர்பான வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**

**கோலி**

- பளிங்கு கோலிக் குண்டுகளை வைத்து விளையாடுவர்.
- வெற்றி பெற்றவர், தோற்றவரின் கோலிக் குண்டுகளை எடுத்துக் கொள்ளலாம்.
- போட்டியாளரின் கோலியை மற்றொருவர் தனது கோலியைக் கொண்டு அடிக்க வேண்டும்.
- எதிராளியின் கோலிகள் அனைத்தையும் வெற்றி கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

**பல்லாங்குழி**

- காய்கள் அனைத்தும் இரு தரப்பிலும் ஆடுபவர்கள் வென்று எடுத்தபின் முதல் சுற்று முடிவுறும்.
- முதலில் ஏதாவதொரு குழியில் உள்ள காய்களை எடுத்து விளையாடத் தொடங்க வேண்டும்.
- அவ்வாறு பிரித்து விளையாடி வரும்போது குழி வெறுமையாக இருந்தால் அந்தக் குழியைத் துடைத்து எடுத்துக் கொள்வர்.
- இதில் பதினான்கு குழிகள் இருக்கும்.
- ஒருவருக்கு ஏழு குழிகள் என்று பிரித்துக்கொண்டு ஆட வேண்டும்.
- குழிகள் ஒவ்வொன்றிலும் ஐந்து காய்கள் இட்டு நிரப்பப்பட வேண்டும்.

## வளப்படுத்துதல்

**பரமபதம் விளையாட்டை விளையாடும் முறையை வாக்கியங்களில் எழுதுக. பின்னர் நிரல்படப் பத்தியில் எழுதுக.**



# இலக்கணம்

## வேற்றுமை உருபுகளை அறிக.

### வேற்றுமை உருபுகள்

| வேற்றுமை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| முதல் வேற்றுமை | உருபு இல்லை (எழுவாய் வேற்றுமை) | **முகிலன்** (பெயர்) |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | **முகிலனை** முகிலன் + ஐ |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | **முகிலனோடு** முகிலன் + ஓடு<br>**முகிலனால்** முகிலன் + ஆல்<br>**முகிலனுடன்** முகிலன் + உடன் |
| நான்காம் வேற்றுமை | கு | **முகிலனுக்கு** முகிலன் + கு |
| ஐந்தாம் வேற்றுமை | இன், இருந்து, இல், நின்று | **முகிலனின்** முகிலன் + இன்<br>**வீட்டிலிருந்து** வீட்டில் + இருந்து<br>**அவனில்** அவன் + இல்<br>**மரத்திினின்று** மரத்தில் + நின்று |
| ஆறாம் வேற்றுமை | அது, உடைய | **முகிலனது** முகிலன் + அது<br>**முகிலனுடைய** முகிலன் + உடைய |
| ஏழாம் வேற்றுமை | இல், இடம், பால், கண் | **பள்ளியில்** பள்ளி + இல்<br>**முகிலனிடம்** முகிலன் + இடம்<br>**முகிலன்பால்** முகிலன் + பால்<br>**முகிலன்கண்** முகிலன் + கண் |
| எட்டாம் வேற்றுமை | உருபு இல்லை (விளி வேற்றுமை) | **முகிலா!** விளித்தல்/ அழைத்தல் |

5.2.1 வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**ஐந்தாம், ஆறாம், ஏழாம் வேற்றுமை உருபுகளையும் எட்டாம் வேற்றுமையையும் ஏற்றுள்ள சொற்களை அடையாளங்கண்டு வகைப்படுத்துக.**

| | | | |
|---|---|---|---|
| குமரா | இராணியிடம் | கப்பலில் | அப்பருடைய |
| அரசருடைய | எனது | வானத்திலிருந்து | விதுரா |
| வாகனத்தில் | இறைவனின் | முகிலனது | தந்தையிடம் |
| இராமன்கண் | அருவிகண் | அமைச்சரிடம் | தங்களுடைய |
| தேவா | அருவியிலிருந்து | தங்கையிடம் | கம்பா |
| நாதா | ஊரினின்று | செல்வமுடைய | தமிழா |

| ஐந்தாம் வேற்றுமை உருபுகள் | ஆறாம் வேற்றுமை உருபுகள் | ஏழாம் வேற்றுமை உருபுகள் | எட்டாம் வேற்றுமை உருபுகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## இடுபணி 2

**பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.**

1. இறைவனின் =
2. காட்டிலிருந்து =
3. இலக்கியத்தில் =
4. வறுமையினின்று =
5. தோழனுடைய =
6. அன்னையிடம் =
7, பெற்றோர்கண் =
8. மாணவர்பால் =
9. மாசுடைய =
10. கபிலனது =
11. ஏழைகளிடம் =
12. அறையிலிருந்து =
13. குடும்பமது =
14. தோழனின் =
15. ஞானியுடைய =
16. பார்வையிலிருந்து =

## இடுபணி 3

**பொருத்தமான வேற்றுமை உருபுகளை இணைத்து வாக்கியங்களை எழுதுக.**

**எ.கா:**
பறவை மரம் ______ (நின்று) பறந்தது.
பறவை மரத்தினின்று பறந்தது.






1. இறைவன் ______ (விளித்தல்) எனக்கு ஏன் இவ்வளவு சோதனை?
2. விமலன் மங்கை ______ (பால்) கோபம் கொண்டான்.
3. இளங்குமணன் ______ (இல்) சிறந்தவன் குமணன்.
4. விண் ______ (நின்று) கற்கள் விழுந்தன.
5. அன்னை தெரசா ஏழைகள் ______ (இடம்) கருணை காட்டினார்.
6. மக்கள் ______ (கண்) பிரதமர் அக்கறை கொண்டுள்ளார்.
7. சிறுவன் ______ (இன்) தோற்றத்தில் வறுமை புலப்பட்டது.
8. சமையலறை ______ (இருந்து) தீ பரவியது.
9. இராமன் ______ (அது) வார்த்தைக்குச் சீதா கட்டுப்பட்டாள்.

## வளப்படுத்துதல்

**பின்வரும் சொற்களில் காணப்படும் வேற்றுமை உருபுகளை எழுதுக.**




## குறைநீக்கல்

**சேர்த்தெழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தந்தை | + | இடம் | = | ______ |
| 2. தன் | + | உடைய | = | ______ |
| 3. கண்ணில் | + | இருந்து | = | ______ |
| 4. ஏழையின் | + | பால் | = | ______ |
| 5. பள்ளி | + | இல் | = | ______ |
| 6. தலைவன் | + | அது | = | ______ |
| 7. ஆசிரியர் | + | இன் | = | ______ |
| 8. தர்மம் | + | அது | = | ______ |
| 9. கல்வி | + | இல் | = | ______ |
| 10. அன்பு | + | உடைய | = | ______ |
| 11. மரத்தின் | + | நின்று | = | ______ |
| 12. குடும்பத்தின் | + | கண் | = | ______ |

# தொகுதி 11 மொழியைக் காப்போம்

## பாடம் 1 சிறப்பை அறிவோம்

**கலந்துரையாடுக.**



சங்க காலத் தமிழ்க் கல்வெட்டு

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் பெற்ற மொழி.

‘ழ’ ழ

பிறமொழிகளில் காணப்படாத ‘ழ’ என்று ஒலிக்கும் எழுத்தைக் கொண்ட மொழி.

தமிழ் மொழியே சிறந்த மொழி




தமிழ் நெடுங்கணக்கு

247 தமிழ் எழுத்துகளைக் கொண்டுள்ளது. முதலெழுத்து, சார்பெழுத்து ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

செம்மொழி மாநாடு




உலகச் செம்மொழி எனும் தகுதியைப் பெற்ற மொழி.



மகாகவி பாரதியார்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்.



பாவேந்தர் பாரதிதாசன்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.



கி.ஆ.பெ. விசுவநாதம்

இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழைய மொழி, தனித்த மொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்குத் தகுதியானது.



ஜி.யு. போப்

வேற்று இனத்தவர்களால் புகழ்ந்து பாராட்டப்பட்ட தன்னிகரற்ற நூல்.

- திருவாசகம்



திருவள்ளுவர்

தமிழ் நூல்களில் உலகில் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூல். அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலையும் விளக்குகின்றது.

1.5.1 • தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

## இடுபணி 2

**‘தமிழ்த் திரைப்படங்கள் தனிநபர் மேம்பாட்டுக்குத் துணைபுரிகின்றன’ எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்திடுக.**



**நற்பண்பு வளர்கிறது**
- தலைமைத்துவப் பண்பு
- பெண்களை மதித்தல்



**மொழி வளம் பெருகுகின்றது**
‘பராசக்தி’ திரைப்படத்தின் புகழ்பெற்ற வசனம்



**தன்னம்பிக்கை வளர்கிறது**
‘ஒவ்வொரு பூக்களுமே’ பாடல்



**ஆன்மிகம் மேன்மையடைகிறது**
- ஸ்ரீ இராகவேந்திரா
- அகத்தியர்

## இடுபணி 3

**‘தமிழ்த் திரைப்படங்களும் தமிழ்மொழியின் பயன்பாடும்’ எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்திடுக.**



பாடம் 2

# தொடர்பு சாதனம்

## வாசித்து அறிக.



ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்ள மொழி மிகவும் அவசியமாகின்றது. பிள்ளைகள் பள்ளியில் **பயில்கின்ற** எல்லாப் பாடங்களையும் கற்றுத் தெளிவதற்கு மொழி அறிவு அவசியமாகின்றது. மொழியின் துணைகொண்டு நாம் சிந்திக்க, முடிவெடுக்க, செயல்பட முடிகிறது.

மொழி என்பது ஒரு தொடர்பு சாதனம் மட்டுமல்ல, நாம் வாழும் சூழ்நிலையிலுள்ள பழக்க வழக்கங்கள், பண்பாட்டு நடைமுறைகள் அனைத்தையும் அடுத்த **தலைமுறைக்குக்** கொண்டு சேர்க்க உதவும் ஓர் ஊடகமாகும்.

மொழியானது பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடம்பெயர்தல் மற்றும் காலத்திற்கு ஏற்ற மாற்றம் எனப் பன்முகம் கொண்டதாக உள்ளது. எந்தவொரு மொழி மாற்றத்திற்கோ **மேன்மைக்கோ** இடங்கொடுக்காமல் இருக்கிறதோ அம்மொழி இறந்தமொழி எனக் **கருதப்படுகிறது**. மாறாக, எந்தவொரு மொழி தொடர்ந்து காலத்திற்கு ஏற்றாற்போல் தனக்குள் மாற்றத்தை ஏற்றுக் கொள்கின்றதோ அம்மொழி வாழும் மொழியாகக் கருதப்படுகிறது.

மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, சமூக நிலை, ஒழுக்க நெறிகள் மற்றும் **எண்ணங்கள்** போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படையாகவும் விளக்கமாகவும் உள்முகச் செய்திகளாகவும் கொண்டு விளங்குகின்றன.

## இடுபணி 1

**வண்ணத்திலான சொற்களுக்குப் பொருள் கூறுக.**

2.4.1 • மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 2

**உரைநடைப்பகுதியை மௌனமாக வாசித்து, வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. மொழி எனப்படுவது யாது?

2. மொழியின் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.

3. மொழி காலத்திற்கு ஏற்ற மாற்றத்தை ஏற்க வேண்டுமா? ஏன்?

4. மொழியைப் பற்றி உணர்த்தப்படும் செய்தி என்ன?

## இடுபணி 3

**உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்து, வினாக்களுக்குப் பதில் கூறுக; எழுதுக.**




திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுமறை திருக்குறள். எல்லா நாட்டினரும், எல்லாச் சமயத்தினரும் போற்றும் நீதி நூலாகத் திருக்குறள் விளங்குகிறது. மனிதனின் சமுதாய வாழ்வுக்குத் தேவையான அறநெறிகளையும் அறிவுரைகளையும் திருக்குறள் பேசுகிறது.

1330 திருக்குறள்களும் 133 அதிகாரங்களில் அடங்கியுள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் 10 திருக்குறள்களைக் கொண்டுள்ளது. அறம், பொருள், இன்பம் என்று முப்பால்களைக் கொண்ட திருக்குறள் எக்காலத்திற்கும் பொருந்தும் உயரிய நெறிகளை வெளிப்படுத்துகின்றது.

அறத்துப்பாலில் இல்லறத்தார், துறவறத்தார் ஆகியோருக்கு ஏற்ற நெறிகள் கூறப்பட்டுள்ளன. பொருட்பாலில் அரசு, அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு, குடி ஆகியன பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இன்பத்துப்பாலில் ஆணும் பெண்ணும் கூடி வாழும் களவு, கற்பு வாழ்க்கை முறைகளைச் சிறப்பாகக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

1. திருக்குறள் உலகப் பொதுமறை எனக் கருதப்படுவதன் காரணம் என்ன?


2. இரண்டாவது பத்தி உணர்த்தும் செய்தியை விளக்குக.

3. முப்பால் எனப்படுவது யாது? அவற்றின் சாரத்தை விளக்கிக் கூறுக; எழுதுக.



## வளப்படுத்துதல்

**தமிழ்ச் சான்றோர் தொடர்பான கருத்துத் துணுக்கை மௌனமாக வாசித்து, வினாக்களுக்குப் பதில் கூறுக.**



இராசமாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1933இல் பிறந்தவர். புதுவையில் அஞ்சல்துறையில் பணியாற்றியபோது பாவேந்தர் பாரதிதாசனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மறைமலை அடிகள், தேவநேயப் பாவாணர் ஆகியோரின் கருத்துகள் பரவப் பெருங்காரணமாக விளங்கினார். தென்மொழி எனும் தனித்தமிழ் இதழும் தமிழ் நிலம் என்ற இதழும் தமிழ்ச்சிட்டு எனும் சிறுவர் இதழும் அவர் பார்வையில் செயல்பட்டன.

திருக்குறள் உரையும் வேறுபல நூல்களும் எழுதி வெளியிட்டார். இந்தி எதிர்ப்புப் பாடல்களுக்காகச் சிறை சென்றவர். தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழுணர்வு ஊட்டிய பாவலரேறு 1995இல் மறைந்தார்.

1. யாருடைய கருத்துகள் பரவ பாவலரேறு காரணமாக இருந்தார்?

2. எழுத்துத் துறையில் இவர் ஆற்றிய பங்கு என்ன?

3. பாவேந்தர் பாரதிதாசனுடன் இவருக்கு எப்பொழுது தொடர்பு ஏற்பட்டது?

4. பாவலரேறு எந்த வயதில் காலமானார்?

## குறைநீக்கல்

**கீழ்க்காணும் பகுதியை வாசித்து வினாக்களுக்குப் பதில் கூறுக.**

### உயர்ந்த பண்பு எது?

- மற்றவர் குணம் எப்படி இருக்கிறது என்று ஆராய்வதைவிட, நம் குணம் எப்படி இருக்கிறது என்று சிந்திப்பதே உயர்ந்த பண்பு.
- தேங்காயை உடைத்ததும் வெண்மையான பருப்பு தெரிவதைப் போல நாம் நமது மனத்தையும் வெண்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- கடவுள் நம் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால் கடவுள் இல்லை என்று ஆகிவிடுமா? உயிரும் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால் உயிர் இல்லை என்று கூறலாமா?

1. எது உயர்ந்த பண்பு எனப்படுகிறது?
2. தேங்காய் உடைப்பதன் தத்துவம் என்ன?
3. கடவுளைப் பற்றி என்ன அறிந்து கொள்ள முடிகிறது?

# தமிழ்ப்பள்ளியும் தமிழ்க் கல்வியும்

## வாதக் கட்டுரை எழுதுக.

மலேசியத் திருநாட்டில் தமிழ்ப்பள்ளி, சீனப்பள்ளி, தேசியப் பள்ளி போன்ற பலவகைப் பள்ளிகள் உள்ளன. ஆனால், நமது கலைகளையும் பண்பாட்டையும் இளைய சமுதாயத்தினருக்குத் தெளிவுபடுத்தி, அவர்களைப் புத்தாக்கச் சிந்தனையுடையவர்களாக உருவாக்கி, வருங்காலத்தில் தமிழ்மொழி நிலைத்து நிற்கச் செய்ய வேண்டுமானால், நமது பிள்ளைகளை நாம் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவதே சாலச் சிறந்த வழி எனத் துணிந்து கூறலாம். தமிழ்மொழி செம்மொழியென அறிவிக்கப்பட்டது நாம் அறிந்த ஒன்றே. எனவே, நாம் நம் தமிழ்மொழியைத் தற்காத்துக் கொள்ள நம் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்குக் கட்டாயமாக அனுப்ப வேண்டும்.

நம் எதிர்காலச் சந்ததியினர் நம் தமிழ் பண்பாட்டை நிலைநாட்டவும் இலக்கிய இன்பத்தை நுகரவும் ஒரேவழி தமிழ்மொழிக் கல்வியே. இதனைப் பெறுகின்ற ஒரே இடம் தமிழ்ப் பள்ளியே. எனவே, பண்டைய சிறப்புகளைத் தெரிந்துகொள்ளப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதே சிறந்ததாகும்.

நம் பிள்ளைகள் தமிழ்ப்பள்ளியில் பயில்வதால் எதிர்காலத்தில் தமிழாசிரியர்களாகவும் அதிகாரிகளாகவும் தமிழ் விரிவுரையாளர்களாகவும் உருவாக வாய்ப்புண்டு. மேலும் வானொலி, தொலைக்காட்சிகளில் பணியாற்றும் தமிழ்ப்பிரிவு அறிவிப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள், தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ்ப் புத்தக வெளியீட்டாளர்கள் போன்றோர் தமிழ்ப் பள்ளிகளில் படித்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, எதிர்கால வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்புவதே சிறந்தது.









3.4.5 • 130 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 1

**மாதிரி கட்டுரையை வாசித்து முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்க.**

## இடுபணி 2

**‘இன்றைய இளைஞர்கள் தமிழ்மொழியை வளர்க்கின்றனர்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் வாதக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

- தமிழில் பேசுகின்றனர்.
- தமிழ்ச் சார்ந்த போட்டிகளில் பங்கெடுக்கின்றனர்.
- எழுத்துப் படைப்புகளை வெளியிடுகின்றனர்.
- தமிழ்மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் தேர்வுப்பாடமாக எடுக்கின்றனர்.

### அறிந்து கொள்க

**வாதக் கட்டுரை**

- தலைப்பைச் சார்ந்தோ மறுத்தோ எழுத வேண்டும்.
- தலைப்பைச் சார்ந்தும் மறுத்தும் எழுதக் கூடாது.
- தருக்க மொழி நடையில் எழுதுவது இன்றியமையாதது.
- தன் நிலைப்பாட்டை முடிவில் வலியுறுத்துவதாக இருக்க வேண்டும்.

## இடுபணி 3

**‘தமிழ்மொழிக் கழகங்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன’ எனும் தலைப்பில் 130 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுக.**






# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**உரையாடலைப் பாகமேற்று நடித்திடுக.**

சூழல்: அன்றைய தினம் ஆசிரியர் போதித்த மூதுரையைப் பற்றிக் குமுதாவும் சுசிலாவும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.




4.2.1 புகுமுக வகுப்பிற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.




## மூதுரையும் பொருளும்

**கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே கல்லாதான் கற்ற கவி.**



தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்றவனைப் போல் பாசாங்கு செய்வது எப்படி இருக்கிறது என்றால், அழகான தோகையை விரித்து ஆடும் வண்ண மயிலைப் பார்த்து, வான்கோழியானது அதன் சிறகை விரித்து, மயில் என்பதாக நினைத்து ஆடுவதைப் போலாகும். கல்லாதவன் கற்றவனைப்போல் நடிக்கலாம். நடித்தாலும் அது சிறப்பைத் தராது. கல்வியின்மை வெளிப்பட்டுவிடும்.

## இடுபணி 1

**முதுரையையும் அதன் பொருளையும் மனனம் செய்து எழுதுக.**

## இடுபணி 2

**முதுரையின் பொருளுக்கேற்ற சூழலை அமைத்து நடித்துக் காட்டுக.**

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட கருத்துக்கான விளைவுகளைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுக; எழுதுக.**

1. தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்றவனைப் போலப் பாசாங்கு செய்தல்.

விளைவுகள் →

→

2. அரை குறையாகக் கல்வி கற்றல்

விளைவுகள் →

→

3. எந்த இலக்கை அடையப்போகிறோம் என்பதை அறியாதிருப்பது.

விளைவுகள் →

→

## வளப்படுத்துதல்

**முதுரையின் பொருளுக்கேற்ற ஓரங்க நாடகம் நடித்துக் காட்டுக.**

## குறைநீக்கல்

**சரியாக இணைத்திடுக.**

| | |
|---|---|
| கான மயில் | தன்னையும் அம்மயிலாகவே நினைத்து |
| ஆடினால் போலும் | அழகில்லாத சிறகை |
| கல்லாதான் | தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் |
| பொல்லாச் சிறகை | ஆடியது போல |
| தானும் அதுவாகப் பாவித்து | காட்டில் உள்ள மயில் |

## தொகுதி 12 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

### பாடம் கதிர் வீச்சு

**கலந்துரையாடுக.**

**கதிர்வீச்சின் விளைவுகள்**



மக்கள் சுலபமாகத் தொடர்புகொள்ள ஏதுவாக உள்ளது.

கதிர்வீச்சினால் தேனீக்களின் கூட்டத்தில் சிதைவு ஏற்பட்டுக் கூடுகள் உருவாக இயலாமல் போகும்.

தகவல் பரிமாற்றத்தை விரைவுபடுத்துகிறது.

மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றிற்குப் புற்றுநோய், இனப்பெருக்கக் கோளாறுகள் போன்றவை ஏற்படும்.

பறவைகளுக்குப் பாதிப்பு:
- தூரமாகப் பறக்க இயலாது.
- முட்டைகள் உயிர் பெறா.
- திசையறியும் திறன் குறையும்.

**1.5.2** தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்வர்.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு கதிர்வீச்சினால் ஏற்படும் நன்மை தீமைகளை விவாதித்திடுக.**

## இடுபணி 2

**தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ள விளைவையொட்டிப் பண்புடன் விவாதித்திடுக.**

தகவல் தொடர்புத் தொழில்நுட்பமும் விளைவுகளும்

**நன்மைகள்**

- தகவல்களை விரைவாக அனுப்ப இயலும்
- பணிகளை இலகுவாக்குதல்
- காலத்திற்கு ஏற்ற மேம்பாடு அடைதல்

**தீமைகள்**

- தவறான அகப்பக்கம் பயணித்தல்
- நம்பகமற்ற தகவல்களைப் பகிர்தல்
- மொழிச் சிதைவு ஏற்படுதல்

## இடுபணி 3

**'இளைஞர்களின் ஒழுக்க நெறியும் சமூக ஊடகங்களும்' எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்க.**



# பாடம் 2 முகநூல்

## வாசித்து அறிக.



மனத்தில் தோன்றும் உணர்வுகளை எந்தத் தடையும் இல்லாமல் வெளிப்படுத்தத் துணைபுரியும் தளமாக முகநூல் விளங்குகிறது. சமூக வலையமைப்புகளில் ஒன்றான முகநூல் பல வசதிகளை உள்ளடக்கியுள்ளது என்றால் மிகையாகாது. இன்றைய நவீன உலகம் நமது கைக்குள் அடங்கிவிட்டது என்று நாம் **வியந்து** கொண்டிருக்கிறோம்.

முகநூலின்வழி நாம் உலகில் நடக்கும் தற்போதைய **நிலவரங்களை** விரைவில் அறிந்து கொள்ள முடிகிறது. உலகத்தில் நடக்கக்கூடிய பேரிடர்கள், பாதிப்புகள், போர்கள், சாதனைகள், **வேதனைகள்**, சோதனைகள் ஆகியவற்றை ஒருவர் தமது முகநூலில் பதிவு செய்யும்போது அவருடன் தொடர்புடையவர்கள் உடனுக்குடன் அவற்றை அறிந்து பிறருடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

நட்புக் களமாகவும் முகநூல் விளங்குகின்றது. புதிய உறவுகளைத் தேடிக் கொள்ளவும் **தொலைந்த** உறவுகளைத் தேடி மீண்டும் இணைத்துக் கொள்ளவும் முகநூல் வாய்ப்பளிக்கின்றது.



பள்ளி மாணவர்கள் தங்களின் பாடங்கள், திட்டங்கள் தொடர்பான பகிர்வுகளைச் செய்ய முடியும். கல்வியில் முன்னேறி வாழ்க்கையில் தெளிவு பெற முடியும். மேலும், நண்பர்களிடையே நல்லுறவுகளையும் இணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முடிகின்றது.

முகநூல் வரவினால் பல பாதிப்புகளும் ஏற்படவே செய்கின்றன. ஒருவர் தம்முடைய இரகசியங்களை மற்றவரிடம் கூறும்பொழுது, அவர்கள் முகநூலில் அவற்றைப் பரப்பி **அம்பலப்படுத்துகின்றார்கள்**. அதனால் சம்பந்தப்பட்ட நபர் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார். உறவுகளில் விரிசல் ஏற்பட்டுப் பிரிய நேரிடுகின்றது.

முகநூல்களில் **பொல்லாத** ஆசாமிகளின் **பிரவேசம்** இருக்கவே செய்கின்றது. யாரை எப்பொழுது ஏமாற்றலாம் என்று காத்திருக்கின்றனர். பல இளைஞர்கள் பண மோசடிக்கு ஆளாகியுள்ளனர். இளம் வயது பெண்கள் மன வேதனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்களுக்கு முகநூல் வழிவகுத்திருக்கின்றது என்றால் மிகையாகாது.



முகநூலின் தாக்கத்தினால் இன்று பல குடும்பங்களில் நல்லுறவுகள் **சிதைந்து** போய்க் கொண்டிருக்கின்றன. குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்துப் பேசுவதில்லை; அன்பு பாராட்டுவதில்லை; அக்கறை கொள்வதில்லை. குடும்பத்தினரிடையே இணக்கமும் ஒற்றுமையும் இல்லாமல் இருக்கின்றது.

எனவே, முகம் தெரியாமல் முகநூலில் அதிக நேரத்தைச் செலவு செய்வதைவிட முகம் பார்த்துச் சிரித்துப் பேசி மகிழ்வோம்.

2.4.4 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

### இடுபணி 1

**வண்ணத்திலான சொல்லுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் கூறுக.**

### இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. முகநூல் எனப்படுவது யாது?
2. முகநூல் ஒருவருக்கு எவ்வகையான நன்மைகளை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குக.
3. முகநூல் என்னென்ன பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்பதைப் பட்டியலிடுக.
4. முகநூலில் பொல்லாத ஆசாமிகளின் பிரவேசம் பற்றி உமது கருத்து என்ன?
5. மாணவர் சமுதாயத்திற்கு முகநூல் அவசியமா? உமது கருத்தைக் கூறுக; எழுதுக.

### இடுபணி 3

**தொலைக்காட்சி பார்ப்பது தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குப் பதில் எழுதுக.**



அறிவியல் கண்டுபிடிப்பில் சிறந்ததொரு கருவி தொலைக்காட்சி. மேலும், முக்கியமான தகவல் ஊடகமாகவும் திகழ்கின்றது. தொலைக்காட்சி பார்ப்பதனால் மக்கள் பலவித நன்மைகளை அடைகின்றனர் என்றால் அது மிகையாகாது.

தொலைக்காட்சி பார்ப்பதை இன்றைய நாகரிக உலகில் வாழும் மக்கள் பலர் விரும்புகின்றனர். இதற்குக் காரணம் அச்சாதனமானது நல்லதொரு பொழுதுபோக்கு கருவியாகப் பயன்படுவதுதான். இசை, நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் பார்ப்பவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு அவர்களின் மனத்தில் கவலைகளையும் மறக்கச் செய்கின்றன.

தொலைக்காட்சி பார்ப்பதனால் நன்மைகள் மட்டுமன்றி சில தீமைகளும் இருக்கவே செய்கின்றன. பள்ளி மாணவர்கள் தங்களின் நேரத்தை அதிகமாகத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுவதால் அவர்களுக்குத் தூக்கமின்மை, பள்ளிப்பாடங்களில் கவனமின்மை போன்ற விளைவுகள் ஏற்படவே செய்கின்றன. சினிமா கதைகளில் வரும் எதிர்மறைக் காட்சிகள் மாணவர்களையும் இளைஞர்களையும் பலவகைகளில் பாதிக்கின்றன. எனவே, எதையும் அளவோடு வைத்துக் கொண்டு செயல்படுவதே அனைவருக்கும் சிறப்பு.

1. தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் மூன்று தீமைகளைப் பட்டியலிடுக.
   i) 
   ii) 
   iii) 
3. தொலைக்காட்சி மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் தமிழ் நிகழ்ச்சிகளை வரைபடத்தின் மூலம் வரையறுத்திடுக.

# பாடம் 3 சமூக வலைத்தளங்கள்




## விவாதக் கட்டுரை எழுதுக.



உலகில் பலவகையான சமூக வலைத்தளங்கள் உள்ளன. இவை மக்களின் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு மேடையாகவும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களை இணைக்கும் பாலமாகவும் விளங்குகின்றன. முகநூல் (பேஸ்புக்), கீச்சகம் (டிவிட்டர்), புலனம் (வாட்ஸ்அப்), அளாவி (விசாட்), வலையொளி (யூடியூப்), படவரி (இன்ஸ்டாகிராம்) தொலைவரி (தெலிகிராம்) போன்ற சமூக வலைத்தளங்கள் இன்று அதிகப் பயன்பாட்டிலுள்ளவையாகும்.

சமூக வலைத்தளங்கள் பலவகையில் நன்மைகளை ஏற்படுத்துகின்றன. புதிய நண்பர்களையும் உறவுகளையும் உருவாக்கிக் கொண்டு உறவாடத் துணைபுரிகின்றன. தொழில்புரிவோர் பல விளம்பரங்களைப் பகிர்ந்துகொண்டு தங்கள் தொழிலுக்கான உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

மேலும், சமூக ஆர்வலர்கள் தங்களின் கருத்துகளை, செய்திகளை மக்களிடம் சென்று சேர்க்க வழிவகுக்கின்றன. குறுகிய நேரத்தில் பயனுள்ள கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள உதவுகின்றன.

சமூக வலைத்தளங்கள் தீமைகளையும் ஏற்படுத்தத் தவறுவதில்லை. இன்றைய இளைஞர் சமுதாயம் தங்களின் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளையும் புகைப்படங்களையும் குறும்படங்களையும் பகிர்ந்துகொள்கின்றனர். அதே வேளையில், தங்களின் இயல்பு வாழ்க்கைக்குப் புறம்பான ஒரு பெருமை உலகைக் காண்பிக்கும் வகையில் தகவல்களைப் பதியப்படுத்துகின்றனர்; தன்னிலைக்கு மீறிய வாழ்க்கையை வாழ முற்படுகின்றனர். இதன்வழி பல ஏமாற்றங்களையும் இழப்புகளையும் எய்துகின்றனர்.

ஒருவர் தம்முடைய சுய விவரங்களையும் அடையாளங்களையும் பதிவு செய்து விடுவதால் தீய எண்ணம் உடையவர்கள் அவற்றைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கின்றனர். மாணவர் சமுதாயம் தகவல் பகிர்வதிலும் இணையம்வழி விளையாட்டுகளிலும் தங்களின் பொன்னான நேரத்தை விரயம் செய்கின்றனர். இதனால், உடல்நலக்கேடு ஏற்படுகின்றது; மன உளைச்சல் ஏற்படுகின்றது; கல்வி பாதிப்படைகிறது.

சமூக வலைத்தளங்கள் சமூக நன்மைகளைக் கருதி தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் அறிவார்ந்த முறையில் அவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டும்.

### அறிந்து கொள்க

பகிரலை - ஹாட்ஸ்பாட் 

ஆலலை - பிராட்பேண் 

இயங்கலை - ஆன்லைன் 

முடக்கலை - ஆ்.லைன் 

அருகலை - வைபாய் 

3.4.6 130 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட பாடப்பகுதியில் சமூக வலைத்தளங்களால் ஏற்படும் நன்மை தீமைகளை மர வரைபடத்தில் நிறைவு செய்க.**

## இடுபணி 2

**‘தமிழ்த் திரைப்படங்களினால் சமுதாயத்தில் ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பிற்கான குறிப்புகளைப் பயன்படுத்தி 130 சொற்களில் ஒரு விவாதக் கட்டுரை எழுதுக.**




- நல்லதொரு பொழுதுபோக்காகவும் வாழ்க்கைக்குப் பல தெளிவுகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதாகவும் அமைகின்றது.
- மன மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.
- மொழிவளம் பெருகுகிறது.
- தன்னம்பிக்கை, துணிவு, முயற்சி போன்ற பண்புகள் வளர்கின்றன.

- கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற சமூகச் சீர்கேடுகளுக்கு வித்திடுகின்றது.
- தீவிரவாதத்தைத் தூண்டுகிறது.
- படத்தில் மூழ்கிவிடுவதால் நேர விரயம் ஏற்படுகிறது.
- பண விரயம் ஏற்படுகிறது.
- கல்வியில் நாட்டம் குறைகின்றது.

## இடுபணி 3

**எதிர்காலத்தில் நாளிதழ்களுக்குப் பதிலாகச் செய்திகளை மின்னியல் ஊடகங்களில் முழுமையாக வெளியிடவிருப்பதைப் பற்றி விவாதித்து 130 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுக.**






**அறிந்து கொள்க**


- விவாதிக்கும் போது நன்மை, தீமை எனும் அடிப்படையில் இருநிலைகளிலும் கருத்தினை எழுத வேண்டும்.
- நன்மைகளை மட்டும் எழுதிவிட்டுத் தீமைகளை எழுதாமல் விடக்கூடாது.
- தீமைகளை மட்டும் எழுதிவிட்டு நன்மைகளை எழுதாமல் விடக்கூடாது.
- இறுதியில் தங்களின் நிலைப்பாட்டை வலியுறுத்த வேண்டும்.

# பாடம் 4 இலக்கணம்

## திரிதல் விகாரம் அறிக.

**திரிதல் விகாரம்** → நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது** திரிதல் புணர்ச்சியாகும்.

### அ) ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்




- ண் → ட் ஆகும் (க், ச், ப் முன் மட்டும்)

**எ.கா:**

மண் + குடம் = மட்குடம்
மண் + பாண்டம் = மட்பாண்டம்
கண் + செவி = கட்செவி

- ன் → ற் ஆகும் (க், ச், ப் முன் மட்டும்)

**எ.கா:**

பொன் + குடம் = பொற்குடம்
பொன் + சரடு = பொற்சரடு
தன் + காப்பு = தற்காப்பு
முன் + பகல் = முற்பகல்

- ண் முன் த் → ட் ஆக மாறும்

**எ.கா:**

மண் + தலம் = மண்டலம்
தண் + தமிழ் = தண்டமிழ்

- ன் முன் த் → ற் ஆக மாறும்

**எ.கா:**

பொன் + தகடு = பொற்றகடு
பொன் + தோடு = பொற்றோடு

5.3.1
5.3.2

- திரிதல் விகாரப் புணர்ச்சியில் ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- திரிதல் விகாரப் புணர்ச்சியில் லகர, ளகர, மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## ஆ) லகர, ளகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்




- ள் → ட் ஆகும் (க், ச், ப் முன் மட்டும்)

**எ.கா:**

கள் + குடம் = கட்குடம்
முள் + செடி = முட்செடி
நாள் + காட்டி = நாட்காட்டி
உள் + பூசல் = உட்பூசல்

- ல் → ற் ஆகும் (க், ச், ப் முன் மட்டும்)

**எ.கா:**

கால் + பந்து = காற்பந்து
வேல் + படை = வேற்படை
பால் + குடம் = பாற்குடம்

- ல் முன் த் → ற் ஆகும்

**எ.கா:**

கல் + தூண் = கற்றூண்
நல் + தமிழ் = நற்றமிழ்

- ள் முன் த் → ட் ஆகும்

**எ.கா:**

முள் + தாள் = முட்டாள்

### இடுபணி 1

**சேர்த்தெழுதுக.**

1. தன் + காப்பு = ______
2. முன் + காலம் = ______
3. பொன் + பாதம் = ______
4. பொன் + தாமரை = ______
5. மண் + கலம் = ______
6. கண் + செவி = ______
7. பொன் + தாலி = ______
8. பின் + போக்கு = ______
9. பொன் + கோயில் = ______
10. பொன் + தகடு = ______
11. நாள் + காட்டி = ______
12. கல் + சிலை = ______
13. சொல் + பயிற்சி = ______
14. நெல் + பயிர் = ______
15. பால் + குடம் = ______
16. சொல் + தொடர் = ______
17. புல் + தரை = ______
18. கல் + குவியல் = ______
19. வாள் + போர் = ______
20. கல் + கண்டு = ______

## இடுபணி 2

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மட்பாண்டம் | = | 9. பாற்குடம் | = | 17. உட்பூசல் | = |
| 2. பொற்சரடு | = | 10. கற்றூண் | = | 18. வேற்படை | = |
| 3. பிற்பகல் | = | 11. பொற்சங்கிலி | = | 19. புற்றரை | = |
| 4. நெற்பயிர் | = | 12. முட்செடி | = | 20. கட்செவி | = |
| 5. பொற்றோடு | = | 13. கற்குவியல் | = | 21. நெற்கதிர் | = |
| 6. முட்செடி | = | 14. மட்பானை | = | 22. பொற்றகடு | = |
| 7. நாட்காட்டி | = | 15. முட்டாள் | = | | |
| 8. காற்பந்து | = | 16. பொற்றாலி | = | | |

## இடுபணி 3

**வாக்கியங்களில் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்து எழுதுக.**

1. தோட்டத்திலுள்ள ________ (முற்செடியை, முட்செடியை) அப்பா வெட்டி வீசினார்.

2. ________ (புற்தரையில், புற்றரையில்) நடக்கக் கூடாது என்று ஆசிரியர் கட்டளையிட்டார்.

3. சந்திரமதி ஒவ்வொரு நாளும் ________ (நாட்குறிப்பு, நாற்குறிப்பு) எழுதுவாள்.

4. பத்துமலையில் பக்தர்கள் நேர்த்திக்கடனுக்காகப் ________ (பாட்குடம், பாற்குடம்) ஏந்திச் சென்றனர்.



5. ________ (பிற்பகல், பிட்பகல்) உணவுக்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுக்க வேண்டும்.

6. என் பிறந்த நாளுக்காக அம்மா ஒரு ________ (பொற்தோடு, பொற்றோடு) வாங்கித் தந்தார்.

7. கொடுக்கப்பட்ட ________ (சொற்றொடர்களை, சொற்தொடர்களை) வாக்கியத்தில் அமைத்துக் காட்டும்படி ஆசிரியர் கூறினார்.

தொகுதி 13 வரலாறும் நாமும்

# பாடம் 1 தமிழர்களின் தொழில்கள்

**விவரித்துக் கூறுக.**

## உழவுத் தொழில்

நெல் முதன்மையான பயிராகப் பயிர் செய்யப்பட்டது. கார், பாசனம் ஆகிய இரு பருவங்களாக நெல் பயிரிடப்பட்டது. கார் காலத்தில் பயிரிடப்பட்டவை கார் நெல் என்றும், பாசனப் பருவத்தில் பயிர் செய்யப்பட்டவை பாசன நெல் என்றும் அழைக்கப்பட்டன. எடுத்துக்காட்டு: சிவப்புக் குடவாழை, கருடன் சம்பா, காட்டுயானம், சூரக்குறுவை, பனங்காட்டுக் குழவாழை போன்ற நெல் வகைகளாகும்.





## நெசவுத் தொழில்

சோழர் காலத்தில் பருத்தியாலும் பட்டாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. மேலும், சில செயற்கை நூல்களாலும், விலங்குகளின் உரோமங்களாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. இவர்கள் நெய்தவற்றில் சேலை சிறப்பு வாய்ந்ததாக விளங்கியது. உத்தரீயம், கூறை என்ற சேலைகளையும் பச்சைப் பட்டு, புலியூர் பட்டு, ஆரணிப் பட்டு, பட்டாவளப் பட்டு போன்ற பட்டுத் துணிகளையும் நெய்தனர்.

## தச்சுத் தொழில்

அன்றாடம் பயன்படுத்தும் பலவகையான மரப் பொருள்களைத் தச்சர்கள் செய்தனர். வீடுகள், மாளிகைகள் ஆகியவற்றிற்குத் தேவையான சாளரங்கள், கதவுகள், கோவில் கதவுகள், மண்டபக் கதவுகள் போன்றவற்றையும் செய்தனர். படகு, ஓடம், வண்டிகள் போன்ற போக்குவரத்துச் சாதனங்களையும் செய்தனர்.





## உலோகத் தொழில்

உலோகம் உருக்குத் தொழிலும் நாணயங்கள் உருவாக்கும் தொழிலும் சோழர் காலத்தில் சிறப்பாக நடைபெற்றன. இரும்பை உருக்கி எண்ணற்ற போர்க் கருவிகள் செய்தனர். அவை சிறந்த வேலைப்பாடுகளுடன் காணப்பட்டன. உறுதியும், நீடித்து உழைக்கும் தன்மையும் கூர்மையும் உடையனவாக இருந்தன. செம்பு, பித்தளை, வெள்ளி ஆகிய உலோகப் பொருள்கள் செல்வந்தர் வீடுகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டு: கோயில்களில் பயன்படுத்திய தட்டுகள், பெருங்கலங்கள், நீர்க்கலங்கள், குழைக்கலங்கள் (கெண்டிகள்), அகப்பைகள், பெட்டிகள் போன்றவை ஆகும்.

## அணிகலத் தொழில்

பொன், வெள்ளி ஆகிய உலோகங்கள் மூலம் அணிகலன்களைச் செய்தனர். இவர்களைத் தட்டார் என அழைத்தனர். இவர்கள் அரச மகளிர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் பலவகையான அணிகலன்களைச் செய்து கொடுத்தனர். வைரம், இரத்தினம், முத்து முதலிய மணிகளின் ஆய்விலும் இவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். தட்டார்கள் பல ஊர்களிலும், குலோத்துங்க சோழப் பட்டினத்திலும் குடியிருந்ததாக ஊலங்குடி கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது.



1.6.1 கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கூறுவர்.

**இடுபணி 1**

**கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியிலுள்ள கருத்துகளையும் எடுத்துக்காட்டுகளையும் அடையாளம் கண்டு கூறுக.**

**இடுபணி 2**

**குமிழி வரைபடத்தில் கொடுக்கப்பட்ட குறிப்புகளை எடுத்துக்காட்டுடன் விவரித்துக் கூறுக.**

பண்டைய தமிழர்களின் தொழில்கள்



உப்புத் தொழில்

- கடற்கரை உப்பளங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்.
- உப்பு ஏற்றுமதிப் பொருளாகவும் இருக்கின்றது.



குயவர்கள்

- மட்பாண்டங்கள் செய்பவர்கள் குயவர்கள் என அழைக்கப்பட்டனர்.
- மட்பாண்டங்களை எளிய மக்கள் பயன்படுத்தினர்.



இடையர்கள்

- ஆடு, மாடு, எருமை ஆகியவற்றை மேய்த்து வளர்த்தனர்.
- இவர்கள் இடையர்கள் என்று அழைக்கப்பட்டனர்.



செக்குத் தொழில்

- எள், தேங்காய், ஆமணக்கு, இலுப்பை ஆகிய பொருள்களிலிருந்து எண்ணெய் எடுக்கச் செக்கைப் பயன்படுத்தினர்.
- இவை சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

பாடம் 2

# தனித்துவ விளையாட்டுகள்



## வாசித்து அறிக.









தமிழர்களுக்கென்று தனித்துவமான விளையாட்டுகள் இருந்தன என்பதை மெல்ல மெல்ல தமிழர்களே மறந்து வருகின்றனர். மேலை நாட்டவர்களின் ஆதிக்கத்தினால் தமிழர் **சார்ந்த** நிலங்களிலும் தமிழர் விளையாட்டுகள் கிராம விளையாட்டுகளாகத் தள்ளப்பட்டன. இன்று கிராமங்களிலும் தமிழர் விளையாட்டுகள் **வலுவிழந்து** கிடக்கின்றன.

பாரி வேட்டை, ஜல்லிக்கட்டு, இளவட்டக்கல், உறிமரம் ஏறுதல், வண்டி ஓட்டம், ஆடுபுலி ஆட்டம், மல்லாட்டம், வில்லாட்டம், தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், நொண்டியாட்டம், கண்ணாமூச்சி, உயிர்மூச்சு, கோலி அடித்தல், ஒரு குடம் தண்ணீர், கிச்சுகிச்சு தாம்பலம் போன்ற விளையாட்டுகள் வலுவிழந்து போய்விட்டன; சில மறக்கப்பட்டும் விட்டன. சிலம்பம், சடுகுடு போன்ற **ஆட்டங்கள்** ஆங்காங்கே தலைகாட்டிக் கொண்டிருக்கின்றன. மேலை நாட்டவர்களின் விளையாட்டுகள் வேண்டாம் என்று கூறவில்லை. தமிழர்களின் விளையாட்டுகளும் இருக்கட்டுமே என்ற ஆதங்கம்தான்.

தமிழர்கள் தங்களது சுய அடையாளத்தைப் பறிகொடுத்துவிட்டு மற்றவர்களின் அடையாளத்தைச் சுமப்பதில் என்ன **பெருமை**? தமிழர்கள் தங்களின் விளையாட்டுகளைப் புறக்கணிப்பது தங்களைத் தாங்களே புறக்கணிப்பதற்குச் சமமாகும்.

பண்டைய காலத்தில் இயற்றமிழிலும் உடற்பயிற்சிக் கலையிலும் **வல்லவர்களாக** இருந்திருக்கின்றனர். தற்காலத்தில் உடற்பயிற்சி நிலையங்கள் இருப்பதைப் போல சங்க காலத்திலும் போரவை, முரண்களரி போன்ற பயிற்சிக் கூடங்கள் இருந்திருக்கின்றன. விளையாட்டுத் தொடர்பான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அக்கலைகளை **நவீனம்** என்ற பெயரில் நாம் ஏன் மறைத்து வைக்க வேண்டும்?

2.4.2 விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணத்திலான சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் கூறுக.**

## இடுபணி 2

**மௌனமாக வாசித்து வினாக்களுக்கு விடை கூறுக.**

1. மேலை நாட்டவர்களின் ஆதிக்கத்தினால் தமிழர் விளையாட்டுகளில் என்ன விளைவு ஏற்பட்டுள்ளது?
2. பண்டைய விளையாட்டுகளின் தற்போதைய நிலை என்ன?
3. கட்டுரையாளரின் ஆதங்கம் என்ன?
4. பண்டைய விளையாட்டுகள் வலுவிழந்துவிட்டதற்கான காரணங்களைக் கூறுக.

## வளப்படுத்துதல்

**வாசித்து வினாக்களுக்குப் பதில் கூறுக.**


'நொண்டியடித்தல்' நமது பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றாகும். இவ்விளையாட்டை விளையாடுவதற்கு முன் ஏழு கட்டங்களைத் தரையில் வரைந்து கொள்ள வேண்டும். ஒரு சில்லு ஓட்டை முதல் கட்டத்தில் போட்டு அதை நொண்டிச் சென்று எடுத்துவர வேண்டும். மீண்டும் இரண்டாவது கட்டத்தில் போட்டு நொண்டியடித்துக் கொண்டு எடுத்து வர வேண்டும். இவ்வாறு ஏழு கட்டங்களையும் நிறைவு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு முறையும் சரியான கட்டத்தில் சில்லு ஓட்டைப் போட வேண்டும். கட்டம் மாறி விழுந்தாலோ நொண்டிச் செல்லும்போது கட்டத்தின் கோடுகளை மிதித்து விட்டாலோ ஆட்டத்திலிருந்து வெளியாகிட நேரிடும். இவ்விளையாட்டானது குழந்தைகளின் உடலுக்குப் புத்துணர்வை அளிக்கின்றது. கால்களில் இரத்த ஓட்டத்தையும் சீராக்குகின்றது. தன்னம்பிக்கை, தோல்வியில் கலங்காதிருத்தல், ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்போக்கு, கூடி விளையாடுதல் போன்ற நற்பண்புகளை அவர்களிடையே வளர்க்கின்றது.

நமது பாரம்பரிய விளையாட்டுகள் யாவும் குழந்தைகளைச் சுறுசுறுப்புடன் இயங்கச் செய்வதேயாகும்.

**கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. மேற்கண்ட விளையாட்டின் மூலம் பெறும் நன்மைகளைக் குமிழி வரைபடத்தின் மூலம் எழுதிக் காட்டுக.



2. நொண்டியடித்தல், கோலி விளையாட்டு ஆகிய இரு விளையாட்டுகளுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை இரட்டிப்புக் குமிழி வரைபடத்தின் மூலம் விளக்குக.

# பாடம் 3 கல்விமுறை

## விவரித்து எழுதுக.

**மலேசியாவில் தமிழ்மொழி**

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | மலேசியப் பள்ளிகளில் தமிழ்மொழி முக்கிய மொழிகளில் ஒன்றாகக் கற்பிக்கப்படுகின்றது. |
| துணைக் கருத்து | மலேசியாவில் இயங்கும் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழி பயிற்று மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது. |
| விளக்கம் | தமிழ்ப்பள்ளிகளில் முதலாம் ஆண்டு தொடங்கி ஆறாம் ஆண்டு வரை மலாய், ஆங்கில மொழிகளைத் தவிர்த்து மற்ற எல்லாப் பாடங்களும் தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. |
| சான்று | தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழி, கணிதம், அறிவியல், வரலாறு, நலக்கல்வி, உடல் கல்வி, வடிவமைப்பும் தொழில் நுட்பமும், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழியில் கற்பிக்கப்படுகின்றன. |


3.2.2 முதன்மைக் கருத்துக்கேற்ற துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை விவரித்துப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 1

**'மலேசியாவில் தமிழ்க்கல்வி' எனும் தலைப்பில் முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை விவரித்துப் பத்தியை எழுதுக.**

## இடுபணி 2

**'தமிழ்க்கல்வியின் பயன்கள்' எனும் தலைப்பில் முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்று என அடையாளங்கண்டு பத்தியில் எழுதுக.**



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



நாம் நமது வாழ்க்கையில் எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களையே கொண்டிருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்கள்தான் நம்மை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும். நாம் எண்ணுகின்ற எண்ணம் உயர்வு, மேன்மை பற்றியதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். நம் வாழ்வில் உயர்வு ஏற்படாவிட்டாலும் உயர்வாக எண்ணுவதை விடக்கூடாது என்பதை

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596)**

என்று வள்ளுவர் தமது திருக்குறளில் கூறியிருக்கிறார்.

### திருக்குறளும் பொருளும்

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (குறள் 596)**

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

**கருத்து :**

எண்ணுவதையெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும்.

### இடுபணி 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**ஏற்ற பொருளை எழுதுக.**

1. உள்ளுவது ______
2. எல்லாம் ______
3. உயர்வு உள்ளல் ______
4. மற்றுஅது ______
5. தள்ளினும் ______
6. தள்ளாமை ______

### இடுபணி 3

**குறளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி நடித்துக் காட்டுக.**

4.1.1 புகுமுக வகுப்பிற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# தொகுதி 14 சுற்றுச் சூழலைக் காப்போம்

## பாடம் 1 விளைவுகள் அறிவோம்

கலந்துரையாடுக.



உற்பத்தித் திறன் பெருகுதல்

தொழிற்சாலைகளின் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகள்




வேலை வாய்ப்புகள்



ஆற்றின் தூய்மைக்கேடு





நாட்டின் பொருளாதாரம் மேன்மையடைதல்





புகைமூட்டம்



சுற்றுப்புறத் தூய்மைக்கேடு

**1.5.2** தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்வர்.

**இடுபணி 1**

**‘தொழிற்சாலைகளின் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்திடுக.**

**இடுபணி 2**

**‘கிராமத்து வாழ்க்கை சீரானது’ எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்க.**



**இடுபணி 3**

**‘மக்கள் பூங்காக்களை நன்முறையில் பேணுகின்றனர்’ எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்க.**



## பாடம் 2 வெள்ளம்



### வாசித்து அறிக.



இடைவிடாமல் தொடர்ந்து பெய்யும் மழையினால் நிலம் மூழ்கடிக்கப்பட்டு பொங்கிப் பாய்ந்தோடும் நீரை வெள்ளம் என்று அழைக்கிறோம். ஆறு அல்லது ஏரி போன்ற நீர் நிலைகளில் உள்ள நீர் மிகையாகி, கரை உடைபட்டு நீரோட்டம் வலிமையாகிப் பெருக்கெடுப்பதை வெள்ளப் பெருக்கு என்கிறோம்.

வெள்ளம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. பருவக் காற்றினால் உண்டாகும் கனமழை, புயல், பனிப்படிவுகள் உருகுதல் போன்றவை காரணங்களாக அமைகின்றன. மேலும், அணை உடைப்பு போன்ற எதிர்பாராத நிகழ்வுகள், நில நடுக்கங்கள், நிலச் சரிவுகள் ஆகியவையும் வெள்ளத்திற்கு வித்திடுகின்றன.

வெள்ளத்தால் உடல் உயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்படுகின்றன. மக்களும் பிராணிகளும் நீரில் மூழ்கி இறக்க நேரிடுகின்றன. மேலும், வெள்ளத்தின் தாக்கத்தினால் தொற்று நோய்கள் பரவுகின்றன. அதனால், தொடர் பாதிப்புகள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு டிங்கி காய்ச்சல், காலரா நோய் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பொருள் சேதங்கள் ஏற்படுவதனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுறுகின்றது. பாலங்கள், தானுந்துகள், கட்டடங்கள், சாலைகள், கால்வாய்கள் மற்றும் அனைத்து வகையான கட்டமைப்புகளும் சேதமுறுகின்றன. சுற்றுலாத் துறையில் தற்காலிக வீழ்ச்சி ஏற்படுகிறது. மறுசீரமைப்புக்கான செலவுகள் அதிகரிக்கின்றன. உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதால் பொருள்களின் விலை உயர்கின்றது. இதனால், அன்றாட வாழ்க்கை பாதிப்படைகின்றது.

வெள்ளப் பேரிடரைத் தவிர்ப்பதற்காகப் பல அரிய பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ளம் ஏற்படும் போது கரை உடைத்துக் கொள்ளாமல் இருக்க மதகுகள், தடுப்புகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் வாரணை போன்ற அரண்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், அவசரகாலப் பயன்பாட்டிற்கென மணல் மூட்டைகள் காற்று ஊதப்பட்ட குழாய்கள் போன்றவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அரசாங்கம் பல வகையில் வெள்ள நிவாரண மையங்களை உருவாக்கி வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு நல்கி வருகின்றது. மேலும், அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, மருத்துவ வசதிகள் போன்றவற்றையும் ஏற்படுத்தித் தருகின்றது. வந்தபின் பார்ப்போம் என்பதைவிட வருமுன் காப்பது சாலச் சிறந்தது.

2.3.2 • வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்பர்.

## இடுபணி 1

**வெள்ளம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்து அதிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க. மர வரைபடத்தில் குறிப்பிடுக.**

வெள்ளம்

| விளக்கம் | காரணம் | பாதிப்பு | தடுக்கும் வழிமுறை |
|---|---|---|---|
| ________ | ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ | ________ |

## இடுபணி 2

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க.**



சுற்றுச்சூழல் சுத்தமாக இருந்தால் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழலாம். உடல் சுத்தம், உடை சுத்தம், உளத் தூய்மை, உறைவிடச் சுத்தம், உடைமைகளின் சுத்தம், சுத்தமான உணவு, சுற்றுச்சூழல் சுத்தம் போன்றவை நம் ஆரோக்கியத்திற்குக் காரணமாக அமைகின்றன.

நாம் நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழத் தூய்மையைப் பேணுவது மிகவும் அவசியம். உடல், உடை சுத்தமாக இருந்தால் நாம் தோல் வியாதி, பல் வலி, கண் வலி, காது வலி போன்றவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

நம் வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் நாம் பயன்படுத்தும் பொருள்களையும் சுத்தமாக வைத்திருப்பதன் வழி நோய்களைப் பரவச் செய்யும் ஈ, கொசு, கரப்பான் பூச்சி, எலி போன்றவை வீட்டினுள் வராமல் தடுக்கலாம். இது நம் சுகாதார வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். அதுமட்டுமன்றி சுத்தமான இல்லம் மன மகிழ்ச்சியைத் தரும்.

நாம் நீண்ட நாள் ஆரோக்கியமான வாழ்வு வாழச் சுத்தமான உணவு தேவைப்படுகின்றது. ஈ மொய்த்த, அழுகிய, சுத்தமற்ற உணவு ஆகியவற்றை நாம் உட்கொள்ளக் கூடாது. சூடான, சுத்தமான சத்துள்ள உணவையே நாம் உண்ண வேண்டும். குடிப்பதற்குச் சுத்தமான கொதித்து ஆறிய நீரை அருந்த வேண்டும்.

நாம் நம் அன்றாட வாழ்வில் ஆரோக்கியத்தைக் கடைப்பிடித்து வாழ்வது அவசியமாகும். தூய்மையான இடத்தில் இறையருள் மலிந்து கிடக்கும். ஆகவே, நாம் நலமான, மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கை வாழச் சுத்தத்தைப் பேணுவோம்; சுற்றுப்புறச் சூழலைப் பராமரிப்போம்.

இடுபணி 3

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு கூறி உரையாடுக.**



## வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்

தொழிற்துறையின் ஆதிக்கத்தால் இயற்கையின் கொடையான மரங்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். தனி மனித நலம் எனக் கருதாமல் உலக நலனுக்காக நாம் அனைவரும் வீட்டுக்கு ஒரு மரமாவது வளர்க்க முற்பட வேண்டும்.



மரங்களை வளர்ப்பதனால் நாம் பல நன்மைகளைப் பெறுகின்றோம். பசுமையான மரங்கள் நம் மனத்திற்கு அமைதி தருவனவாகும். தினமும் பலவகையான சிக்கல்களைச் சந்திக்கும் நமது மனதுக்கு மரம் நடுவதன் மூலம் அமைதி காண இயலும். மரங்களை நட்டு வளர்ப்பதால் சுற்றுச்சூழலின் மாசுபாட்டினையும் குறைக்கலாம். உயிர்வளியை அள்ளித் தரும் மரங்கள் நாம் நோயின்றி வாழ இன்றியமையாத செல்வங்களில் ஒன்றாகும்.



மரங்களை நட்டு வளர்ப்பதனால் காற்றின்மூலம் பரவும் பலவகை நோய்களிலிருந்து நாம் விடுபடலாம். புகை மூட்டம், காற்றுத் தூய்மைக்கேடு ஆகிய சிக்கல்களையும் தவிர்க்கலாம். மண் அரிப்பு, மண் சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுவதற்கு முதன்மைக் காரணம் மரங்களை அழிப்பதுவே. இப்பேரிடரைத் தவிர்க்க நாம் மரங்களை நட்டு வளர்ப்பதுவே சிறந்த வழியாகும்.

இயற்கை சமன்நிலையை விரும்பாதவர் இலர். இச்சமன் நிலையை உருவாக்க மரங்களை நடுவதே சாலச் சிறந்த வழியாகும். அனைத்து உயிரினங்களும் அமைதியுடன் வாழ வழிகாண மரம் நடுவோம். வளம் பெறுவோம்!

# பாடம் 3 பசுமையைப் போற்றுவோம்

## விவரித்து எழுதுக.

முன்னுரை

இயற்கையின் படைப்பில் காடுகள் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் கிடைத்த பரிசாகும். இத்தகைய காடுகள் நமக்குப் புதையல் என்றே கூற வேண்டும். காடுகளை அழிப்பதனால் நமக்கு நன்மையும் தீமையும் ஏற்படவே செய்கின்றன.



கருத்து 1

காடுகளை அழித்துக் கிடைக்கும் மரங்களின் மூலமே மரத்தாலான தளவாடப் பொருள்கள் செய்யப்படுகின்றன. இத்தளவாடப் பொருள்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன்மூலம் நம் நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்த முடிகின்றது.



கருத்து 2

காடுகளை அழிப்பதனால் மட்டுமே விவசாயம் செய்ய இயலும். நெல், செம்பனை, ரப்பர், பழமரங்கள் போன்றவற்றைப் பயிர் செய்ய ஏற்ற நிலம் கிடைக்கும். மேலும், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களுக்காகத் தொழிற்சாலைகள், அலுவலகங்கள் கட்டுவதற்கு இயலும்.



கருத்து 3

காடுகளை அழிப்பதனால் நன்மைகள் இருந்தாலும் பல தீமைகளும் இருக்கவே செய்கின்றன. பூமியின் வெப்பம் அதிகரிப்பதற்குக் காரணம் காடுகள் அழிவதனால்தான். இதனால், சுற்றுச் சூழலில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. வெப்பத்தின் காரணத்தினால் காற்றுத் தூய்மைக்கேடு அடைகின்றது. தொடர்ந்து மக்கள் பல நோய்களுக்கும் ஆளாகின்றனர்.



முடிவுரை

நமக்கு வரமாகக் கிடைத்த காடுகளை முறையாகப் பாதுகாக்க வேண்டுவது நம் அனைவரின் கடமையாகும். தேவைக்கு ஏற்ப மரங்களைப் பயன்படுத்தி வளமுடன் வாழ முற்பட வேண்டுவதே சிறப்பு.

3.4.6 130 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்.

### இடுபணி 1

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பல்நிலை மர வரைபடத்தின் துணையுடன் சட்டகம் அமைத்திடுக.**

### இடுபணி 2

**‘குடியிருப்புப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைப்பதால் ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் ஒரு விவாதக் கட்டுரை எழுதுக.**

வேலை வாய்ப்பு கிடைக்கும்

சுற்றுப்புறத் தூய்மைக் கேடு ஏற்படும்



போக்குவரத்து வசதிகள் அமையும்

நோய் ஏற்படும்

குடும்பப் பொருளாதாரம் மேன்மையடையும்

சமூகச் சிக்கல்கள் அதிகரிக்கும்

### இடுபணி 3

**‘நாளங்காடிகளினால் ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் ஒரு விவாதக் கட்டுரை எழுதுக.**



# பாடம் 4 இலக்கணம்

## வலிமிகுதலை அறிக.

அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

எ.கா:-

அங்கு + படித்தான் = அங்கு**ப்** படித்தான்

இங்கு + கண்டான் = இங்கு**க்** கண்டான்

எங்கு + சென்றான் = எங்கு**ச்** சென்றான்?

அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

எ.கா:-

அப்படி + சொல் = அப்படி**ச்** சொல்

இப்படி + பேசு = இப்படி**ப்** பேசு

எப்படி + கிடைத்தது = எப்படி**க்** கிடைத்தது?

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

எ.கா:-

அந்த + பையன் = அந்த**ப்** பையன்

இந்த + தலைவன் = இந்த**த்** தலைவன்

எந்த + குழந்தை = எந்த**க்** குழந்தை?

## இடுபணி 1

**சேர்த்தெழுதுக.**

1. அங்கு + போகாதே = ______
2. இங்கு + பார் = ______
3. எங்கு + செல்வாய் = ______
4. அப்படி + சொல்லுங்கள் = ______
5. இப்படி + செய்யலாம் = ______
6. எப்படி + கொடுப்பது = ______
7. அந்த + கோவில் = ______
8. இந்த + பாடம் = ______
9. எந்த + கட்டடம் = ______
10. இங்கு + கொண்டாடலாம் = ______
11. எப்படி + கூறினாய் = ______
12. அந்த + பெரியவர் = ______

5.4.2
5.4.3
5.4.4

- அங்கு, இங்கு, எங்கு என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**சரியான சொல்லை எழுதுக.**

1. "அவர்கள் ______ போனார்கள்?" என ஆசிரியர் வினவினார்.
2. "______ புத்தகத்தை நீ எங்கு வாங்கினாய்?" என்று தேன்மதி கேட்டாள்.
3. ______ சிறுவன் உன்னைக் கேலி செய்தான்?
4. ______ தொழிலாளி பகுதி நேர வேலையாகக் காய்கறிகள் விற்கின்றார்.

## இடுபணி 3

**பின்வரும் நிலைமொழிக்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து வருமொழியை உருவாக்குக; பின்னர் வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

**எ.கா:**

இந்த  இந்த+பகுதி= இந்தப் பகுதி

திரு. கவியரசு **இந்தப் பகுதியில்தான்** ஒரு வீடு வாங்க வேண்டும் என்று எண்ணியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. அந்த ______ | 4. இங்கு ______ | 7. எப்படி ______ |
| 2. இந்த ______ | 5. இப்படி ______ | 8. எங்கு ______ |
| 3. அப்படி ______ | 6. எந்த ______ | 9. அங்கு ______ |

## வளப்படுத்துதல்

**அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து படங்களின் துணையுடன் சொற்றொடர்களை உருவாக்குக.**



## குறைநீக்கல்

**பிரித்தெழுதுக.**

| | |
|---|---|
| 1. எந்தப் புதையல் = ______ | 7. எந்தச் சட்டை = ______ |
| 2. அப்படிச் சொல் = ______ | 8. எங்குச் சென்றாள் = ______ |
| 3. இங்குப் புதைத்தனர் = ______ | 9. இங்குப் பதுங்கினான் = ______ |
| 4. இந்தப் பெண் = ______ | 10. இப்படித் தாருங்கள் = ______ |
| 5. எப்படிச் சாதித்தார் = ______ | 11. இந்தக் குழந்தை = ______ |
| 6. அந்தப் பட்டணம் = ______ | 12. எப்படிக் கூறுவது = ______ |

# தொகுதி 15 பொருளாதாரமும் பயனீட்டாளரும்

## பாடம் 1 விடை காண்போம்

கலந்துரையாடுக.

மலேசியர்களின் பொருளாதார நடவடிக்கைகள்

- எப்போது?
- ஏன்?
- யார்?
- எந்த?
- தெரு அங்காடி
- கால்நடை வளர்ப்பு










கைத்தொழில்







விவசாயம்





இடுபணி 1

**பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்கள் அறியக் கேள்விகள் கேட்டிடுக.**

**எ.கா:**
நீ எந்தத் தொழிலைத் தெரிவு செய்ய விரும்புகிறாய்? ஏன்?

1.4.1 பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்கள் அறியக் கேள்விகள் கேட்பர்.


## இடுபணி 2

**பயனீட்டாளர் உரிமை தொடர்பான விவரங்களைப் பெற பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டிடுக.**

**பயனீட்டாளர் உரிமைகள்**



பொருள் வாங்கும் போது விலைச்சிட்டை வாங்குதல்




பொருளின் காலாவதி நாளை அறிதல்



பொருளின் தரத்தை, விவரத்தைப் படித்துப் பார்த்தல்



பயனீட்டாளர் சங்கத்தில் புகார் செய்தல்

## இடுபணி 3

**பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்களை அறியக் கேள்விகள் கேட்டிடுக.**



பரம்பரைத் தொழில் பல நன்மைகளைத் தருகின்றது.



தொழிற்கல்வி பயில்வது சிறப்பு

யார்? ஏன்? எப்போது? எதற்கு? எந்த?



இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடலாம்



சிறுதொழில் வாணிபம் செய்யலாம்.

# பாடம் 2 வேலை வாய்ப்பு

## வாசித்து அறிக.

# அலிபாபா பேரங்காடி

**எங்களுடன் இணையுங்கள்**





## வேலை வாய்ப்பு

**வேலை தகுதிப்பாடுகள்:-**

- எஸ்.பி.எம் முழுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- தேசிய மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



நியாயமான வருமானம் பெறலாம்

- கிடங்கு நிருவாகி = RM1800.00
- கிடங்கு நிருவாகி உதவியாளர் = RM1400.00
- விற்பனை முகவர் = RM1200.00

கிடைக்கப்பெறும் நன்மைகள்

- மாதம் 2 முறை சம்பளம்
- மிகுதி நேர ஊதியம்
- பணிச் சீருடை இலவசம்
- போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

புலனம் வழி தொடர்பு கொள்க:
011 01117771 திரு. மதியழகன்
019 1001011 திரு. அலி

எங்களின் மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம்.
மின்னஞ்சல்: alibabamulti1@gmail.com

## இடுபணி 1

**விளம்பரத்திலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்ந்திடுக.**

2.2.1 • விளம்பரத்திலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்வர்.

இடுபணி 2

விளம்பரத்திலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்ந்திடுக.

அ.




ஆ.



# பாடம் 3 அழகு நிலையம்

**கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**




**இடுபணி 1**

**'அழகு நிலையம் வழங்கும் சேவைகள்' எனும் தலைப்பில் 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

**3.4.3** 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 2

**'குடும்பப் பொருளாதார வீழ்ச்சிக்கு அறியாமைதான் காரணம்' எனும் தலைப்பில் 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக. பின்வரும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.**

| | | |
|---|---|---|
| உடல் ஆரோக்கியம் பற்றி அறியாமை → | நோய்க்கு ஆளாகுதல் → | பண விரயம் ஏற்படுதல் |
| எதிர்காலச் சவால்கள் பற்றி அறியாமை → | சிக்கனமின்றி ஊதாரியாகச் செலவு செய்தல் → | பொருளாதாரச் சிக்கலில் சிக்கிக் கொள்ளுதல் |
| கல்வியின் மகத்துவம் பற்றி அறியாமை → | கல்வியில் பின்தங்கித் தோல்வி காணுதல் → | பொருளாதாரம் தேட வழியின்றி அலைதல்; கூலி வேலை செய்தல் |
| நாட்டின் அரசியல் நுணுக்கங்களைப் பற்றி அறியாமை → | வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குதல் → | வாய்ப்புகளை இழந்து பொருளாதார வீழ்ச்சி ஏற்படுதல் |

## இடுபணி 3

**'குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்' எனும் தலைப்பில் 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**




### அறிந்து கொள்க

**கருத்து விளக்கக் கட்டுரை எழுதும் முறை**

- தலைப்புக்குத் தொடர்புடைய கருத்துகளை நன்கு விவரித்து எழுதுதல் வேண்டும்.
- எந்தக் கோணத்திலும் இக்கட்டுரையை அணுகலாம்.
- கருப்பொருளைச் சார்ந்தே எழுத வேண்டும்.
- இத்தலைப்பை விளைவுகள் (நன்மை, தீமை), பரிந்துரை, ஏற்படுவதற்கான காரணங்கள், தவிர்க்கும் வழிமுறைகள் போன்ற கோணங்களில் தனித்தும் அல்லது கலந்தும் அணுகலாம்.
- கருத்துகளை முதன்மைக் கருத்துகள், சார்புக் கருத்துகள், எடுத்துக்காட்டுகள் போன்ற அடிப்படையில் விவரிக்கவும் விளக்கவும் வேண்டும்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.




என் தம்பி தனக்கு வேண்டியவற்றை எப்படியாவது என் பெற்றோரிடம் அடம்பிடித்துப் பெற்றுக் கொள்வான். அவன் ஒரு தடவை முடிவு செய்துவிட்டான் என்றால் **குரங்குப்பிடியாக** நின்று அதனைச் சாதித்துவிடுவான்.



கடந்த வாரம் எனக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தது. என் தோழி திலகவதியிடம் தொலைபேசியின் வாயிலாகத் தெரிவித்தேன். இரவு நேரம் என்றுகூடப் பார்க்காமல் **இரண்டெட்டில்** என்னைப் பார்க்க ஓடோடி வந்துவிட்டாள். என் மீது அவ்வளவு அன்பு கொண்டவள் திலகவதி.



பூபதியை என் வகுப்பிலுள்ள யாருக்கும் பிடிக்காது. இன்று என் பள்ளியிலுள்ள பல நண்பர்கள் பிரிந்து இருப்பதற்கு அவன்தான் முக்கியக் காரணம். அவன் ஒருவரைப் பற்றி மற்றவரிடம் **பற்ற வைப்பதையே** வேலையாக வைத்திருக்கின்றான்.




நேற்றைய சொற்போரில் என் நண்பன் ஜெயபாலனின் குழுவினர் வெற்றிபெற்றனர். அவர்கள் தங்களது வாதத் திறமையால் **இடைவிடாமல்** பேசி அவையினரை வியக்க வைத்தனர். அனைவருடைய பாராட்டையும் பெற்றனர்.

4.5.1 புகுமுக வகுப்பிற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்காள் தன் தோழியின் வீட்டிற்குச் சென்றிருந்தாள். தோழியின் வீட்டு விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டாள். மாலை வேளையில் வீடு திரும்பினாள். வீட்டை அடையும்போது அவளின் முகம் வாடியிருந்தது. தனது தங்கச் சங்கிலி எங்கேயோ **கை தவறிப்** போனது என அம்மாவிடம் கூறி வருந்தினாள். அம்மா அக்காவிற்கு ஆறுதல் கூறினார்.

## மரபுத்தொடர்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| **குரங்குப்பிடி** | - | **பிடிவாதம்** |
| **இரண்டெட்டில்** | - | **விரைவில்** |
| **பற்ற வைத்தல்** | - | **பகை மூட்டுதல்** |
| **இடைவிடாமல்** | - | **தொடர்ந்து / தடையில்லாமல்** |
| **கை தவறுதல்** | - | **தொலைந்து போதல்** |

### இடுபணி 1

**மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**விளக்கத்திற்கு ஏற்ற மரபுத் தொடரை எழுதுக.**

1. பாதுகாப்பாக வைத்திருந்த ஒரு பொருள் தொலைந்து போய் விடுதல்.

2. நண்பர்களின் நட்பில் விரிசல் உண்டாகும்படி பகை மூட்டி விடுதல்.

3. ஒரு செயலைத் தொடர்ந்து செய்து கொண்டே இருத்தல்.

4. ஒன்றை அடையும் பொருட்டு மிகவும் பிடிவாதம் செய்தல்.

5. விரைவாக ஓரிடத்தைச் சென்று அடைதல்.

## இடுபணி 3

**பின்வரும் மரபுத்தொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. குரங்குப்பிடி
2. இரண்டெட்டில்
3. பற்ற வைத்தல்
4. இடைவிடாமல்
5. கை தவறுதல்

## வளப்படுத்துதல்

**ஏதேனும் ஒரு மரபுத்தொடரைத் தெரிவு செய்து சூழலை உருவாக்குக.**

## குறைநீக்கல்

**அ) பொருளுக்கேற்ற மரபுத்தொடருடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| விரைவில் | குரங்குப்பிடி |
| பகை மூட்டுதல் | இரண்டெட்டில் |
| பிடிவாதம் | பற்ற வைத்தல் |
| தொலைந்து போதல் | இடைவிடாமல் |
| தொடர்ந்து / தடையில்லாமல் | கை தவறுதல் |

**ஆ) படத்திற்கு ஏற்ற மரபுத்தொடரை எழுதுக.**





# தொகுதி 16 போக்குவரத்தும் நவீன சாதனங்களும்

## பாடம் 1 நவீனத்தை நோக்கி

**கலந்துரையாடுக.**






1.2.1 • நடப்புச் செய்தியையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.

## இடுபணி 1

நமது நாட்டில் போக்குவரத்து, மருத்துவம், கல்வி ஆகியவற்றில் ஏற்பட்ட நவீனங்களும் மேம்பாடுகளும் பற்றிய கருத்துகளைப் பண்புடன் கூறுக.

## இடுபணி 2

'நவீனமான பொது நல வசதிகள் மலேசியர்கள் மகிழ்ச்சியுடன் வாழ அடித்தளமாக அமைகின்றன' எனும் தலைப்பில் உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.



இலகு ரயில்




நவீன ஓடையிழுவை



விமானம்

## இடுபணி 3

'கணினித் துறையில் சிறந்த வேலை வாய்ப்புகள் உருவாகின்றன' எனும் தலைப்பையொட்டிக் குமிழி வரைபடத்திலுள்ள குறிப்புகளின் துணையுடன் எண்ணங்களையும் கருத்துகளையும் கூறுக.



பாடம் 2

# கற்றல் உலகம்

## வாசித்து அறிக.

21ஆம் நூற்றாண்டுக் கற்றலில் தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் **அளப்பரிய** பங்கினை ஆற்றுகின்றது. ஒவ்வொரு மாணவனும் இவ்வகைக் கற்றலில் **பீடுநடை** போடுவது அவசியமாகின்றது.

வகுப்பறை போதனைக்குப் பேருதவியாக அகத் தொலைக்காட்சி திகழ்கின்றது. இது **நவீனத்** தொழில் நுட்பக் கருவிகளில் ஒன்றாகும். இக்கருவியின்வழி ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் முறையைத் திறம்பட நடத்த முடிகின்றது. மாணவர்களும் தங்களின் முழுக் கவனத்தைக் கற்றலில் செலுத்த முடிகின்றது.

நீண்ட காலமாகப் **புழக்கத்தில்** இருந்து வரும் ஒலி நாடாப் பெட்டியின் பயன்பாடும் கற்றலை வலுப்படுத்துகின்றது. கல்வி தொடர்பான பாடங்களை ஒலிப்பதிவு செய்து, விரும்பிய நேரத்தில் கேட்டறியும் பயனையும் இதன்வழி பெறலாம். 21ஆம் நூற்றாண்டுக் கற்றலின்வழி மாணவர்கள் கூட்டாகப் பயிலும் வாய்ப்பையும் பெறுகின்றனர். விளையாட்டுகளின்வழி தங்களின் சிந்தனை ஆற்றலையும் வளம் பெறச் செய்கின்றனர். சுய கற்பனையால் புதிய உருவாக்கங்களையும் உருவாக்கி வெற்றி வாகை **சூடுகின்றனர்**.

மாணவர்களின் சாதனைகளும் வெற்றிகளும் உலக அரங்கில் பேசப்பட்டும் வருகின்றன. எனவே, தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தின் துணையுடன் மாணவர்கள் தங்கள் பிரகாசமான எதிர்காலத்தைப் பெற்றுப் **பயனுற** வேண்டும்.



இடுபணி 1

**வண்ணத்திலான சொற்களுக்குப் பொருள் கூறுக.**

2.4.4 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 2

1. நவீன மேம்பாடுகள் பள்ளி மாணவர்களுக்கு எவ்வகையில் துணைபுரிகின்றன என்பதனை விளக்குக.
2. அகத் தொலைக்காட்சி என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?
3. நான்காவது பத்தியில் கூறப்பட்ட விவரங்கள் யாவை?
4. வகுப்பறையில் தொடர்புச் சாதனங்களின் பங்கு யாவை?
5. 21ஆம் நூற்றாண்டுக் கல்வியினை மேலும் எவ்வாறு மேம்படுத்தலாம்?

## இடுபணி 3

**உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

இன்று உலகம் சுருங்கி நெருங்கி விட்டது. உலகத்தின் ஒரு மூலையில் நிகழும் செயல், மறுமூலையைப் பாதிக்கின்றது. அரசியல், சமூகம், வணிகம் என்ற அமைப்பில், இன்று உலக மக்கள் விழிப்புணர்வுடன் வாழ்கின்றனர். பலர் நாடு விட்டு நாடு சென்று வசிக்கும் நிலையும் உருவாகியுள்ளது. எனவே, இக்காலத்தில் செய்தித் தொடர்பு அவசியமாகின்றது. தந்தி, தபால், பத்திரிகை, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி போன்ற செய்தித் தொடர்புகள் அவசியமாகின்றன. இவை அனைத்தும் இன்று பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளன.



உலகின் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வானொலி தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் உதவுகின்றன. செய்திகளை விரிவாக அறிந்திட செய்தித்தாள்கள் உதவுகின்றன. விமானம், அதிவிரைவு இரயில் போன்ற போக்குவரத்துச் சாதனங்களும் அரிய வளர்ச்சி கண்டுள்ளன. மேலும், இக்காலச் செய்தித் தொடர்பையும் அதிகப்படுத்தியுள்ளன.







1. உலக மக்கள் எந்தெந்த அமைப்பில் விழிப்புடன் வாழ்கின்றனர்?
2. செய்தித் தொடர்புச் சாதனங்கள் யாவை?
3. உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிய உதவும் சாதனங்கள் யாவை?
4. இக்காலச் செய்தித் தொடர்பை அதிகப்படுத்திய சாதனங்களாகக் கூறப்படுபவை யாவை?

# பாடம் 3 நன்மைகள் அறிவோம்

**கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**





பொதுப் போக்குவரத்தின் நன்மைகள்

- வசதி குறைந்தவர்களும் பயணம் செய்யலாம்
- பாதுகாப்பானதாக அமைகின்றது
- குறைந்த விலையிலான சேவை
- விவேகமான செயல்பாடு
- வாகன நெரிசலைக் குறைக்கின்றது
- காற்றின் தூய்மைக் கேட்டினைக் குறைக்கிறது

## இடுபணி 1

**‘பொதுப் போக்குவரத்தின் நன்மைகள்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

## இடுபணி 2

**‘நவீன வசதிகளினால் மக்கள் அடையும் நன்மைகள்’ எனும் தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

நவீன வசதிகள்

- அன்றாட பணிகளை இலகுவாக்குதல்
- அதிகமான வேலை வாய்ப்புகள்
- பொருளாதாரத் துறையில் முன்னேற்றம்
- தகவல்களை விரைவில் / எளிதல் பெறலாம் /அனுப்பலாம்

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டி 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

இன்றைய மாணவர்களும் நவீனத் தொழில்நுட்பச் சாதனங்களும்.



## குறைநீக்கல்

**நிறைவு செய்க.**

விழாக்காலங்களில் சாலையில் அதிக __________ ஏற்படுகின்றது. இதனைத் தடுக்க பல __________ உள்ளன. சாலையைப் பயன்படுத்துவோர் தங்களின் விழாக்கால __________ திட்டமிட வேண்டும். மேலும், அனைவரும் __________ ஒரு வாகனத்தில் பயணம் செய்ய முயல வேண்டும். இவ்வாறு செய்வதன் வாயிலாகச் சாலை நெரிசலை ஓரளவு __________ .

பயணத்தைத் | நெரிசல் | வழிகள் | குறைக்கலாம் | இணைந்து



# இலக்கணம்

## வலிமிகாமையை அறிக.

**வலிமிகா இடங்கள்**

- சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.



அங்கே, இங்கே, எங்கே என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது.

எ.கா:

அங்கே + கொடு = அங்கே கொடு
இங்கே + பார் = இங்கே பார்
எங்கே + செல்கிறாய் = எங்கே செல்கிறாய்?

அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது.

எ.கா:

அத்தனை + செடிகள் = அத்தனை செடிகள்
இத்தனை + கடைகளா = இத்தனை கடைகளா?
எத்தனை + பாடம் = எத்தனை பாடம்?



### இடுபணி 1

**பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்திடுக.**

1. அங்கே போகாதே
2. அத்தனை பொருள்களும்
3. இங்கே கூடலாம்
4. எத்தனை மாணவர்கள்?
5. எங்கே சென்றனர்?

5.5.1
5.5.2

- அங்கே, இங்கே, எங்கே என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**பின்வரும் நிலைமொழிகளுக்குப் பின் க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கும் சொற்களை உருவாக்குக; பின்னர் சேர்த்தெழுதுக.**

**எ.கா:**

இங்கே + படுக்கலாம் = இங்கே படுக்கலாம்
எத்தனை + சிறுவர்கள் = எத்தனை சிறுவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. அங்கே | | 3. எங்கே | | 5. இத்தனை | |
| 2. இங்கே | | 4. அத்தனை | | 6. எத்தனை | |

## இடுபணி 3

**பின்வரும் சொற்களைக் கொண்டு அவற்றுக்குப் பின் வலிமிகாது என்பதை அறிந்து சொற்றொடர்களை உருவாக்கி வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அங்கே | இங்கே | எங்கே |
| எத்தனை | அத்தனை | இத்தனை |



**எ.கா:**

**அங்கே சென்றான்**

அந்த ஆபத்தான குளத்தில் குளிக்கக் கூடாது என்று தங்கதுரை கூறியும் நகுலன் அதனைப் பொருட்படுத்தாது மீண்டும் **அங்கே சென்றான்**.

தொகுதி 17 சமயமும் நாமும்

## பாடம் 1 மனிதம்

### கலந்துரையாடுக.

மனிதன் மனிதனாகப் பிறந்து மனித நேயத்துடன் வாழ வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. தன்னலம் கருதாமல் பிறர் நலம் போற்றும் எண்ணம் கொண்ட மனிதரே மனித நேயம் மிக்கவராகக் கருதப்படுகின்றனர்.

மனித நேயம் மிக்கவர்களின் எண்ணம், சொல், செயல் அனைத்தும் நல்லனவாகவே இருக்கும். இப்பூமியில் நாம் பார்க்கின்ற, பேசுகின்ற, பழகுகின்ற உயிர்களுக்கு எந்தத் துன்பமும் செய்யாமல் இருத்தலே சிறந்த மனித நேயமாகும்.





பொறுமை, அன்பு, இரக்கம் போன்ற பண்புகளைக் கொண்டு பிறரை அணுகுபவர்கள் மனித நேயம் மிக்கவர்களாகப் போற்றப்படுகின்றனர். அதே வேளையில், பொறாமை, கோபம், பழிவாங்கும் எண்ணம் உள்ளவர்கள் மனித நேயம் இல்லாதவர்களாகவே கருதப்படுகின்றனர். மனித நேயத்தை மக்கள் மனங்களில் விதைக்க வேண்டுமென்றால், ஆணவம், பண்பாட்டுச் சீரழிவு, தீவிரவாதம் போன்றவற்றை ஒழித்து உலகைச் சீரோடும் சிறப்போடும் வழிநடத்த வேண்டும்.

தன்னுயிரைப் போலப் பிற உயிர்களை நேசிக்கும் மனப்பான்மை உள்ளவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மனித நேயம் மிகுந்த பூமியாக மாற வேண்டுமானால் ஊழல், கையூட்டு, வஞ்சிப்பு ஆகியவை இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அன்பான, பண்பான, ஒழுக்கமான, இறையுணர்வு மிகுந்த குடும்பத்தில் மனித நேயமே ஆட்சி புரிகின்றது.

என்னை நுணுகுக

### இடுபணி 1

**செவிமடுத்த மனிதம் தொடர்பான உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுக.**

1.3.1 செவிமடுத்த உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுவர்.

## இடுபணி 2

**செவிமடுத்த உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுக.**



சமயக் கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை நெறிமுறைகளை வளப்படுத்த கற்பிக்கப்படும் ஒரு கல்வியாகவே கருதப்படுகிறது. சமயக் கல்வியைப் பயில்வது அனைவருக்கும் அவசியமானதாகும். சமயக் கல்வியின் மூலம் நாம் ஒரு தலைசிறந்த தலைமுறையை உருவாக்கலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இக்காலகட்டத்தில் சமயக் கல்வி இளைஞர்களுக்கு மிகவும் அவசியமாகிறது.

சமயக் கல்வி ஒரு மனிதனின் மனத்தை அமைதிப்படுத்தும் வலிமையுடையது. சமயக் கல்வி சினத்துடன் இருக்கும் மனிதனை அமைதியாகவும் அடக்கமாகவும் மாற்றிவிடும். அலைபாயும் நமது மனத்தை சமய போதனையினால் ஒருநிலைப்படுத்தி நமது எண்ணங்களைச் சீர்படுத்த இயலும்.

சமய போதனையினால் நமது எண்ணங்களை நிலைநிறுத்த முடியும். நம் கண்கள் கண்டதைப் பார்க்கும். நம் காது தகாதவற்றைக் கேட்கும். இவை யாவும் நம் எண்ணத்தில் பதியும். அலைபாயும் நம் எண்ணத்தை நிலைநிறுத்த சிறந்த நிவாரணியாகச் சமயக் கல்வி அமைகின்றது. சமயக் கல்வி ஒரு மனிதனை ஒழுக்கப்படுத்துகிறது.

என்னை நுணுகுக

‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்’

எனும் திருக்குறளுக்கு இணங்க ஒழுக்கம் ஒரு மனிதனுக்கு உயிரைவிட மேலானதாகக் கருதப்படுகிறது. அதனால், சமயக் கல்வி ஒரு மனிதனின் வாழ்வில் அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது. சமயக் கல்வியின்வழி ஒருவன் நல்லவனாக மாறுவது சாத்தியமே. சமயக் கல்வியைக் கற்போம்! பயன்பெறுவோம்!

## இடுபணி 3

**செவிமடுத்த உரைநடைப் பகுதியிலுள்ள தகவல்களைக் கூறுக.**

குடும்ப நலனில் மட்டுமின்றி பொதுநலனிலும் அக்கறை காட்டிய பெண்களும் நம்மிடையே உள்ளனர். பிளாரன்ஸ் நைட்டிங்கேல், அன்னை திரேசா போன்றோர் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாவர். சமுதாயத்திற்காகத் தங்கள் உடல், பொருள், உயிர் அத்தனையும் ஈகம் செய்த கண்ணின் மணிகள் இவர்கள். இவர்களைத் தவிர்த்து இந்திரா காந்தி, மரியா மாண்டிசோரி அம்மையார், ஆங் சான் சூகி, மார்கரெட் தாட்சர், கோல்டா மேயர், ஹெலன் கெல்லர் அம்மையார், அன்னை மங்களம், துன் டாக்டர் சித்தி ஹாஸ்மா, தோபுவான் உமா சம்பந்தன் போன்ற பெண்களும் பொதுநலச் சேவையில் போற்றத்தக்கவர்களே. இப்பெண்மணிகள் யாவரும் குடும்பத்தின் கண்களாகவும் வாழ்ந்தவர்கள்; வாழ்கிறவர்கள். இவர்களுள் ஒரு சிலர் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து விட்டாலும் இன்றும் இவர்கள் நினைக்கப்படுவதற்கும் போற்றப்படுவதற்கும் காரணம் அவர்களின் பொது நலச்சேவையே.

என்னை நுணுகுக

# இறைமொழி



## வாசித்து அறிக.

எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல், இன்சொல் பேசிப் பழகுதல் என்பதே இறைவனுக்குப் பிடித்தமான தொண்டாக அமையும். அன்பின் வழியது உயிர் நிலை என்றார் திருவள்ளுவர். இரக்கத்தையும் அன்பையும் அனைத்து உயிர்களிடத்தும் காட்டுவதுதான் இறைநம்பிக்கையின் அடித்தளம் என்றார்.



யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு ஓர் இன்னுரைதானே!



என்று திருமூலர் தமது திருமந்திரத்தில் கூறியுள்ளார். உயிரினங்கள் மீது அன்பு செலுத்துவது இறைவன் விரும்பும் அற்புதச் செயல் என்றார். பசுவிற்குத் தினமும் ஒரு வாய் புல்லாவது கொடுப்பது பெரிய புண்ணியம் என்றார். இவை அனைத்தையும் மீறி, கடும் சொற்களைத் தவிர்த்து இனிய சொற்களால் பிறரிடம் பேசினாலே போதும். அதுவே, நாம் இறையருள் பெறும் வழியில் செல்கிறோம் எனப் பொருளாகும் என்கின்றனர்.



எனவே, இறைமொழி எனப்படுவது இறையருளை ஈர்க்கும் கருவி என நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இன்சொல்லின் மூலமே அன்பை வெளிப்படுத்த இயலும். அன்பு காட்டி இறையருள் பெற அனைவரும் முயல்வோமாக.



2.3.1 வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்காண்பர்.

## இடுபணி 1

**மௌனமாக வாசித்து வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்கண்டு எழுதுக.**

காலத்தைக் கணக்கிட்டு அறிந்துகொள்ள ஏதுவாக காலத்தின் பிரிவுகளே அடிப்படையாகும். எனவேதான், வருடங்களுக்கும் மாதங்களுக்கும் நாள்களுக்கும் தனித்தனியே பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. நாள்களுக்கு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று ஏழு கிரகங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

மாதங்களுக்குச் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன. பன்னிரண்டு மாதங்களுக்கும் இந்தப் பெயர்கள் எவ்வாறு உண்டாயின என்பதை அறிவோம்.

பொதுவாகவே மாதங்களைத் 'திங்கள்' என்று அழைப்போம். ஒவ்வொரு மாதத்திலும் திங்களாகிய சந்திரன் எந்த நட்சத்திர மண்டலத்தில் முழு நிலவாகப் பிரகாசிக்கிறதோ, அந்த நட்சத்திரத்தின் பெயரே அந்த மாதத்தின் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது.

## இடுபணி 2

**இராமலிங்கர் தொடர்பான உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்து கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளங்கண்டு கூறுக.**




என்னை நுணுகுக



தனிமையையே தனது துணையாய்க் கொண்ட இராமலிங்கர் வகுப்புக்குச் செல்லாமல் கோயிலில் நாள்களைக் கழிக்கலானார். ஒரு நாள் ஆசான் சபாபதி கோயிலுக்குச் சென்ற இராமலிங்கரைப் பின் தொடர்ந்தார். ஆசானின் வருகையை அறியாத இராமலிங்கர், இறைவனைக் கண்ணீர் மல்க வேண்டி வணங்கினார்.

உருக்கமான பாடல்களைப் பாடி நின்றார். தமது மாணவன் இன்னிசையில் இறைவனின் பாடல்களைப் பாடுவதைக் கேட்டு ஆசான் வியப்படைந்தார். அப்பாடலின் வரிகளில் இருந்த எளிமையும் பொருள் சிறப்பும் ஆசானை வெகுவாகக் கவர்ந்தன. இராமலிங்க சுவாமிகள் தமக்கு நல்லுறவுகளை வேண்டியும் இறைவனின் புகழை என்றென்றும் பாடும் வாய்ப்பைத் தர வேண்டும் என்றும் வேண்டிப் பாடினார். இவ்வாறாக,

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்**
**பெருமை பெறும் நினது புகழ் பேச வேண்டும்**
**பொய்மை பேசாதிருக்க வேண்டும்**

என்று திருவருட்பாவை மனமுருகிப் பாடினார். இளம் வயதிலேயே அற்புதமான வரிகளையுடைய இப்பாடலை இராமலிங்க அடிகளார் பாடியதைக் கேட்ட ஆசான் பிரமித்துப் போனார்.

## வளப்படுத்துதல்

**திருவருட்பாவின் பொருளுக்கேற்ற வரிகளைத் தெரிவு செய்து எழுதி வாசித்திடுக.**

1. வாயொன்று சொல்லும் மனம் ஒன்று நினைக்கும். அப்படிப்பட்ட மனிதர்களின் நட்பை நாம் தவிர்க்க வேண்டும்.

2. ஒவ்வொருவரும் வெவ்வேறு தேவைகளுக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம். பக்தி என்பது அதுவன்று. ஒரே சிந்தனையுடன் இறைவனின் திருவடியைப் போற்றி நிற்பவரின் உறவையே நாட வேண்டும்.

3. இறைவனின் திருப்புகழை மட்டுமே பேச வேண்டும். பொய் பேசாமல் இருக்க வேண்டும்.

## குறைநீக்கல்

**வாக்கியங்களில் உள்ள கருப்பொருளையும் கருச்சொல்லையும் வாசித்துக் கூறுக.**

1. சைவ பக்தி இலக்கியமாகிய பெரிய புராணத்தைச் சேக்கிழார் பெருமான் இயற்றினார்.
2. இறைவன் மீது கொண்ட பக்தியை இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவாகப் பாடியுள்ளார்.
3. சிவத்தைப் பரம்பொருளாகக் கொண்டு வாழ்ந்து முக்தி பெற்ற நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர்.

# மௌன விரதம்

## தொகுத்து எழுதுக.

மனித வாழ்க்கையில் தேவைகள் பல உள்ளன. இத்தேவைகளை அடைய இறைவனை வழிபடுகின்றோம். ஞானிகள் யாகம், வேள்வி என்ற முறையில் இறைவனை வணங்குகின்றனர். மானிடர்களாகிய நாம் விரதம் இருந்து இறைவனை வழிபடுகிறோம்.

விரதம் என்றால் புலனடக்கம் என்று பொருள்படும். ஐம்புலன்களையும் அடக்கி ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தலேயாகும். விரதத்தின்போது ஒவ்வொருவரும் தங்களின் உடலையும் மனத்தையும் தூய்மையாகவும் அமைதியாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.



சிலர் தாம் எண்ணியவற்றைப் பெற தவம் செய்ய வேண்டும் என்பர். மௌன விரதம் கூட ஒரு வகை தவம்தான்.

மனத்தை அலைபாய விடாமல், தீய சொற்களைப் பயன்படுத்தாமல், மற்றவர்களின் மனத்தைக் காயப்படுத்தாமல் அமைதியாக இருப்பது மௌன விரதமே. மௌன விரதம் என்பது எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் அமைதியாக இருப்பதேயாகும்.

இன்பம், துன்பம் இரண்டையும் மௌன விரதத்தின் மூலம் ஏற்படுத்த இயலும். மன அமைதிக்குத் தேவை மகிழ்ச்சி. அது மௌன விரதத்தால் கிட்டும். பல செயல்களை மௌன விரதம் இருந்து சாதிப்பதே எளிது எனலாம். மௌன விரதம் என்பது உடலுக்கும் மனத்திற்கும் உகந்தது.

பல சிறப்புகளைத் தரும் மௌன விரதத்தை மாதம் ஒரு முறையாவது கடைப்பிடித்து வருவது மிகவும் சிறப்பாகும். உள்ளத்தில் தெளிவு, அமைதி எனப் பல மாற்றங்களை நாம் அனுபவித்து உணரலாம்.

(நன்றி: துங்கீசம் சில மாற்றங்களுடன்)

3.3.1 கருத்துகளைத் தொகுத்து எழுதுவர்.

### இடுபணி 1

**வாசிப்புப் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

### இடுபணி 2

**'அன்னையின் கருவில்' எனும் கவிதையின்வழி கவிஞர் அண்ணாமலை உணர்த்தவரும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

விதைக்குள் தூங்கும் ஆலமரம்
கண்ணுக்குத் தெரியாது
அது மரமாய் மாறும் காலம்வரும்
மண்ணுக்குள் உறங்காது

நீ தேடும் சிகரம் தூரமில்லை
நடப்பதை நிறுத்தாதே
சிறு துளி தான் இங்கே கடலாகும்
நம்பிக்கை தொலைக்காதே

மீண்டும் மீண்டும் பாதம் பட்டால்
பாறை கூட பாதை ஆகும்
முன்னால் வைத்த காலை நீயும்
பின்னால் எடுக்காதே

பூக்கள் பூக்க வேர்கள் தேவை
வெற்றிக்கிங்கே வேண்டும் வேர்வை
உன் கைரேகை தேய்ந்தாலும்
உழைப்பதை நிறுத்தாதே

அன்னையின் கருவில் கலையாமல் பிறந்தாயே
அப்போதே மனிதா நீ ஜெயித்தாயே (2)

- கவிஞர் அண்ணாமலை




என்னை நுணுகுக

### இடுபணி 3

**வாழ்வின் ஏழு அதிசயங்களை வாசித்து அறிக.**

1. மரணம் என்பது நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் வந்தே தீரும் என்பதை அறிந்த மனிதர்கள், கவலைப்படாமல் தன் கடமைகளைச் செய்யாமல் சிரித்துக் கொண்டிருப்பது வியப்பு.
2. ஒரு நாளில் இவ்வுலகம் அழிந்து போகும் என்பதை அறிந்த மனிதன், உலகத்தின் மீது மோகம் கொண்டிருப்பது வியப்பு.
3. எந்த ஒரு செயலும் இறைவன் விதித்தபடியே நடக்கும் என்பதை அறிந்த மனிதன், கைநழுவிச் சென்றவற்றை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது வியப்பு.
4. மறுமை வாழ்க்கைக்கான தீர்வு இவ்வுலகிலேயே இருப்பதை நம்புகின்ற மனிதன், அதனைப் பற்றி அக்கறையின்றி வாழ்ந்து கொண்டிருப்பது வியப்பு.
5. நித்திய அழிவைப் பற்றி அறிந்த மனிதன், அது பற்றிச் சிந்திக்காமல், தொடர்ந்து பாவம் புரிவதும் தவறு செய்வதும் வியப்பு.
6. இறைவன் ஒருவரே என்று அறிந்த ஒருவன், அவரைத் தவிர வேறு எவருக்கோ வணக்கத்தை நிறைவேற்றுவது வியப்பு.
7. நியாயத் தீர்ப்பு, தண்டனை, மறுமை பற்றி அறிந்த மனிதன், உலகச் செல்வங்களைச் சேர்த்து வைப்பதில் தமது முழு வாழ்வையும் கழிப்பது வியப்பு.

## வளப்படுத்துதல்

**வெற்றிக்கான வழிகள் தொடர்பான கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

எந்த வேலையைச் செய்தாலும் அதனை விரும்பிச் செய்ய வேண்டும்.

எதையும் வித்தியாசமாகச் சிந்திக்க வேண்டும்.

பெரிதாகச் சிந்தியுங்கள். சிறிய அளவில் தொடங்குங்கள்.

ஒவ்வொரு வேலையையும் சிறப்பாகச் செய்யுங்கள்.

ஒரு செயலிலுள்ள பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து ஈடுபடுங்கள்.

நல்ல எண்ணங்களை உருவாக்கி அவற்றை விரைந்து செயல்படுத்துங்கள்.

பிறருடைய கருத்துகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஆனால், முடிவை நீங்கள் எடுங்கள்.

தோல்வியிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்.

## குறைநீக்கல்


**கவிதை வரிகளில் கூறப்படும் கருத்துகளை எழுதுக.**

சினத்தை அடக்கப் பழகிக் கொள்
சிரிப்பதை என்றும் மறவாதே!
பணத்தைப் பெரிதாய் எண்ணாமல்
பண்பினை எண்ணக் கற்றுக்கொள்!

படித்ததை நினைக்கப் பழகிக்கொள்
பணிவோடு பேசக் கற்றுக் கொள்!
துடித்தெதையுஞ் செய ஒண்ணாதே!
துன்ப மிழைக்க எண்ணாதே!

மற்றவர் தொழிலைப் பழிக்காதே!
மண்மேல் எவரும் ஓரினமே!
கற்றவர் பேச்சைக் கேட்க விழை!
கல்லார் பேச்சைத் தள்ள முனை!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்



என்னை நுணுகுக

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளை அறிக.

நாம் செய்கின்ற செயல்கள் நல்லனவாக இருந்தால் நமக்குப் புகழும் பாராட்டும் கிடைக்கும். அதேவேளையில் நம்முடைய செயல்கள் தீயனவாகவும் தவறானவையாகவும் இருந்தால் நமக்குப் பழிச்சொல்லும் அவமானமும் ஏற்படும். நாம் செய்கின்ற செயலைப் பொறுத்தே நமது பெருமையும் சிறுமையும் அமையும் என்பதை,

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்**
**கருமமே கட்டளைக் கல். (505)**

என்று திருவள்ளுவர் மொழிந்துள்ளார்.



### திருக்குறளும் பொருளும்

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்**
**கருமமே கட்டளைக் கல். (குறள் 505)**

மக்களுடைய குணங்களாலாகிய பெருமைக்கும் குற்றங்களாலாகிய சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.

**கருத்து :**
அவரவருடைய செயல்களே பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல்லாக அமையும்.

### இடுபணி 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**




### இடுபணி 2

**திருக்குறளின் விடுபட்ட பகுதியை எழுதுக.**

1. பெருமைக்கும் ________________
________________ கல்.

### இடுபணி 3

**திருக்குறளை உணர்த்தும் கருத்துக்குச் சரி ( ✓ ) என்று அடையாளமிடுக.**

1. நம்முடைய செயல்களே நமது புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் காரணமாக அமைகின்றன. ( )
2. பணம் இருந்தால் மட்டுமே பெருமையாக வாழ முடியும். ( )
3. பிறர் நம்மைப் போற்றுவதும் தூற்றுவதும் நமது செயலைப் பொறுத்தே அமைகிறது. ( )

### வளப்படுத்துதல்

**திருக்குறளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி நடித்துக் காட்டுக.**

**4.1.1** புகுமுக வகுப்பிற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# தொகுதி 18 பண்பாட்டைப் போற்றுவோம்

## பாடம் 1 நமது பாரம்பரியம்

கலந்துரையாடுக.

1. உணவு



சம்மணம் இட்டு உண்ணுதல்



வாழையிலையில் உண்ணுதல்



அறுசுவை

2. உடை



பெண்கள் சேலை, பாவாடை, தாவணி அணிதல்



ஆண்கள் வேட்டி, ஜிப்பா அணிதல்

## 3. பண்டிகை



தீபாவளி
எண்ணெய் தேய்த்துக் குளித்தல்



தைப்பொங்கல்
தோரணம், கரும்பு, பொங்கல் வைத்தல்



நவராத்திரி
விளக்கேற்றுதல், கொலு வைத்தல்

## 4. வைபவம்



திருமணம் - மெட்டி அணிதல், தாலி கட்டுதல், அன்பளிப்பு (மொய்) கொடுத்தல்



அரைஞாண் கயிறு அணிதல்



காதணி விழா - தாய் மாமன், சீர்வரிசை செய்தல்

1.6.1 கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 1

நமது பாரம்பரியங்கள், பண்டிகைகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் குழு முறையில் உரையாடுக.

## இடுபணி 2

‘இன்றைய மாணவர்கள் பண்பாட்டுக் கூறுகளைக் கடைப்பிடிக்கின்றனர்’ எனும் கருத்தை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கூறுக.


பாரம்பரிய உடை அணிந்து கோவிலுக்குச் செல்லுதல்


விருந்தோம்பல் செய்தல்



கோலமிடுதல்


பெரியோரை வணங்குதல்

பாடம் 2

# கொடையும் பண்பாடும்

## வாசித்து அறிக.



தொல்தமிழர்கள் தம் வாழ்வில் ஒருவேளை உணவுக்கும் கூடப் பல்வேறு போராட்டங்களை **எதிர்கொண்டவர்கள்**. அப்படி இருந்தபோதிலும் அவர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் தம்மை **நாடிவந்தோருக்கு** மிகுதியாக உணவளித்துள்ளனர்.

உணவைத் தேடுவதில் தமிழரின் வீரம் **மிளிர்கின்றது**. அவ்வுணவினைப் பலரோடு **பகிர்ந்துண்பதில்** அவர்களின் கொடைப் பண்பு சிறப்படைகின்றது. கொடைகளுள் சிறந்தது **உணவுக்கொடை** எனும் பண்பாட்டினைக் கடைப்பிடித்தனர்.

அக்காலத்தில் இனக்குழுக்களாக வாழ்ந்த தமிழர்கள் வேட்டையில் பெற்ற உணவுகளைக் கொண்டு வந்து தங்களின் குழுவினரிடையே பகிர்ந்து கொண்டனர். **எஞ்சியவற்றைக்** கெட்டுப் போகாமல் பாதுகாக்கத் தெரியாததால் தங்களின் குழுவினர் **அல்லாதோருக்குக்** கொடையாக வழங்கினர்.

உணவைக் கொடையாக வழங்கும் செயல் பெரிய அளவில் நடைபெறும் போதும் உணவினைப் பெற்றவர்கள் அங்கேயே இருந்து உண்டபோதும் அவ்வுணவுக் கொடையானது, விருந்தாகப் **பரிணமித்தது**. இஃது இனக் குழுக்களுக்கு இடையே ஒரு நட்புப் பாலமாக அமைந்தது. இந்நட்பானது அவர்களுக்குள் ஒற்றுமையைக் கொண்டு வந்தது. இதனால், வேட்டைக்காகவும் உணவுப் பொருள் தேடியும் **தொலைதூரம்** செல்லும் ஓர் இனக்குழுவினருக்குப் பிற இனக் குழுவினர் உணவும் **உறைவிடமும்** நல்கியுள்ளனர்.

இடுபணி 1

**மௌனமாக வாசித்து வண்ணத்திலான சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் கூறுக.**

2.4.3 பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

### இடுபணி 2

**உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

1. தொல்தமிழர்கள் தங்களை நாடி வந்தோருக்கு என்ன செய்தனர்?

2. தமிழரின் கொடைப்பண்பு எதன் மூலம் சிறப்படைகின்றது?

3. பாதுகாக்கத் தெரியாத உணவை என்ன செய்தனர்?

4. விருந்து என்பது எவ்வாறு உருவானது?

5. உணவுக் கொடையால் இனக்குழுக்கள் பெற்ற நன்மைகள் யாவை?

### இடுபணி 3

**உணவொழுக்கம் தொடர்பான உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குப் பதிலளித்திடுக.**

உணவே மருந்து என்று மூத்தோர் கூறுவதுண்டு. சுவாமி சிவானந்தர் உணவு முறை தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார். "சரிவிகித உணவையே உண்ணுங்கள். அளவோடு உண்ணுங்கள். வயிற்றின் அரைப்பாகம் உணவு, கால் பாகம் நீரால் நிரப்பப்பட வேண்டும். மீதி கால் பாகத்தைக் காற்றுக்காக விட வேண்டும். பசியுள்ள ஒருவன் நீரைக் குடிக்கக் கூடாது. அதுபோல தாகமுள்ள ஒருவர் சாப்பிடக் கூடாது. உணவின் போது ஏராளமாகத் தண்ணீர் குடிப்பதும் தீங்கை விளைவிக்கும். வாரம் ஒருமுறை இரவுச் சாப்பாட்டைத் தவிர்க்க வேண்டும். இரவில் எட்டு மணிக்குப் பிறகு சாப்பிடக்கூடாது. பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். இது சீரண மண்டலத்திற்கு ஓய்வளிக்கும். உட்கிரகிக்கும் சக்தியும் அதிகரிக்கும். மேலும், உயிர் வாழ்வதற்கான மருந்தாகவே உணவைக் கருதி உண்ண வேண்டும். சுவைக்காக உண்பதைவிட உயிர் வாழ்வதற்காக உண்ண வேண்டும். சரிவிகித உணவு சாப்பிடுவது நலம் பயக்கும். விரும்பிய எல்லாவற்றையும் சாப்பிடுதலும் விரும்பிய நேரங்களிலெல்லாம் சாப்பிடுவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். சாதகனுக்கு உணவொழுக்கம் மிகவும் அவசியம்" என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

1. உணவொழுக்கம் என்றால் என்ன?

2. உணவொழுக்கத்தை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று சுவாமி சிவானந்தர் கூறியுள்ளார்?

3. உணவொழுக்கத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என நீ கருதுகின்றாய்?

4. உணவொழுக்கத்தை நீ எவ்வாறு கடைப்பிடிக்கிறாய் என்பதை நண்பரிடம் விளக்குக.

# தமிழர் பாரம்பரியம்

## விவரித்து எழுதுக.



| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | திருமண வைபவங்களில் பண்பாட்டுக் கூறுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. |
| துணைக் கருத்து | பண்பாட்டு முறையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுகின்றன. |
| விளக்கம் | பாரம்பரியச் சடங்குகள் அனைத்தும் திருமண வைபவத்தில் செய்யப்படுகின்றன. |
| சான்று | தாலி கட்டுதல், மாலை, மெட்டி அணிவித்தல், மேள தாளம் |

தமிழர்களின் திருமண வைபவங்களில் அவர்களின் பாரம்பரியமும் பண்பாட்டுக் கூறுகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இத்திருமண விழாவில் அனைத்துச் சடங்குகளும் தமிழர் பண்பாட்டு முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. குடும்ப உறவுகளும் உற்றார் உறவினரும் ஒன்றிணைந்து தமிழரின் பாரம்பரிய சடங்குகள் அனைத்தையும் இத்திருமண விழாவில் பின்பற்றுகின்றனர். குறிப்பாக, முகூர்த்த கால் ஊன்றுதல், மணமக்களுக்கு நலுங்கு வைத்தல், தாலி கட்டுதல், மாலை அணிவித்தல், மெட்டி அணிவித்தல், மேள தாளங்கள் போன்றவை அவற்றில் அடங்கும்.

3.2.2 முதன்மைக் கருத்துக்கேற்ற துணைக்கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை விவரித்துப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 1

**'இன்றைய தமிழ் மாணவர்கள் நமது பண்பாடுகளையும் கலைகளையும் பின்பற்றுகின்றனர்' எனும் முதன்மைக் கருத்துக்கேற்ற துணைக் கருத்து, விளக்கம் சான்று ஆகியவற்றை விவரித்துப் பத்தியில் எழுதுக.**

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | இன்றைய தமிழ் மாணவர்கள் நமது பண்பாடுகளையும் கலைகளையும் பின்பற்றுகின்றனர். |
| துணைக் கருத்து | நமது சமயம் தொடர்பான அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், சமயச் சிந்தனையை வளர்த்துக் கொள்ளவும் முயல்கின்றனர். |
| விளக்கம் | ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றனர். சமய வகுப்புக்குச் செல்கின்றனர். சமய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் ஓதுகின்றனர். |
| சான்று | தேவாரம், திருவாசகம், திருமந்திரம். |

**எ.கா:**

இன்றைய மாணவர்கள் சமயச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்கின்றனர். நமது சமயம் தொடர்பான அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றும் சமயச் சிந்தனை வளர வேண்டுமென்றும் முயல்கின்றனர். அதன் பொருட்டு ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். சமய வகுப்புகளுக்குச் செல்கின்றனர். சமய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் ஓதுகின்றனர். இவற்றுக்குத் துணையாகத் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற சமய நூல்களைப் பயன்படுத்துகின்றனர்.



## இடுபணி 2

**'பண்பாட்டுக் கூறுகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்காததால்தான் சமூகச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன' என்னும் முதன்மைக் கருத்துக்கு ஏற்ற துணைக் கருத்து, விளக்கம், சான்று ஆகியவற்றை விவரித்துப் பத்தியில் எழுதுக.**

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | |
| துணைக் கருத்து | |
| விளக்கம் | |
| சான்று | |

## பாடம் 4 இலக்கணம்

### விகாரப் புணர்ச்சி அறிக.


திரிதல் விகாரம்

- மகர ஒற்று (ம்) க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும்.


**எ.கா:-**

மரம் + கண்டான் = மர**ங்**கண்டான்
மரம் + சாய்ந்தது = மர**ஞ்**சாய்ந்தது
வரம் + தா = வர**ந்**தா

**சூழல்:**
மருத்துவர் ஒருவரைச் சந்தித்து விநோதன் தன் சிக்கலைப் பகிர்ந்து கொள்கிறான்.




5.3.3 திரிதல் விகாரப் புணர்ச்சியில் மகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.






## இடுபணி 1

**நகைச்சுவை உரையாடலில் வண்ணத்திலான சொற்களை எடுத்தெழுதுக; பின்னர் பிரித்தெழுதுக.**

## இடுபணி 2

**வண்ணமிடப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.**

**வருடந்தோறும்** பள்ளி விடுமுறையில் நாங்கள் சுற்றுலா செல்வோம். குடும்ப உறுப்பினர்களின் நல்ல **மனங்கருதி** ஒன்றாகச் செல்வோம். பல இடங்களைச் சுற்றிப் பார்த்து மகிழ்வோம். **மனஞ்சோர்ந்து** உள்ளவர்களுக்குச் சுற்றுலா செல்வது **பெருஞ்செல்வமாகும்**.

## வளப்படுத்துதல்

**மகர ஒற்று (ம்) க், ச், த் ஆகிய வல்லினத்துடன் புணரும் சொற்களுள் ஒவ்வொன்றிலும் நான்கனை உருவாக்கி அவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

(ம்) க்
- அறம் + காத்தார் = அறங்காத்தார்
- \+ = 
- \+ = 
- \+ = 

(ம்) ச்
- \+ = 
- \+ = 
- \+ = 
- \+ = 

(ம்) த்
- \+ = 
- \+ = 
- \+ = 
- \+ = 

## குறைநீக்கல்

**மகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்ந்துள்ள சொற்களைச் சொற்குவியலில் அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | வ | ர | ந் | த | ந் | த | ன | ர் | உ | வ | ம் |
| ள | து | ந் | வ | சி | ஞ் | க | மு | ஐ | ன் | ல | று |
| ஞ் | கு | ரு | கு | ட | ஞ் | சா | ய் | ந் | த | து | தோ |
| சி | பெ | ரு | ங் | கா | ய | ம் | கு | தி | சு | மு | ந் |
| வ | ப | கு | று | ஞ் | செ | ய் | தி | ணை | ல் | க | ல |
| ப் | ம் | ணை | ரு | க | ங் | ரு | பெ | ய் | ப | ம் | கா |
| பு | ற | ங் | கூ | றி | னா | ன் | ப | செ | ம் | ட | இ |
| ம | தி | க | டு | ந் | த | வ | ம் | ஞ் | தோ | ட் | ள |
| அ | ரு | ஞ் | சொ | ல் | ன | வ | த | ற | ந் | தி | ஞ் |
| அ | ச் | ச | ந் | த | வி | ர் | ஞ் | அ | ரு | ந் | சி |
| கு | று | ந் | த | க | வ | ல் | சு | செ | வி | ரு | ட் |
| அ | ற | ம் | ப | ர | ஞ் | சோ | தி | கி | ய் | பெ | டு |

# தொகுதி 19 கடமையும் பொறுப்பும்

## பாடம் 1 உணர்வோம் மதிப்போம்

**கலந்துரையாடி கூறுக.**




ஓய்வு நேரத்தில் பெற்றோருக்கு உதவுதல்.

ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுதல்.

குடும்பத்துடன் சேர்ந்து சுற்றுலா செல்லுதல்.

பிள்ளைகளின் பள்ளிப் பாடங்களைக் கவனித்தல்.

1.2.3 சூழலையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.

## இடுபணி 1

**குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் கடமைகளையும் பொறுப்புகளையும் பண்புடன் கூறுக.**

## இடுபணி 2

**உனது பெற்றோருக்குச் செய்யும் உதவிகளையும் அவற்றால் நீ அடையும் நன்மைகளையும் கூறுக.**

## இடுபணி 3

**படத்தின் துணையுடன் இம்மாணவனின் பொறுப்புணர்வைப் பற்றிப் பண்புடன் கூறுக.**



பாடம் 2

# இனிமைச் செம்மொழி


## வாசித்து அறிக.

உலகில் ஏறத்தாழ மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன. இவற்றுள் அந்தந்த மொழிகளுக்கென **எழுத்துருவம்** கொண்டவை சில நூறு மொழிகளே.

இம்மொழிகளுக்குள் செம்மொழி எனும் **சிறப்பிற்குரியனவாக** ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஒரு சில மொழிகளாகும். தமிழ், கிரேக்கம், இலத்தீன், சீனம், ஹீப்ரு, சமஸ்கிருதம், என்பன அவை.

தமிழ்மொழி செம்மொழி என்ற சிறப்பினை 12.10.2004 இல் பெற்றது. இந்த **அங்கீகாரத்தைப்** பெற பல்வேறு **அறிஞர்களும்** தத்தம் பங்கினை வழங்கியுள்ளனர். ஒரு மொழி செம்மொழி என்ற தகுதியைப் பெறுவதற்கு அடிப்படையாகச் சில சிறப்பு **இயல்புகளைக்** கொண்டிருத்தல் வேண்டும்.

செம்மொழித் **தகுதியனைத்தும்** பெற்ற தமிழ்மொழிக்கு **எழுத்துவடிவில்** 3800 ஆண்டுக்கால வரலாறும் பேச்சுருவில் 5000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறும் உண்டு. பதினொரு தகுதிப்பாடுகளும் முழுமையாகப் பெற்றுள்ள தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றதற்காக ஒவ்வொரு தமிழரும் பெருமை கொள்ள வேண்டும்.






### 11 தகுதிப்பாடுகள்

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப் பண்பு
4. நடுவு நிலைமை
5. தாய்மைத் தன்மை
6. பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
7. பிறமொழிக் கலப்பில்லாத் தனித்தன்மை
8. இலக்கிய வளம்
9. உயர்சிந்தனை
10. கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக் கோட்பாடு

## இடுபணி 1

**வண்ணத்திலான சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் கூறுக.**

2.4.1 மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. உலகில் உள்ள மொழிகள் எத்தனை?
2. செம்மொழி சிறப்பிற்குரிய மொழிகள் யாவை?
3. செம்மொழியின் தகுதிப்பாடுகள் யாவை?
4. தமிழ்மொழி பெற்ற சிறப்பு வரலாறு என்ன?
5. தமிழ்மொழியின் எதிர்கால நிலை பற்றி உமது கருத்து என்ன?

## இடுபணி 3


**தமிழ்மொழியைக் கற்றதால் நீ அடைந்த நன்மைகள் பற்றிக் குழுவில் உரையாடுக.**

## வளப்படுத்துதல்

**தாய்மொழியை எவ்வாறு நாம் மேலோங்கச் செய்யலாம் என்பது பற்றிய நடவடிக்கைகளை வரிபடத்தின் மூலம் எழுதிக் காட்டுக.**

## குறைநீக்கல்

**தமிழ்மொழியைப் பற்றி நீ அறிந்தவற்றைச் சிறு குறிப்புகளாக எழுதிக் காட்டுக.**



# பாடம் 3 உயர்ந்த நோக்கம்

**கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தமிழரின் பங்கு

- தமிழ்ப்பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புதல்.
- தமிழ்ப் பத்திரிகை, நூல்கள், சஞ்சிகைகளை வாங்கிப் படித்தல்.
- தமிழ்க் கருத்தரங்கு, தமிழ் ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொள்ளுதல்.
- தமிழில் பேசிக் கருத்துப் பரிமாற்றம் செய்தல்.
- தமிழ்ப் படைப்புகளை மிகுதியாக வெளியாக்குதல்.










## இடுபணி 1

**'தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தமிழரின் பங்கு' எனும் தலைப்பில் 130 சொற்களில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

3.4.3 130 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 2

‘தமிழரின் கலைகளை இன்றைய தலைமுறையினர் பாதுகாத்துப் போற்றுகின்றனர்’ எனும் தலைப்பையொட்டிச் சட்டகம் தயாரிக்கவும்.



## இடுபணி 3

மேற்கண்ட தலைப்பையொட்டி முன்னுரை, முடிவுரை எழுதுக.

## வளப்படுத்துதல்

‘தமிழ்மொழியின் மேன்மைக்குத் தமிழாசிரியர்கள் பங்களிக்கின்றனர்’ எனும் தலைப்பையொட்டி 130 சொற்களில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.




# செய்யுளும் மொழியணியும்

வாசித்து அறிக.

சூழல் 1






**4.6.1** புகுமுக வகுப்பிற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## பழமொழியும் பொருளும்

**ஒற்றுமையே பலம்.**

ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாது புரிந்துணர்வோடு ஒன்றுபட்டு வாழ்வதே நலம் பயக்கும்.

**சுத்தம் சுகம் தரும்.**

நாம் தூய்மையைக் கடைப்பிடித்தால் நோயின்றி நலமாக வாழலாம்.

**பருவத்தே பயிர் செய்.**

செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும்.

**இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.**

தன்னிடமுள்ள ஒன்றின் சிறப்பினை உணராமல் பிறிதொன்றின் வெளித்தோற்றத்தில் மயங்கி அதனை உயர்வாகக் கருதுவதால் பயன் கிடையாது.

**கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

கல்வியில் திறமையும் புலமையும் உள்ள ஒருவர் எங்குச் சென்றிடினும் சிறப்பிக்கப்படுவார்.

### இடுபணி 1

**பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**கருத்துக்கு ஏற்ற பழமொழியை எழுதுக.**

1. படித்தவர்கள் எங்குச் சென்றாலும் போற்றப்படுவர்.
2. புரிந்துணர்வுடன் வாழ்வது நன்மை பயக்கும்.
3. தூய்மையே ஆரோக்கியத்திற்குக் காரணமாக அமைகின்றது.
4. உரிய காலத்திலேயே காரியங்களைச் செய்ய வேண்டும்.
5. ஒன்றின் சிறப்பை அறியாமல் பிறிதொன்றின் தோற்றத்தில் மயங்கி விடக்கூடாது.

### வளப்படுத்துதல்

ஏதேனும் ஒரு பழமொழியைத் தெரிவு செய்து சூழல் ஒன்றனை எழுதுக.


### குறைநீக்கல்

சூழல் படத்திற்கு ஏற்ற பழமொழியை எழுதுக.











## தொகுதி 20 மகிழ்வும் நற்பண்பும்

### பாடம் 1 மனம் மகிழ்வோம்

கலந்துரையாடுக.



சமூக சேவை
- மனித நேயம்
-உதவும் மனம்



இசைக்கருவிகள் இசைத்தல்
- மன மகிழ்ச்சி
- சுய ஆற்றல்

மகிழிகளின் அவசியம்



சமையல் கற்றல்
- தனித் திறமை
- சிறுவியாபாரம் செய்ய



பாரம்பரிய விளையாட்டு
- பாரம்பரியத்தைத் தொடர்தல்
- உடல் ஆரோக்கியம்



படைப்பிலக்கியம்
- மொழியாற்றலை வளர்த்தல்
- மொழி வளர்ச்சிக்குப் பங்களித்தல்

1.5.1 தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

## இடுபணி 1

**'மகிழிகளின் அவசியம்' எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்திடுக.**

## இடுபணி 2

**ஓய்வு நேரத்தில் நீ மேற்கொள்ளும் மகிழிகளையும் அவற்றின் நன்மைகளையும் கூறி உரையாடுக.**

## இடுபணி 3

**கவிதையை வாசித்துக் குழுவில் உரையாடுக.**





செய்யும் தொழிலே தெய்வம்-அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி
(செய்யும்...)

பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குலமானம் உண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம்
(செய்யும்...)

காயும் ஒரு நாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நினைவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்
(செய்யும்...)

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

**என்னை நுணுகுக**





# பாடம் 2 மூத்தோரின் ஆசி

## வாசித்து அறிக.

தமிழர்களின் பண்பாட்டில் ஆசீர்வாதம் பெறுவது என்பது முக்கியமானதொன்றாகும். இவ்வழக்கமானது திருமணம், பிறந்தநாள், பண்டிகைகள் போன்ற சிறப்பு நாள்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. பெரியோர்களிடமிருந்து வயது குறைந்தவர்கள் ஆசீர்வாதம் பெறுவது இன்றும் நடைமுறையில் உள்ளதை நாம் காண முடிகின்றது.

பெற்றோரையும் வயதில் மூத்தோரையும் மதித்து மரியாதை செலுத்தும் பண்பு நம் பண்பாட்டில் ஊன்றிப் போன பண்பாகும். இச்சிறந்த பண்பே பெரியோரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற உந்துசக்தியாக அமைகின்றது. வயதில் மூத்தோரின் போதனைகளை மனதார ஏற்றுக் கொள்வதன் அடையாளமாகவே அவர்களின் காலைத்தொட்டு வணங்கி ஆசிபெறுவதன் நோக்கமாகின்றது.

விஞ்ஞான அடிப்படையிலும்கூட பலவித நன்மைகளைக் கொண்டு வருகின்றது. உடல் உறுப்புகளில் அதிக சக்திகளின் ஓட்டமாக விளங்கும் பகுதி கால்பாதங்கள்தான். அத்தகைய சக்தியை நாம் உணர்ந்து நேர்மறை ஆற்றல்கள் நம்மை ஆட்கொள்ளவே ஆசீர்வாதம் பெறுவது பழக்கத்தில் வந்தது.

யோகாசன முறைப்படி பார்ப்போமேயானால், கீழே மண்டியிட்டுக் குனிந்து ஆசீர்வாதம் பெறுவது சிறந்த யோகப்பயிற்சிகளில் ஒன்றாகும்.

பெற்றோரை மதித்துக் கடவுளாகப் போற்றும் பண்பாடும் நம்முள் இன்னும் இருக்கவே செய்கின்றது. நம்மை இப்பூவுலகிற்குக் கொண்டு வந்தவர்கள் நம் பெற்றோர் என்ற கருத்தின் அடிப்படையில்தான் பெற்றோரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுகின்றனர்.



நமது பண்பாட்டில் மரியாதைப் பண்பினை வலியுறுத்த வேண்டும். ஒருவரை ஒருவர் மதித்து மரியாதை செலுத்தினால் பலவிதமான சிக்கல்களைத் தவிர்த்து நற்சிந்தனையை உருவாக்க இயலும்.

இத்தகைய நற்பண்புகளைச் சிறுவயது முதலே தங்கள் பிள்ளைகளின் மனத்தில் பதிய வைக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனும் பழமொழியை நினைவு கூர்ந்து செயல்படுவதே சிறப்பாகும்.

2.4.3 பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. ஆசீர்வாதம் யாரிடமிருந்து பெறப்படுகின்றது?
2. ஆசி என்பது பற்றி விளக்கிக் கூறுக.
3. அறிவியல் ரீதியாக ஆசீர்வாதம் பெறுவதன் பயன்கள் யாவை?
4. இன்றைய நிலையில் மூத்தவர்களிடம் ஆசி பெறும் வழக்கம் குறைந்து வருகிறது. ஏன்?

## இடுபணி 2

### பனை மரம்







பனை மரம் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்று. தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளில் தங்களின் அடையாளத்தை உணர்த்துவதற்காகப் பனை மரத்தை நட்டு வைத்த வரலாறும் உண்டு.

பல நாட்டுச் சுற்றுலா மேம்பாட்டில் பனைப்பொருள்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பனையின் பயன் அறிந்தவர்கள் அதன் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை இன்று வரை பயன்படுத்திக் கொண்டுதான் உள்ளனர்.

ஒரு மரத்தின் அனைத்துப் பகுதியும் பயன்படும் மரங்களில் வாழை, பனை இரண்டும் முக்கியமானவை எனலாம். தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களோடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே பனை மரம் தொடர்புடையது என்றே கூற வேண்டும். பனை மரமானது, வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடிய மூலப்பொருள்களை உற்பத்தி செய்வதாகவும் திகழ்ந்தது. பனை மரங்களின் மூலம் சிறு தொழில்களும் கைத்தொழில்களும் செய்யப்பட்டு வந்தன.


பனை ஓலையைக் கொண்டு அலங்காரப் பொருள்கள், முறம், கூடைகள், கைப்பை, பாய், தொப்பி, தரை விரிப்புகள் கிலுகிலுப்பை போன்றவை செய்யப்பட்டன. இப்பொருள்கள் யாவும் மண் வளத்துக்கும் இயற்கை வளத்திற்கும் பாதிப்பைத் தருவதில்லை. இதற்குக் காரணம் எளிதில் மக்கிப் போகும் தன்மை கொண்டதால்தான். வருவாய்க்கு மட்டும் இல்லாமல், பல்வேறு கலை உணர்வுகளை வெளிப்படுத்தவும் பொழுது போக்காகவும் பனை ஓலைத் தொழில் செய்யப்பட்டது. பனை மரங்களிலிருந்து பனை வெல்லம், பனங்கருப்பட்டி, நுங்கு, பதநீர் என உடல் ஆரோக்கியத்தைப்

பேணிக்காக்கும் உணவுப் பொருள்களையும் பெறலாம். அதிக பயன்களை நெடுங்கால அளவில் தருவதால் இம்மரத்தை 'தேவலோக மரம்', 'கற்பக விருட்சம்' எனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

பல நூற்றாண்டு காலங்களுக்கு முன், நிலங்களின் எல்லையை நிர்ணயித்து நடப்படும் எல்லைக் கற்களாகவும் பனை மரங்கள் பயன்படுத்தப்பட்டன. மனிதர்களின் சராசரி ஆயுளை விட பனை மரத்தின் ஆயுள் கூடுதலாகும்.

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. பனை மரம் உணர்த்தும் தமிழர்களின் பண்பாடு யாவை?
2. பனை மரத்தின் சிறப்புப் பெயர் என்ன?
3. மூலப் பொருள்களை உற்பத்தி செய்பவையாகப் பனைமரங்கள் கருதப்படுகின்றன எனும் கருத்தை விளக்குக.
4. பனை மரத்தின் நன்மைகள் எனும் தலைப்பில் பொருத்தமான வரிபடத்தில் கருத்துகளை எழுதிக் கூறுக.
5. பனை மரம், வாழை மரம் இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இரட்டிப்புக் குமிழி வரைபடத்தில் எழுதி உரையாடுக.



**இடுபணி 3**

**வாழை மரத்தின் பயன்கள் பற்றி ஆராய்ந்திடுக.**



# பாடம் 3 நமது அடையாளம்

## வாதக் கட்டுரை எழுதுக.

நற்பண்பே நமது அடையாளம்



நல்ல நண்பர்களிடம் பழகுவது



சீரான உடை உடுத்துவது




பள்ளிச் சட்ட திட்டங்களை மதிப்பது



பெரியோருக்கு மரியாதை தருவது



கல்வியில் கவனம் செலுத்துவது

**இடுபணி 1**

**நற்பண்பே நமது அடையாளம் எனும் தலைப்பில் 130 சொற்களில் வாதக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

3.4.5 130 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 2

**‘மாணவரின் மொழி வளர்ச்சிக்குப் பெற்றோரே காரணம்’ எனும் தலைப்பில் ஏதாவது ஒரு கருத்தைத் தேர்ந்தெடுத்து விவரித்து ஒரு பத்தியில் எழுதுக.**

பெற்றோரே காரணம்

- தம் பிள்ளைகளை மொழி சம்பந்தப்பட்ட போட்டிகளில் ஈடுபட ஊக்குவிப்பதால்
- பெற்றோர் பிள்ளைகளுடன் நல்ல மொழிநடையில் பேசுவதால்
- தம் பிள்ளைகளை மொழி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்வதால்
- பிள்ளைகளிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதால்

## இடுபணி 3

**‘மாணவரின் மொழி வளர்ச்சிக்குப் பெற்றோர் காரணமல்ல’ எனும் தலைப்பில் 130 சொற்களில் ஒரு வாதக் கட்டுரை எழுதுக.**

பெற்றோர் காரணமல்ல

- பள்ளி - பொது நூலகங்களின் பங்கு
- மாணவர்களின் மொழி - ஆர்வம்/பற்று
- தகவல் தொடர்பு ஊடகங்களின் பங்கு
- பள்ளியில் நடைபெறும் மொழி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள்
- ஆசிரியரின் ஊக்குவிப்பு

## பாடம் 4 இலக்கணம்

### வாசித்து அறிக.

**வலிமிகா இடங்கள்**

'-ன்று, -ந்து, -ண்டு, -ய்து' என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது

எ.கா:

| | | | |
|---|---|---|---|
| சென்று | + | பார்த்தாள் | = சென்று பார்த்தாள் |
| அறிந்து | + | கொண்டார் | = அறிந்து கொண்டார் |
| செய்து | + | காட்டினார் | = செய்து காட்டினார் |
| கொண்டு | + | சென்றான் | = கொண்டு சென்றான் |



மலரன்பன் : அப்பா! இன்று என்னைப் பள்ளிக்கு அனுப்ப இயலுமா?

அப்பா : மலரன்பா! உனது ஆர்வத்தைப் **புரிந்து கொண்டேன்**. ஆனால், நேற்று இரவு கனத்த மழை பெய்ததால் வெளியில் வெள்ளமாக இருக்கிறது.

மலரன்பன் : அப்படியென்றால் பள்ளிக்கு இன்று செல்ல இயலாதா அப்பா? வீட்டுப்பாடங்களை இன்று **செய்து கொடுக்க** வேண்டும் என்று பணித்துள்ளார் வகுப்பாசிரியர். ஆகவே, நான் வீட்டுப் பாடங்களைப் பள்ளிக்குச் **சென்று கொடுக்க** வேண்டும்.

அப்பா : பரவாயில்லை மலரன்பா. வீட்டுப் பாடங்களை நாளை வெள்ளம் வடிந்தபின் **கொண்டு சென்று** ஆசிரியரிடம் ஒப்படைத்துவிடு.

மலரன்பன் : சரி அப்பா, நீங்கள் சொல்வது போல் **நடந்து கொள்கிறேன்**.

### இடுபணி 1

**உரையாடல் பகுதியில் '-ன்று, -ந்து, -ண்டு, -ய்து' என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது என்பதைக் குறிக்கும் சொற்களைக் கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**சேர்த்தெழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. கண்டு + கொண்டேன் = | | 7. கொய்து + தின்றாள் = | |
| 2. அறிந்து + கொண்டேன் = | | 8. விரைந்து + சென்றனர் = | |
| 3. சென்று + பார்த்தேன் = | | 9. கண்டு + பேசினார் = | |
| 4. செய்து + கொடுத்தார் = | | 10. வாழ்ந்து + காட்டினார் = | |
| 5. புரிந்து + கொண்டனர் = | | 11. உருண்டு + சென்றது = | |
| 6. கொன்று + குவித்தான் = | | 12. வென்று + திரும்பினார் = | |

5.5.3 ன்று, ந்து, ண்டு, ய்து என்று முடியும் வினையெச்சத்தின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 3

**சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. பாய்ந்து சென்றது
2. கண்டு கொள்ளவில்லை
3. வாழ்ந்து காட்டினார்
4. செய்து கொடுத்தார்
5. கொய்து தின்றனர்
6. கொண்டு சென்றான்
7. தின்று தீர்த்தான்
8. மென்று தின்றாள்


## வளப்படுத்துதல்

**'-ன்று, -ந்து, -ண்டு, -ய்து' என்று முடியும் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் எழுதிப் பட்டியலிடுக.**

## குறைநீக்கல்

**அ. சரியான ன்று, ந்து, ண்டு, ய்து என்று முடியும் சொற்களை வாக்கியத்தில் எழுதுக.**

1. வைதேகி ________ பள்ளிக்கு வரவில்லை.
2. அம்மா சீனிப் பலகாரம் ________ கொடுத்தார்.
3. தாத்தா குறுக்குப் பாதையில் ________ சென்றார்.
4. தேயிலைச் செடிகளில் உள்ள இலைகளைப் பணியாட்கள் ________ கொடுத்தனர்.
5. சிறுவன் தின்பண்டங்களைத் ________ தீர்த்தான்.
6. 'உணவை நன்றாக ________ சாப்பிட வேண்டும்' என அம்மா கூறினார்.
7. ஆசிரியர் அழைத்ததால் மாணவர்கள் ________ சென்றனர்.



# தொகுதி 21 சீர்மிகு சிந்தனை

## பாடம் அற்புதக் கருவி

கலந்துரையாடி கூறுக.



இடுபணி 1

**திறன்பேசியின் பயன்பாடு தொடர்பாக எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.**

1.2.3 சூழலையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.

## இடுபணி 2

கீழ்க்காணும் சூழலையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.



## இடுபணி 2

கீழ்க்காணும் சூழலினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக உமது எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.



## பாடம் 2 கணினி விளையாட்டு

### வாசித்து அறிக.



இன்றைய இளையோரிடம் கணினி விளையாட்டுகள் பெரும் அளவில் ஆதிக்கம் செய்துள்ளன. பல வகையான கணினி விளையாட்டுகள் இளையோரை ஈர்க்கவே செய்கின்றன.

கணினி விளையாட்டுகள் இவர்களுக்கு முதன்மை மகிழியாகவே திகழ்கின்றன என்றும் கூறலாம். இவ்விளையாட்டுகள் இளையோரின் சிந்திக்கும் ஆற்றலை வளப்படுத்துகின்றன. கணிதச் சிக்கல்கள், அறிவியல் புதிர்கள் போன்றவற்றில் நுணுக்கமான முறையில் விடைகளைக் காண்கின்றனர். இதன் மூலம் தங்களின் சிந்திக்கும் திறனையும் மேம்படுத்த முடிகின்றது.

பல அலுவலகங்களில் வேலை பார்க்கும் இளைஞர்கள் தங்களின் ஓயாத பணிச்சுமைக்கு ஆளாகின்றனர். இதனால் மன அழுத்தம், மனச் சோர்வு போன்ற எதிர்மறை தாக்கங்களுக்கும் இலக்காகின்றனர். இவர்களுக்குப் புத்துயிர் ஊட்டும் வண்ணம் கணினி விளையாட்டுகள் அமைகின்றன. அவர்களின் மன உளைச்சலுக்கு மருந்தாகவும் அமைகின்றன.

உள்ளத்தளவில் பல நன்மைகளை இவ்விளையாட்டுகள் தந்தாலும் உடல் அளவில் சில தீமைகள் ஏற்படவே செய்கின்றன. ஒரே இடத்தில் இருந்து கொண்டு இத்தகைய கணினி விளையாட்டுகள் விளையாடுவதன் மூலம் இளையோரின் உடல் எடை அதிகரிக்கின்றது. இதனால், உடல் பருமன், சர்க்கரை வியாதி போன்ற நோய்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. எனவே, இளையோர்கள் அனைவரும் கணினி விளையாட்டுகளின் நன்மை தீமை அறிந்து அளவோடு பயன்படுத்துவதே சிறந்த செயலாகும்.

என்னை நுணுகுக

### இடுபணி 1

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

2.1.1 வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

இடுபணி 2

**வாசிப்புப் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



அறிவியல் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகளுள் நான் புதுமையானவன். கைக்கு அடக்கமாக இருப்பதால் என்னை அனைவரும் விரும்பிப் பயன்படுத்துகின்றனர். என்னை நினைத்த நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இணையத்தில் பல பகுதிகளில் ஊடுருவித் தகவல்களைப் பெறலாம். மனமகிழ் விளையாட்டுகளை விளையாடவும் செய்யலாம். என்னைத் தவற விடாதீர்கள்!



என்னை அறியாதவர்கள் இருப்பார்களா? என்னுடைய விலை சற்று அதிகமாக இருந்தாலும் எனது பயன்பாடு பரந்து, விரிந்து இருக்கிறது. என்னால் உலக நாடுகள் பயனடைகின்றன. மின்னஞ்சல், வலையொளி, பயன்பாட்டின் வழி பல தகவல்களை அறிந்து பரிமாறுகின்றனர். மேலும், முகநூல்களின்வழி பல உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சமூக இணைப்புக்கான ஊடகமாக விளங்குவதை எண்ணி நான் பெருமை கொள்கிறேன்.




ஒவ்வொரு வீட்டிலும் நான் இருப்பேன். நல்லதொரு பொழுதுபோக்குச் சாதனமாக நான் பயன்படுகிறேன். மன அமைதிக்கும் மன அழுத்தத்திலிருந்து விடுபடவும் நான் துணை புரிகின்றேன். என்னுடைய திரை பெரியதாக இருப்பதால் படங்களைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை என்னைப் பயன்படுத்தி அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர். என்னை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

என்னை நுணுகுக



# பாடம் 3 பறக்கும் தட்டு


## கற்பனைக் கட்டுரை எழுதுக.




**இடுபணி 1**

**‘எனக்கு ஒரு பறக்கும் தட்டு கிடைத்தால்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

3.4.4 130 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.



## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள சட்டகத்தின் துணையுடன் ‘நான் ஒரு விஞ்ஞானியானால்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

நான் ஒரு விஞ்ஞானியானால்

- அப்துல் கலாம், சர் சி.வி. இராமன், கல்பனா சாவ்லா - புகழ்பெற்ற விஞ்ஞானிகள்
- புதிய கண்டுபிடிப்புகள் - துணைக் கோள் - இயந்திர மனிதன்
- மாற்றுத் திறனாளிகளுக்கான உபயோகப் பொருள்களைத் தயாரித்தல் - எளிமையானவை
- விவசாயிகளுக்கு ஏதுவான கருவிகளைக் கண்டுபிடிப்பேன்.
- நோய்களுக்கான மருந்தைக் கண்டுபிடிப்பேன் - புற்றுநோய்





### வளப்படுத்துதல்

**‘எனக்கு வேற்றுக் கிரகத்திற்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தால்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

### குறைநீக்கல்

**‘நான் ஒரு கட்டொழுங்கு ஆசிரியரானால்’ எனும் தலைப்பில் 130 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளை அறிக.



எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். நலமிகு வாழ்வுக்கு அன்புதான் பிரதானம். நாம் பிறருடன் பழகும்பொழுது முகமும் மனமும் மலரும்படி பழக வேண்டும். நட்புச் செய்ய வேண்டும். நல்ல நட்புக்கு இலக்கணம் உள்ளன்போடு நட்புக் கொள்வதே என்பதை,

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு. (786)**

எனும் திருக்குறளின்வழி திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

### திருக்குறளும் பொருளும்

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு. (குறள் 786)**

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

**கருத்து :**
உள்ளன்போடு நட்புச் செய்வதே நல்ல நட்பாகும்.

### இடுபணி 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**சொற்களுக்கான பொருளை எழுது.**

முகம்நக → ______

நட்பது → ______

நட்பன்று → ______

நெஞ்சத்து → ______

அகம்நக → ______

4.1.1 புகுமுக வகுப்பிற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# தொகுதி 22 நாடும் நன்மக்களும்

## பாடம் 1 தேசப்பற்று

கலந்துரையாடி கூறுக.



இராணுவ வீரர் அணிவகுப்பு

நாட்டுப் பற்றினை வளர்ப்போம்



சுதந்திர தினக் கொண்டாட்டம்










**இடுபணி 1**

**நாட்டின் மக்கள் அனைவரும் நாட்டுப் பற்றினை வளர்க்க வேண்டும் எனும் தலைப்பையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுக.**

**1.2.2** தலைப்பையொட்டி எண்ணங்களையும் கருத்துகளையும் பண்புடன் கூறுவர்.

## இடுபணி 2

**‘பள்ளி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்றுகின்றனர்’ எனும் தலைப்பில் பண்புடன் உரையாடுக.**



## இடுபணி 3


**‘தேசியக் கோட்பாடுகளின் வழி சிறந்த மக்களை உருவாக்க முடியும்’ எனும் தலைப்பில் குழு முறையில் பண்புடன் உரையாடிக் கருத்துகளைச் சேகரித்திடுக.**

- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
- பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

# பாடம் 2 நாமும் முன்னேறுவோம்

**வாசித்து அறிக.**

**பாலிடெக்னிக் பட்டயப் பயிற்சியில் இந்திய மாணவர்களின் பதிவு**




2012
2013
2014
2015
2016
2017

மூலம்: மலேசியக் கல்வி அமைச்சு


2.2.2 குறிவரைவிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்வர்.

### இடுபணி 1

**கொடுக்கப்பட்டுள்ள வட்டக் குறிவரைவிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்ந்திடுக.**

### இடுபணி 2

**பட்டைக் குறிவரைவிலுள்ள தகவல்களை அடையாளங்கண்டு பகுத்தாய்ந்திடுக.**




**மூலம்: சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்**

பாடம் 3

# எதிர்பார்ப்பு

## நிரல்படுத்தி எழுதுக.



- எதிர்பார்ப்பு இல்லாமல் இருக்கும் பட்சத்தில் கவலையும் ஏமாற்றமும் இருக்காது என்பதை வேடன் உணர்ந்து கொண்டான்.
- முனிவர் அதனைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து நடந்தார்.
- அவ்வேடன் மகிழ்ச்சியாக இருப்பதை உணர்ந்தார்.
- ஒரு நாள் முனிவர் ஒருவர் காட்டுவழியே சென்று கொண்டிருந்தார்.
- முதன்முதலில் பார்த்த வேடனும் அவ்விடம் வந்து சேர்ந்தான்.
- அவ்வேளையில் வேடன் ஒருவன் மரங்களில் வட்டமிடப்பட்ட பகுதிகளில் அம்புகளை எய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தான்.
- “நீ யாரிடம் வில் வித்தை கற்றாய்? இவ்வளவு சாதுரியமாக அம்பை எய்திருக்கிறாயே,” என்று கேட்டான்.
- தொலைவில் மற்றொரு வேடன் தான் எய்திருந்த அம்புகள் அனைத்தும் வட்டமிடப்பட்ட பகுதியில் பாய்ந்திருந்தன.
- “நான் யாரிடமும் வில்வித்தையைக் கற்கவில்லை. முதலில் அம்பை எய்துவிட்டு பிறகுதான் வட்டம் போட்டேன்,” என்றான்.
- அவன் வட்டமிட்டுள்ள பகுதியில் அம்புகள் பாயவில்லை.

இடுபணி 1

**கதையில் வரும் வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**

3.2.1 வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 2

**பள்ளி சபைகூடலில் நடைபெறும் நடவடிக்கைகளை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**

- மாணவர் ஒழுங்கு நடவடிக்கை பொறுப்பாசிரியர் ஒழுக்கம் தொடர்பான தகவல்களைக் கூறினார்.
- சபைகூடலில் மாணவர்கள் அணிவகுத்து நின்றனர்.
- பள்ளி முதல்வர் தலைமையுரை ஆற்றினார்.
- நன்றியுரையுடன் அன்றைய சபைகூடல் நிறைவு பெற்றது.
- பொறுப்பாசிரியர் வரவேற்புரை நிகழ்த்தி அனைவரையும் வரவேற்றார்.



- தொடர்ந்து மாணவர்கள் அணிவகுத்துத் தத்தம் வகுப்பிற்குச் சென்றனர்.
- தேசிய கீதம், மாநில கீதம், பள்ளிப்பாடல் இசைக்கப்பட்டன.
- நிறைவுக்கு முன்னதாகப் பொறுப்பாசிரியர் சில முக்கிய அறிவிப்புகளைத் தெரிவித்தார்.

## இடுபணி 3

**முயலும் ஆமையும் எனும் கதை தொடர்பான வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**

ஆமை பொறுமையாக முயலைக் கடந்தது.

முயல் ஆமையின் நடையைக் கேலி செய்தது.

முயல் அவமானத்தால் தலை குனிந்தது.

முயல் மரத்தடியில் அயர்ந்து தூங்கியது.

ஆமையைப் போட்டிக்கு அழைத்தது முயல்.

ஆமையும் முயலும் காட்டில் வாழ்ந்து வந்தன.

ஆமை வெற்றி பெற்றது.

முயல் வேகமாக ஓடும் தன்மையுடையது.

இருவருக்கும் போட்டி தொடங்கியது.

முயல் வேகமாக ஓடிச்சென்று மரத்தடியில் உறங்கியது.

ஆமை மெதுவாக நடக்கும் இயல்புடையது



## பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

### பல்வகைச் செய்யுளை அறிக.



சிறந்த அழகும் மணமும் நிறைந்த பாதிரிப்பூ வைத்திருக்கும் புதிய மட்பாண்டத்தில் உள்ள தண்ணீருக்கும் அதன் மணம் கிடைக்கும்.



கல்வியறிவு இல்லாதவர்கள் என்றாலும் படித்தறிந்த பெரியோர்களுடன் சேர்ந்து பழகினால், அவர்களுக்கும் அப்பெரியோரின் சேர்க்கையால் நல்லறிவு வாய்க்கப் பெறும்.


### நாலடியாரும் பொருளும்

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.**


படிப்பில்லாதவர்கள் என்றாலும் படித்தறிந்த பெரியோர்களுடன் சேர்ந்து பழகினால், அவர்களுக்கும் அப்பெரியோர் சேர்க்கையால் கொஞ்சம் கொஞ்சமாக நல்லறிவு வாய்க்கப் பெறும். எப்படி என்றால், சிறந்த அழகும் மணமும் நிறைந்த பாதிரிப்பூ வைத்திருந்த புதிய மண் பாண்டத்தில் உள்ள தண்ணீருக்கும் அதன் மணம் கிடைப்பது போல.

4.2.1 புகுமுக வகுப்பிற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.





அழகான தோகையை விரித்து ஆடும் வண்ணமயிலைப் பார்த்து வான்கோழியானது அதன் சிறகை விரித்து மயில் என்பதாக நினைத்து ஆடுகிறது.





தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்றவனைப் போல பாசாங்கு செய்தல்.

### மூதுரையும் பொருளும்

**கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி.**

தகுந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்றவனைப் போல் பாசாங்கு செய்வது எப்படி இருக்கிறது என்றால், அழகான தோகையை விரித்து ஆடும் வண்ணமயிலைப் பார்த்து, வான்கோழியானது அதன் சிறகை விரித்து, மயில் என்பதாக நினைத்து ஆடுவதைப் போலாகும். கல்லாதவன் கற்றவனைப்போல் நடிக்கலாம். நடித்தாலும் அது சிறப்பைத் தராது. கல்வியின்மை வெளிப்பட்டுவிடும்.

## இடுபணி 1

**செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**செய்யுளை நிறைவு செய்க.**

1. கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்

2.

கல்லாதான் கற்ற கவி.

## இடுபணி 3

**செய்யுள் உணர்த்தும் நீதியை விளக்குக.**

கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

**வாசித்து அறிக.**

## கடவுள் சாப்பிட்ட வாழைப்பழம்



ஓர் ஊரில் பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். கடவுள் பக்தி உள்ளவர். எதைச் செய்தாலும், கடவுளுக்கு என அனுப்புவார். அவருக்குப் பெரிய வாழைத்தோப்பு ஒன்று இருந்தது. அதில் விளைந்த முதல் வாழைத் தாரைக் கடவுளுக்கு அனுப்ப நினைத்தார்.

நன்றாகப் பழுத்த ஒரு வாழைத்தாரை வெட்டி கூலி ஆளிடம் கொடுத்து, “கொண்டு போய் கோவிலில் கொடுத்து விட்டு வா,”என்றார். அந்த வேலைக்காரன் நடுவழியில் பழத்தைச் சாப்பிட்டு விடுவானோ என்று பயந்தார். உடனே வாழைப்பழத்தை எண்ணிப்பார்த்தார். “இதில் நூறு பழங்கள் இருக்கின்றன. அப்படியே கொடுத்து விட்டு வா”என்று கண்டித்துச் சொன்னார்.

கோவில் வெகு தூரம் இருந்ததால் வேலைக்காரன் நடந்து களைப்புற்றான். பசி வயிற்றைக் கிள்ளியது. ஒரு மரத்தடியில் அமர்ந்தான். பசி தாளாமல் நான்கு வாழைப்பழங்களை உறித்து உண்டான். பிறகு தொடர்ந்து நடந்து வாழைத்தாரைக் கோவிலில் ஒப்படைத்தான்.

இரவு முழுதும் பணக்காரருக்குப் பெரும் கவலை. தான் கொடுத்தனுப்பிய வாழைத் தார் முழுமையாகக் கடவுளுக்குப் போய்ச் சேர்ந்திருக்குமோ என நினைத்துக் குழம்பிப் போனார். இறுதியில் சற்று கண் அயர்ந்தார். கனவு வந்தது. அக்கனவில் “பக்தனே! நீ அனுப்பிய நூறு பழங்களில் நான்கு பழங்கள் என்னிடம் உடனே வந்து சேர்ந்தன,” எனக் கடவுள் கூறி மறைந்தார்.

பணக்காரர் சட்டென விழித்து எதையோ யோசித்தார். பிறர் மீது நாம் காட்டும் அன்பிலும் பரிவிலும் கடவுள் இருக்கின்றார் என்பதை அவர் உணர்ந்துவிட்டார் போலும்.

# அகர நிரல் குறிப்பு


**அ**
அழகு - 3
அரசியல் - 18
அரங்கில் - 18

**ஆ**
ஆடுவதால் - 1
ஆற்றல் - 3
ஆசிரியர் - 86

**இ**
இசைக்கலை - 3
இயற்கை - 25
இளைஞர்கள் - 55

**ஈ**
ஈடுபட்டு - 55
ஈன்றவள் - 72

**உ**
உருவாக - 111
உணர - 160
உறைவிடம் - 169

**ஊ**
ஊடகவியலாளர் - 106
ஊதப்பட்ட - 131

**எ**
எண்ணம் - 75
எதிர்பார்ப்பு - 207

**ஐ**
ஐம்பெருங்காப்பியம் - 18
ஐந்தாங்கல் - 173

**ஒ**
ஒளி - 88

**ஓ**
ஓடம் - 121

**க**
கண்டு - 3
கடைப்பிடித்து - 182
கலை - 189

**கா**
காவியக்கலை - 3
காயும் - 187

**கு**
குறிப்பிடத்தக்கது - 106
குடியிருந்த - 121

**கூ**
கூட்டைப்போல - 23
கூட்டுப்பணி - 182

**கொ**
கொள்கை - 63

**ச**
சரிசமமாக - 64
சட்டதிட்டங்கள் - 66

**சா**
சாதனை - 80
சான்றிதழ் - 141

**சி**
சிந்தனை - 73
சிறுவர்கள் - 81

**சூ**
சூழல் - 46

**செ**
செழிப்பாக - 13
செத்தை - 22

**த**
தவறு - 24
தகாத - 55

**தி**
தியானம் - 42
திருவள்ளுவர் - 69

**து**
துன்பத்திலும் - 75
துணை - 80

**ந**
நவீன - 151

**நா**
நாடு - 98
நாடிவந்தோர் - 169

**நி**
நிலவரம் - 113
நிலைநிறுத்தி - 182

**நெ**
நெல்லிக்கனி - 43
நெருப்பில் - 88

**ப**
பண்பாடு - 188
பனை - 189

**பா**
பாதுகாப்பானது - 153
பாரம்பரியம் - 166

**பு**
புலனம் - 141

**ம**
மறைக்காணி - 53
மட்பாண்டம் - 122
மனிதம் - 157

**மு**
முதன்மை - 126
முகவரி - 141
முக ஒப்பனை - 143

**மூ**
மூலம் - 134

**மே**
மேன்மைக்கோ - 103
மேலை நாட்டவர் - 123

**வ**
வழங்கினர் - 95
வலையொளி -198

**வா**
வாழ்த்துகள் - 80

**வி**
விரதம் - 162
விநோத சாதனம் - 195

**வீ**
வீணை மீட்டுதல் - 46

# துணை நூல் பட்டியல்


சீனி நைனா முகமது, செ. (2009). உங்கள் குரல். பினாங்கு.

பரமசிவம், கோ. (2017). துங்கீசம். கிள்ளான்.

கணபதி, வி. (1993). நற்றமிழ் கற்பிக்கும் முறைகள். சாந்தா பதிப்பகம்.

வரதராசன், மு. (1994). திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். பாரி நிலையம்.

ஜெயமணி, கி. (2018). உயர்ஞான தீபம். ஈரோடு.

தட்சணாமூர்த்தி, அ. (1994). தமிழர் நாகரிகமும் பண்பாடும். ஐந்திணைப் பதிப்பகம்.

சந்திரன், வீ. (2014). நல்வழிப் பாதை. சிவகாசி.

சிவம், சு.கி. (2001). நல்ல வண்ணம் வாழலாம். கற்பகம் புத்தகாலயம்.